
# நவாலியூரானின் சிறுகதைகள்



பதிப்பாசிரியர்: வி.பி. தனேந்திரா

# நவாலியூரானின்
## (நவாலியூர் நா.செல்லத்துரை)
# சிறுகதைகள்

**யாழ். ராதவல்லி வெளியீடு**
யாழ்ப்பாணம்
2010

நூலின் பெயர் : நவாலியூரானின் சிறுகதைகள்
ஆசிரியர் : நவாலியூர் நா.செல்லத்துரை
இல.138, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம்.
பக்கங்கள் : XIV+90 = 104
முதற் பதிப்பு : வைகாசி 2010
பதிப்புரிமை : ஆசிரியர்
பதிப்பாசிரியர் : வி.பி.தனேந்திரா
வெளியீடு : யாழ். ராதவல்லி வெளியீடு
இல. 227, சென்.பெனடிக்ற் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
அட்டை வடிவமைப்பு : மதி கலர்ஸ் பிறின்டேர்ஸ்
அச்சுப்பதிப்பு : 'சுரபி' பதிப்பகம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
விலை : 200/=

Name of Book : Navaliyuranin Siru Kathaikal
Author : Navaliyur N.Selladurai
138, Aathisoodi Veethy,
Kandarmadam West, Jaffna.
Page's : XIV+ 90 = 104
First Edition : May 2010
Copy Right : Author
Publishing Editor : V.P.Thanendra
Published by : Yarl. Rathavalli Publication
No.227, St.Benedict's Road,
Ariyalai West, Jaffna.
Cover Design : Mathi Colours Printers
Print by : 'Suraby' Pathippakam
Navalar Road, Jaffna.
Price : 200/=

2009.01.31ஆம் நாளன்று
மறைந்த நன்கொடையாளர்
ஆறுமுகம் நவநீதக்கிருஷ்ணன்
அவர்களுக்கும்

2009.12.05ஆம் நாளன்று மறைந்த
கர்நாடக இசைமேதை
லயனல் திலகநாயகம் போல்
அவர்களுக்கும்

இந்நூல் சமர்ப்பணம்

# உள்ளே...

நயப்புரை

பதிப்புரை

என்னுரை

நன்றி மறக்கா ஒருவன் – 01

யாழ் நங்கை – 11

றெஜினாவின் கருணை உள்ளம் – 18

பட்டமளிப்பு நாள் அன்று – 23

எவர் தேடியுமென்ன – 29

நன்றி மறந்த சமுதாயமே – 38

நினைவுச் சின்னம் – 43

இந்தக் கொடி – 49

காத்திருந்தாள் சுதேகி – 54

சிரித்துக்கொண்டிருக்கிறது – 61

தெய்வப் பிறவிகள் – 67

இதுதான் மனிதம் –73

புதிய பாதை– 80

என்ரை பிள்ளை நல்லவன் –84

# நவாலியூரானின் நூல்கள்

**முகைவெடித்த மொட்டு** (நாவல்)
முதற் பதிப்பு: 28.12.1967
வெண்ணிலா வெளியீடு
விலை: 2.50
பக்கம்: VIII+ 176

**உலகம் எங்கள் கைகளிலே**
(ஆறு ஓரங்க நாடகங்கள்)
முதற் பதிப்பு: 01.02.1978
அகில இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் பேரவை வெளியீடு
விலை: 6.00

**சின்னவனா பெரியவனா**
(சிந்து நடைக்கூத்து)
முதற் பதிப்பு: 1999
வெண்ணிலா வெளியீடு
விலை: 100
பக்கம்: 88

**சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன்**
(கற்பனை கலந்த இலக்கிய நாடகம்)
முதற் பதிப்பு: 2008
மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
விலை: 40 (இந்திய விலை)
பக்கம்: XX + 116

---

# நவாலியூரான் பற்றிய நூல்கள்

**நவாலியூரான் பவளவிழா** (மலர்)
தொகுப்பு: க.கமலசேகரம்
முதற் பதிப்பு: 06.01.2004
வாழும் கலைஞர்களைக் கௌரவிக்கும் அமைப்பு
பக்கம்: 60

**நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள** (ஆய்வு)
ஆசிரியர்: வி.பி.தனேந்திரா
முதற் பதிப்பு: ஆனி, 2008
யாழ். ராதவல்லி வெளியீடு
பக்கம்: VI + 122
விலை: 200

## நவாலியூரானுக்குக் கிடைத்த விருதுகள்

- 'கலாபூஷணம்' (1998) இலங்கைக் கலாச்சார அலுவல்கள் அமைச்சு வழங்கியது.
- 'முதுகலைஞர்' (2004) இலங்கைக் கலைக்கழகத்தின் தேசிய நாடக சபை வழங்கியது.
- 'கலைப்பேரரசு விருது' (2005) கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நினைவு விருது சபை வழங்கியது.
- 'ஆளுநர் விருது' (2009) கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வட மாகாணம் வழங்கியது.

---

## நவாலியூரானுக்குக் கிடைத்த பட்டங்கள்

- 'புதுமை நடிகன்'(1952) வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வழங்கியது.
- 'கலைமதி' (1980) கலையரசு சொர்ணலிங்கம் வழங்கியது.
- 'சர்வகலா வல்லவன்' (1983) கண்டி /கலாரசிகர் மன்றம் வழங்கியது.
- 'நடிப்பிசைத் திலகம்' (1987) கந்தர்மடம் புலவர் சிந்தனைச் சிற்பி செ.து.தெட்சணாமூர்த்தி வழங்கியது.
- 'நாடகக் குரிசில்' (1989) யாழ் /பெரியபுலம் மகா வித்தியாலயம் வழங்கியது.
- 'தமிழ் நாடகக் கலைத்திலகம்' (1991) யாழ் /ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையம் வழங்கியது.
- 'கலைஞானச்சுடர்' (2002) நல்லூர்ப் பிரதேசச் செயலகக் கலாசாரப் பேரவை வழங்கியது.
- 'கலைமாணிக்கம்' (2002) கண்டிமத்திய மாகாண சபைத் தமிழ் சாஹித்திய விழாக் குழு.
- 'கலைத்தென்றல்' (2003) மானிப்பாய் ஸ்ரீமுருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள் வழங்கியது.

# நயப்புரை

மனித மனத்தை, அந்த மனத்திலிருந்து ஊற்றெடுக்கும் உணர்ச்சிகளைச் சீராக்கிச் செம்மைப்படுத்தும் சிறப்பாற்றல் கலை இலக்கியத்துக்கு உண்டு என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கலை இலக்கியப் பணிகளிற் கர்ம சிரத்தையுடன் ஈடுபட்டு வருபவர் முது பெரும் கலைஞரும் எழுத்தாளருமான நவாலியூர் நா. செல்லத்துரை (நவாலியூரான்).

அவருடைய முதலாவது சிறுகதைத் தொகுதி 'நவாலியூரானின் சிறுகதைகள்' ஆக வெளிவருகின்றது.

1951ஆம் ஆண்டிலே நாடக நடிகனாகக் கலை உலகிலே காலடி பதிக்கத் தொடங்கியவர் நவாலியூர் நா.செல்லத்துரை. இலக்கியம், வரலாறு, புராணம், சமூகம் சார்ந்த எழுபத்தைந்து நாடகங்களை எழுதியும் நெறியாள்கை செய்தும் பெரும்பாலானவற்றிலே பிரதான பாத்திரமாக நடித்தும் பெரும் புகழ் ஈட்டியுள்ளார். 'உலகம் எங்கள் கைகளிலே', 'சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன்' ஆகிய நாடகங்களும் 'சின்னவனா பெரியவனா' என்ற சிந்து நடைக் கூத்தும் இதுவரை நூலுருப் பெற்றுள்ளன. 'முகை வெடித்தமொட்டு' என்ற இவருடைய நாவல் 1968ஆம் ஆண்டிலே இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்றது.

கலாபூஷணம், முதுகலைஞர், கலைப் பேரரசு விருது, இலங்கை வடமாகாண ஆளுநர் விருது ஆகிய விருதுகளுடன் புதுமை நடிகன், கலைமதி, சர்வகலா வல்லவன், நடிப்பிசைத் திலகம், கலைஞானச் சுடர், நாடகக்குரிசில், தமிழ்க் கலைத் திலகம், கலைத்தென்றல், கலை மாணிக்கம் போன்ற பட்டங்களும் இந்த நாட்டிலுள்ள அரசு சார்ந்த - அரசு சார்பற்ற பல்வேறு கலை இலக்கிய அமைப்புக்களால் இவருக்கு வழங்கப்பட்டமை இவருடைய கலைப் பணிகளுக்கும் பன்முக ஆற்றல்களுக்கும் கிடைத்த அங்கீகாரமாகும்.

இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளுள் றெஜினாவின் கருணையுள்ளம், புதிய பாதை, யாழ் நங்கை, இதுதான் மனிதம், நன்றி மறந்த சமுதாயமே, இந்தக்கொடி, காத்திருந்தாள் சுதேகி ஆகிய கதைகள் ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளியாகிப் பாராட்டைப் பெற்றவை; ஏனையவை பிரசுரமாகாதவைகள்.

பெரும்பாலான கதைகள் நமக்கு நன்கு பரிச்சயமான யாழ்ப்பாணச் சூழலில், நாம் அடிக்கடி சந்திக்கின்ற சாதாரண மக்களைக் கதை மாந்தர்களாகக் கொண்டவை. இங்குள்ள ஏழைகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரச பணியாளர்கள் போன்றவர்களுடன் நன்கு ஊடாடி அவர்களிடம் காணப்படு

கின்ற அன்பு, இரக்கம், ஒற்றுமை, உதவி செய்யும் போக்கு போன்ற நல்ல குணங்களையும் கோபம், வெறுப்பு, நன்றி மறத்தல் போன்ற குறைகளையும் அவற்றைப் பிரதிபலிக்கும் பேச்சு, நடத்தை முதலியவற்றையும் நன்கு அவதானித்து, ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட இலக்கியக் கொள்கைக்கு இசைவாகப் பாத்திரங்களை வார்த்து இந்தக் கதைகளை ஆக்கியுள்ளார் ஆசிரியர்.

நத்தார்ப் பண்டிகைக்காகத் தாயற்ற தன் செல்வச் சிறுமிக்குப் புதிய சட்டை ஒன்றை வாங்கிக் கொடுக்க முடியாமல், தன் ஏழ்மையை நினைத்துக் கண்ணீர் வடிக்கும் மாணிக்கத்தைப் பார்த்து "அப்பா, விருந்து வைச்சு ஆரவாரம் செய்வதாலோ, இல்லையெண்டால் ஒரு சிலர் செய்வது போல குடிச்சு வெறிச்சு ஆடிப் பாடுவதாலோ கிறிஸ்மஸ் கொண்டாடியிட்டம், கிறிஸ்துவை மகிமைப்படுத்திவிட்டம் என்று நினைக்கிறது பிழை அப்பா... கிறிஸ்துவை நாங்கள் மகிமைப்படுத்த வேண்டும் என்றால், அந்தக் கிறிஸ்து சொன்ன வழியைப் பின்பற்றி நடப்பது தானப்பா முறை. புதுச் சட்டை போடேல்லை, விருந்து வைக்கேல்லை எண்டு கவலைப்பட வேண்டியதில்லை..." என்று சொல்வதுடன் நில்லாமல், முன்னர் வாங்கி இன்னமும் புதிதாகவே தன்னிடமிருக்கும் சட்டையொன்றை மேரி என்ற வேறொரு ஏழைச் சிறுமிக்கு வழங்க முன்வரும் றெஜினா -

சண்டித்தனத்தாலும் அட்டூழியங்களாலும் ஊர் மக்களைக் கிடுகிடுக்க வைத்து அவர்களின் கோபத்துக்கும் வெறுப்புக்கும் ஆளான தேவன், விபத்தொன்றில் அகப்பட்டு அளவுக்கு மீறிய இரத்தப் பெருக்கினால் அறிவிழந்து கிடக்க, அவன் செய்த அக்கிரமங்களுக்காகக் கடவுள் கொடுத்த தண்டனை எனக் கருதி அவனைக் காப்பாற்றுவதற்காக ஊர் மக்கள் யாருமே முன்வராத நிலையில், தேவனின் முரட்டுப்போக்கே அந்த விபத்துக்குரிய காரணம் என்பதை நன்கு தெரிந்திருந்தும், தன் காரில் அவனைத் தூக்கி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று, தன்னுடைய இரத்தத்தைக் கொடுத்து அவனைக் காப்பாற்றி, அந்தச் செயல் மூலம் தேவனை நல்லவனாகவும் மாற்றிய திவ்வியன் -

"உன்னட்டைப் பணம் வாங்கி உனக்குத் தாலியும் கொடியும் செய்யிறதையோ, கூறை வாங்கிறதையோ, உழைக்கிற ஆண் மகன் என்ற முறையிலை நான் விரும்பேல்லை. என்ரை கழுத்திலை இருக்கிற ஏழு பவுண் சங்கிலி அண்டைக்கு உன்ரை கழுத்திலை தாலிக்கொடியாயிருக்கும். உன்ரை நிறத்துக்குப் பொருத்தமான பட்டுச்சேலைதான் உன்ரை கூறை. என்ரை இரத்த உறவுகள் உன்ரை இரத்த உறவுகள், அதுகளோடை மட்டுந்தான் எங்கடை கலியாணம்" எனக் கூறும் மெக்கானிக் சுதன் -

உள்நாட்டுப் போருக்கு அஞ்சி, உயிர் தப்பும் நோக்கத்தில் இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்த வேளையில், அமைதிப் படையினரின் சூட்டுக்கு இலக்காகிக் காலை இழந்த அந்தச் சுதன் உட்பட, தாய் தந்தையர், மாமன் மாமி என எத்தனையோ பேர் எடுத்துச் சொல்லியும் சிறிதும் தடுமாறாமல் அதே சுதனையே தன் கணவனாக்கிக் களிப்புடன் வாழும் சுதேகி -

கண்ணுக்குக் கண்ணாய், கண்ணின் மணியாய் வளர்த்த தன் பிஞ்சுக் குழந்தையை, மகா இடப்பெயர்வின்போது, வெள்ளம் நிறைந்த பள்ளமொன்

றில் அநியாயமாகப் பறிகொடுத்ததால் வாழ்க்கையில் வெறுப்பும் விரக்தியு மடைந்து, விசரனைப் போல் புலம்பிக் கொண்டு திரியும் செந்திலை மீண்டும் முன்னைய நல்ல நிலைக்குக் கொண்டுவரக்கூடிய ஒரே வழி, நீண்ட காலம் தாய்மைப்பேறு அடையாமல், இப்போது அந்தத் தவப்பேற்றினை அடைந்தி ருக்கும் தான், தனக்குப் பிறக்கும் குழந்தையைச் செந்திலுக்குக் கொடுப்பதே என்பதில் உறுதியாயிருந்து, பிறக்கப்போகும் குழந்தை பெண் குழந்தையா கவே இருக்க வேண்டும் என இறைவனை எந்த நேரமும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் செல்வராணி - அவளுக்கு அனுசரணையாயிருக்கும் அவளு டைய கணவன் கந்தசாமி -

சிறிதும் எதிர்பாராத இடத்திலே, தங்கள் காரில் மோதுண்டு வீதியிற் கிடந்தவளுக்கு உடனடிச் சிகிச்சை செய்வித்தும் அவள் மனநோயாளி என் பதை அறிந்து அதற்கேற்ற சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தும், அவள் குணம டைந்த பின்னர், அவளுக்கு ஆதரவளிப்போர் யாருமில்லை என்பது தெரிந்த தும், தங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக அவளை வாழவைக்க முடிவும் செய்யும் சத்தியகலா நித்தியறாஜன் தம்பதிகள் -

அந்த ஊர் மக்களுக்காக இராப் பகலாக உதவி செய்த வண்டில்க்காரச் சின்னராசாவை, "லான்ட் மாஸ்டர்"க் கவர்ச்சி காரணமாக, அந்த மக்கள் புறக் கணித்தபோதிலும் அவனுடைய நேர்மையான, விஸ்வாசமான உழைப்பை நன்கு உணர்ந்து அவனுக்கு என்றும் ஆதரவாக இருக்கும் தர்மதாஸ் -

நல்ல, நேர்மையான நண்பன் எனத் தான் நம்பியவன், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதைப்போல், மாபெருந் துரோகம் ஒன்றைச் செய்தபோதி லும், அதற்காக அந்த நண்பனுடைய சகோதரியையும் தாயையும் பழிவாங்கா மல், அவனிடம் அவர்கள் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தையும் அந்த நண்ப னின் பெயரால் தானே செய்து கொடுக்கும் சுகந்தன் -

போன்ற பாத்திரங்கள் ஆசிரியருடைய எதிர்பார்ப்புக்கள், எண்ணங்கள், இலட்சியங்களின் உருவங்களாகவே தெரிகின்றன.

சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் நேரடியாகவே தெரிவிக்கும் கருத்துக்க ளும் முக்கியமானவை.

நித்தியறாஜிற்கு நண்பர்கள் பலர். அத்தனை நண்பர்களும் மிக மிக நல் லவர்கள். நித்தியறாஜ் போல எதுவித குடிவெறிப் பழக்கமோ புகைத்தல் பழக் கமோ இல்லாதவர்கள். குடிவெறியரோடு அவர் நட்புக் கொள்வதில்லை. தப் பித் தவறி அப்படி ஒரு நட்பு ஏற்படவேண்டிய சூழ்நிலையோ சந்தர்ப்பமோ வந்துவிட்டால் அந்தக் குடிவெறியரைத் தனது தர்க்கத் திறமையால், தன்னைப் போல் மாற்றி வைப்பதிலும் அவர் வல்லவர் (இதுதான் மனிதம்).

உடம்பை இறுக்கிப் பிடிக்கின்ற நவநாகரிக உடைகளை அவள் உடுப்ப தில்லை. பாவாடை, சட்டைதான் அவள் கூடுதலாக அணியும் ஆடைகள். பாவாடையும் கணுக்கால் வரை நீண்டிருக்கும். ஒரு சில கொண்டாட்டங் களுக்கு மட்டும் பாவாடை, தாவணி அல்லது சேலை, சட்டை. தமிழ்ப் பண் பாட்டுக்குரிய ஆடைகளை அவள் அணிவதற்குத் தூண்டுதலாக இருந்தவள் சந்திரா .

உணவு கிடைக்கவில்லை என்பதற்காகச் சோர்வுற்றுக் களைத்து முடங்கிக் கிடக்கும் பழக்கம் எறும்புக்கு இல்லை என்பது சுஜேந்தினியின் நுனி விரலிலே செதுக்கப்பட்டிருக்கும் பாடம். முன்னைய நாட்களை விட அவளுடைய சுறுசுறுப்பு இப்போது இரட்டிப்பாகிவிட்டது. தன்னைப் படிப்பித்த ஆசிரிய ஆசிரியைகளிடம் மாலை நேரங்களில்ச் சென்று, தனது பாட விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவாக்க அவள் தவறியதேயில்லை. (இந்தக் கொடி) போன்றவை சிறந்த உதாரணங்கள்.

கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டுப் போர், இந்நாட்டு மக்களை ஏதோ ஒரு வகையிற் பாதித்துள்ளதை மறைக்கவோ மறக்கவோ முடியாது. பாதிக்கப்பட்ட சிலரையும் ஆசிரியர் கதாபாத்திரங்களாக்கியுள்ளார். ஆனால் போரின் அரசியல் விளைவுகளைப் பற்றிக் கருத்துரைக்காமல், சமூகப் பாதிப்புக்கள் சிலவற்றைச் சில கதைகள் மூலம் தெரிவித்திருப்பது முக்கியமானது.

மேலை நாட்டில் காலத்துக்குக் காலம் உருவாகும் இலக்கியத் தத்துவங்களை உள்வாங்கிப் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு பலர் கதைகளை எழுதிவருகின்றனர். அவற்றைப் பற்றிச் சிறிதும் அலட்டிக்கொள்ளாமல், தன்னுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எப்படி வாழவேண்டும் என்பதைக் கண்டிப்புடன் அறிவுறுத்த விரும்பாமல், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்போல் எப்படியான கதைகள் மூலம் சொல்ல வேண்டும் என்று யாழ்ப்பாணத்தைத் தாயகமாகக் கொண்டிருக்கும் ஓர் ஆசிரியர் தெரிவு செய்வாரோ, அப்படியான கதைகளை தனக்கே உரிய ஒரு பிரத்தியேகமான பாணியில் ஆசிரியர் "எழுதவில்லை", "சொல்லியுள்ளார்" என்பதே பொருத்தமாகும். எப்படி வாழவேண்டும் என்பதைப் பல கதைகளும், எப்படி வாழக்கூடாது என்பதை இரண்டொரு கதைகளும் காட்டுகின்றன.

"ஜெனிற்றாவின் பாட்டன் பாட்டி இருவரும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களாக இருந்ததால், அறிவுச் சிறப்பும் ஒழுக்கச் சிறப்புமுடைய ஒருத்தியாக ஜெனிற்றாவை வளர்க்க வேண்டும் என்ற ஆவலையும் தத்தம் உணர்வுகளில்ப் பதித்துக்கொண்டே அவளை வளர்க்கத் தொடங்கினார்கள்" எனப் பட்டமளிப்பு நாளன்று கதையில் ஆசிரியர் கூறியிருப்பதையும், மனிதனுடைய உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தும் சிறப்பாற்றல் கலை இலக்கியங்களுக்கு உண்டு என்ற ஆசிரியரின் நம்பிக்கையையும் நினைவூட்டி அவற்றுக்கு இசைவாக இந்தக் கதைகளை எழுதியுள்ள கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை (நவாலியூரான்) அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**சி.சிவசரவணபவன் (சிற்பி)**
கந்தரோடை,
சுன்னாகம்.
*28.04.2010.*

# பதிப்புரை

நவாலியூரான் கடந்த அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக கலை இலக்கிய உலகில் தனக்கென வரலாற்றுப் பதிவுகள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளார். நிறைந்த கலை ஆளுமை கொண்ட இவருக்குப் பல பட்டங்களும், பல விருதுகளும் கிடைக்கப்பெற்றன. நவாலியூரான் என்றால் ஓர் உன்னத கலைஞன் என்றே யாவரும் அறிவர். ஆனால் இவர் புனைகதை இலக்கியத்துறையிலும் நன்கு பரீட்சையம் கொண்டவர் என்பதை இவரது சிறுகதைகள் சுட்டிக்காட்டும். **1960**கள் முதல் இன்று வரை முப்பதுக்கும் அதிகமான சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். இச்சிறுகதைகளில் அநேகமானவை பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள் ஆகியவற்றில் பிரசுரமானவை.

'றெஜினாவின் கருணை உள்ளம்'(**24.12.1988**), 'புதிய பாதை' (**21.01.1989**), 'இலட்சியத்தை நோக்கி'(**08.04.1989**), 'நன்றி மறந்த சமுதாயமே'(**20.05.1989**), 'தவறான முடிவுகள்'(**20.07.1989**), 'தெய்வம் விடாது' (**30.03.1990**), 'புரட்சி மலர்கள்'(**16.06.1990**) ஆகிய சிறுகதைகள் சஞ்சீவி வாரப் பத்திரிகையில் வெளிவந்தன.

'யாழ் நங்கை'(**18.04.2004**), 'மாற்றம்'(**06.03.2005**), 'காத்திருந்தாள் சுகேதி'(**02.04.2006**) ஆகிய சிறுகதைகள் ஞாயிறு தினக்குரலில் வெளிவந்தன.

'தாயைக் கொன்றவன்'(மார்ச் **1962**), 'குருதி கண்ட கற்சிலை'(டிசம்பர் **1961**), 'இடியும் உறவும்'(ஓகஸ்ட் **1962**), 'கோமத இத்திங் சனிப்ப'(டிசம்பர் **1964**) ஆகிய சிறுகதைகள் மலைமுரசு சஞ்சிகையில் வெளிவந்தன.

'**24**ஆம் திகதி நடுச்சாமம் பன்னிரண்டு மணி'(**19.01.1991**) உதயதாரகை பத்திரிகையிலும்; 'உம்முடைய சிலுவையிலே'(மார்ச் **1989**) வாகைச்சுடர் சஞ்சிகையிலும்; 'இன்று தொடக்கம் சசிகலா...'(**24.04. 1983**) ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலைய வெள்ளிவிழா மலரிலும்; 'பணிதொடர்கிறது'(**1998**) கந்தர்மட ஜனசக்தி பொன்விழா மலரிலும்; 'நன்றி மறக்கா ஒருவன் '(யூலை **2005**) மூதறிஞர் கலாநிதி க.சொக்கலிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவாக வெளிவந்த முதுசொம் சிறுகதைத் தொகுப்பு நூலிலும் வெளிவந்தன.

'இன்னும் ஒரேயொரு பக்கம்தான்...', 'அவளுக்குப் புகலிடம்', 'உன்னை நீ உணர்ந்திருந்தால்...', 'பட்டமளிப்பு நாளன்று', 'எவர்தேடியுமென்ன', 'காதல்க் கற்சிலைகள்', 'விடுங்கள் அவன் போகட்டும்', 'நினைவுச் சின்னம்', 'சிரித்துக்கொண்டிருக்கிறது', 'தெய்வப்பிறவிகள்', 'என்ரை பிள்ளை நல்லவன்' என்னும் சிறுகதைகள் பிரசுரமாகதவைகள்.

தினகரன் பத்திரிகையிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. அந்தச் சிறுகதைகள் எமக்குக் கிடைக்கவில்லை.

எமக்கு கிடைக்கப்பெற்ற சிறுகதைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட பதின் நான்கு சிறுகதைகள் "நவாலியூரானின் சிறுகதைகள்" என்னும் நூலாகப் பதிப்பிக்கப்படுகின்றது. இந்நூலே இவரது முதலாவது சிறுகதை நூல் ஆகும். இவரது சிறுகதைகள் அறவியல் கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

நவாலியூரான் உடல் உள நலத்துடன் வாழ்ந்து மேலும் பல கலை இலக்கியப் பணிபுரிய எமது வாழ்த்துக்கள்.

✲✲

"யாழ். ராதவல்லி" வெளியீட்டு நிறுவனம் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த வெளியீட்டு நிறுவனம் தன்னால் இயன்ற பதிப்பு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிறுவனம் இதுவரை வெளியிட்ட நூல்கள்;

"முட்புதரில் பூத்த புது மலர்" (வைகாசி 2006) எஸ். சி. இரத்தினசிங்கம் (இந்துமதி) மன்றாடல் சஞ்சிகையில் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு.

"பணக்குஷ்டம்" (ஆடி 2006) அருள்பணி யோசுவா ரட்ணம் 1970 களில் வானொலியில் ஆற்றிய கிறிஸ்தவ நற்சிந்தனைகளின் தொகுப்பு.

"நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள்" (ஆனி 2008) வி.பி.தனேந்திரா, நவாலியூரான் பற்றி இரண்டு வருடங்களாக ஆய்வு செய்து எழுதிய நூல்.

"நவாலியூரானின் சிறுகதைகள்" (வைகாசி 2010) நவாலியூர் நா.செல்லத்துரை எழுதிய சிறுகதைகளிலிருந்து தெரிந்து எடுக்கப்பட்ட பதின் நான்கு சிறுகதைத் தொகுப்பு.

கிறிஸ்தவ இலக்கியம், மெய்யியல், உளவியல், அரசியல், சமூகவியல், அறிவியல், இலக்கியம், ஆய்வு போன்ற கருப்பொருள்களில் நல்ல பல நூல்களை எதிர்காலத்தில் பதிப்பிக்கும் நம்பிக்கையோடு பயணிக்கின்றோம் - எமது பணிக்கு உங்கள் கரம் இருந்திட யாசிக்கின்றோம்.

**வி.பி.தனேந்திரா**
*25.05.2010*

# என்னுரை

ஒருவனின் அல்லது ஒருத்தியின் மனத்தன்மைகளை அல்லது உணர்ச்சிக் குணங்களைச் சீராக்கிச் சிறப்பாக்கிப் பார்ப்போரும் கேட்போரும் போற்றும் பண்பாட்டுப் பேர் வழியாய் மாற்றுவது கலைகள் என்பது ஓர் அப்பட்டமான உண்மை.

இசைக்கலை – ஆடல்க்கலை – கவிதைக்கலை – கதைக்கலை – நாடகக் கலை – ஓவியக்கலை – சிற்பக்கலை – கட்டடக்கலை போன்றுள்ள பல கலைகளுக்குள் எந்தக் கலையை எடுத்தாலும், மனித இனம் அதை ஆய்ந்து உணரும் போது அவை மூலம் தத்தம் வாழ்வைப் பக்குவப்படுத்த முடியும் - சிறப்படையச் செய்ய முடியும் - பண்பாட்டாளராய் மாறவும் முடியும்.

எல்லா மனித உயிருக்கும் இது ஒரு கட்டாயம் -அவசியம். இந்த வகையில், கலைப் படைப்புகளை நாம் தூக்கி எறிந்துவிடவோ அலட்சியப்படுத்தி விடவோ முடியாது -கூடாது. அப்படி நாம் செய்வோமானால் எமது மனிதத் தன்மை -மனித குணம் கெட்ட நிலைக்கே தள்ளப்பட்டு விடும். இந்த நிலையை மனிதர் உணர வேண்டியது மிகமிக அவசியம் - நன்று.

தமிழ் அன்னையின் கலைப்படைப்பாளிகளுள் வளர்ந்து வரும் ஒரு படைப்பாளி என்ற முறையில், நானும் எனது கலைப்படைப்புகளுள் ஒன்றான சிறுகதைக் கலைப்படைப்பை இன்று வெளியிட இறையருள் - தெய்வ ஆசி கிடைத்துள்ளது.

எனது சிந்தனைக் கருத்துக்களுக்கான உடலுறுப்புகளைப் பொருத்திச் சிறுகதை உருவமாக்கி உங்கள் படித்தலுக்கும் சிந்தனைக்கும் வழங்குகிறேன்.

உங்களிடம் நான் வழங்கும் இக்கலைப் படைப்பை நீங்கள் படித்து ஆய்ந்து உங்கள் சிந்தனையிலெழும் விமர்சனங்களை - அவைகள் எனக்குச் சாதகமாகவோ சாதகமற்றதாகவோ இருந்தாலும் எழுதி எனது கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். அவைகள் எனக்கு ஆறுதலாகவும் ஊக்குதலாகவும் அமையும். வாசகர்களாகிய உங்களிடம் இதை அன்பாக வேண்டுகிறேன்.

இறுதியாக எனது நன்றிகள்.

- நான் வணங்கும் எனது தெய்வத்திற்கும்
- என்னை ஈன்ற அன்னை தந்தைக்கும்
- கலைமாணிப் பட்டம் நான் பெறுவதற்குப் பணமும் உற்சாகமும் தந்த என் உடன்பிறந்த அண்ணர் - ஆசிரியர் என்.சி. முருகேசு அவர்களுக்கும்

▲ எனது கலைப் படைப்புகள் வெளிவர எல்லையற்ற ஆதரவும் உதவியும் தந்து கொண்டிருக்கும் எனது துணைவி றூத் மகேஸ்வரிக்கும்

▲ எனது இச்சிறுகதைத் தொகுதிக்கு நயப்புரை வழங்கிய சி.சிவசரவணபவன் (சிற்பி) அவர்களுக்கும்

▲ 'நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள்' என்ற நூலை 2008ஆம் ஆண்டு வெளியிட்ட வி.பி. தனேந்திரா அவர்கள் இந்தச் சிறுகதைகளைத் தொகுத்துப் பதிப்பிக்க முன்வந்தமைக்காக அவர்களுக்கும்

▲ இந்த நூலுக்கான அட்டையையும், நூலையும் வடிவமைத்துத் தந்தவர்களுக்கும்

▲ இக்கலைப்படைப்பை வாங்கி வாசிக்கும் வாசக அன்பர்களுக்கும்

எனது இதயத்தில்ப் பூத்த நன்றிகள் ஆயிரம் ஆயிரம்

நவாலியூர் நா.செல்லத்துரை
(நவாலியூரான்)
*138, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம் மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

# 1 நன்றி மறக்கா ஒருவன்

சின்னராசாவின் ஒற்றைத் திருக்கல் வண்டில், பிரதான வீதியைக் கடந்து ஒழுங்கையொன்றுக்குள்த் திரும்பியபோது அந்த வீதியோரத்தில் மீனுக்காகக் காத்துக் கொண்டிருந்த பெண்கள் நடுங்கிப் போனார்கள். வண்டியை இழுத்து ஓடுமந்தக் காளை மாட்டினுடைய ஓட்ட வேகந்தான் அதற்குக் காரணம். ஐயோ என்று கத்திவிட்டாள் அந்தக் கூட்டத்தில் நின்ற ஒருத்தி.

"சின்னராசான்ரை ஓட்டத்தைப் பாத்தியளே. பயமெண்டது உவனுக்கு இல்லைப் போலை" என்று பேசிக் கொண்டாள் இன்னொருத்தி.

"நல்லவேளை உந்தப் பெரிய வேப்பமரத்திலை மாடு முட்டியிருந் தால் இண்டைக்கு மாடும்சரி சின்னராசாவும் சரி" என்று மற்றப் பெண்ணொ ருத்தி சொல்லி முடிப்பதற்குள்ச் சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்து விறகு களை இறக்கிக் கொண்டிருந்தான் சின்னராசா.

கல் வீடுகளும், ஓலைக் குடிசைகளும் நெருக்கமாகக் காணப்படும் அந் தக் கிராமந்தான் யாழ். மாவட்டத்திலுள்ள மாங்கூடல்க் கிராமம். அநேக மான வீடுகளின் முன்னால்க் கறுத்தக் கொழும்பான் மாமரங்களும் ஒருசில வீடுகளின் முன்னால் வேப்பமரங்களும் வளர்ந்து விருட்சமாகிக் காட்சி தரு வதைக் காணலாம்.

மரச்சோலைகளுக்குப் பஞ்சமில்லாத அந்த மாங்கூடல்க் கிராமத்தின் கல்விச் சோலை? அது ஒரு கேள்விக்குறிதான். அதிலும் பட்டதாரியென்று எடுப்பதாயிருந்தால், ஆறு ஆண்டுகளுக்குமுன் பொருளியல்த் துறையில்ப் பட்டம் பெற்று வெளியேறி, இன்று ஆசிரியராகப் பணிபுரியும் அந்தத் தர்ம தாஸ் ஒருவர்தான். இப்போது, பல ஆண்டு இடைவெளிக்குப் பின், பல் கலைக்கழகம் தரும் கல்விக் கரும்பின் சுவையறிந்து அதை மாந்திக் கொண் டிருக்கிறார்கள் எட்டுப் பத்து மாணவர்கள்.

இக்கிராமத்தின் தொண்ணூறு வீத மக்கள் நாள்ச் சம்பளத் தொழிலாளி கள். சின்னராசாவும் அந்த வர்க்கத்தில் ஒருவன். தாய், தந்தையை இழந்த அவ னுக்குத் தந்தையின் தொழில் கைகொடுத்தது. ஒற்றைத்திருக்கல் மாட்டு வண் டில் வைத்துத் தனது குடும்ப வருமானத்தை அந்த மாங்கூடல்க் கிராமத்தில்த் தேடி, வாழ்க்கை நடத்துகிற ஒருவனென்றால் அது சின்னராசா தான். ஏழைத் தாய் தந்தைக்குப் பிறந்தாலும் படிப்பில் நல்ல கெட்டிக்காரன். ஓ எல் முடித்து

மேல்க்கல்வி படிக்க வேண்டியவனைத் தனது கோட்டுக்குள் அடைத்துவிட்டது விதி. ஓ எல்ப் பரீட்சை எடுப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன் அவனது தந்தையும் இரண்டு மாதங்களுக்குமுன் அவனது தாயும் சாவின் மடிக்குள்ச் சுருண்டு விட்டார்கள். ஏனென்று கேட்கக்கூடாத சாவுகள் அவை.

சின்னராசாவுக்குச் சொந்தக் காணியென்று எதுவுமே கிடையாது. இப் போது அவன் குடியிருக்கும் காணி தர்மதாஸின் தாய் தந்தையர் தர்மதாஸ் சுக்குக் கொடுத்த சொத்து. வேறு பிள்ளைகள் அவர்களுக்கு இல்லாதபடியால், அந்த வீட்டையும் காணியையும் தர்மதாஸின் பெயருக்கு எழுதிவிட்டார்கள். மாங்கூடல்க் கிராமத்திலிருந்து ஆறு ஆண்டுகளுக்குமுன் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஒரேயொருவர் என்று கூறினேனே, அந்தக் தர்மதாஸ்தான் இவர்.

சின்னவனாக இருந்த காலந்தொட்டே ஒரு வித்தியாசமான பிள்ளையாய் வளரத் தொடங்கி விட்டான் தர்மதாஸ். அவனிடம் காணப்பட்ட அமைதி - ஏழைகளிடம் காட்டும் பரிவு, இரக்கம் - அறிவைப் பெறுவதிலுள்ள ஆர்வம் -ஆழமாகச் சிந்தனை செய்து கேள்வி கேட்கும் மனப்பாங்கு - பொறுமை - கடவுள் பக்தி, தனக்குப் பாடம் எடுத்த எடுக்காத ஆசிரிய ஆசிரியைமாரிடம் அவன் வைத்திருந்த மரியாதை, பயபக்தி போன்ற நல்ல குணங்களின் காரணமாகத் தர்மதாஸின் மேல் அதிபர் அவர்களுக்கு ஒரு பற்று. அதனால்த் தான் அவனை எங்கு கண்டாலும் "தம்பி தர்மதாஸ், உன் போன்றவர்கள் தான் ஏழைகளை நிமிர்த்த வேண்டும் - நாட்டை உயர்த்த வேண்டும்." என்று தட்டிக் கொடுப்பார். காலப்போக்கில், பட்டதாரி ஆசிரியராய்ப் பணி புரியத் தொடங்கிய தர்மதாஸ் ஏழைகளை நிமிர்த்த வேண்டும் என்ற குறிக் கோளைத் தூக்கியெறியாது, தனது சிந்தனை அலைகளில் அதை ஓடவிட்டபடியால், அதை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார்.

தர்மதாஸின் மாங்கூடல்க் கிராம வீட்டுக்கு விறகு ஏற்றிப் பறிக்கும் பொறுப்பு, சின்னராசாவின் மாட்டு வண்டிலுக்குத்தான் கிடைத்தது. அப்போதெல்லாம் யாழ். மாவட்டத்திலுள்ள புல்லுத்தரைக் கிராமத்தில் அவனது அக்காள் இராசமலரின் வீட்டில், சின்னராசா அவனது குடும்பத்தோடு இருக்கிறான் என்பதும், அந்த வீடு, தாய் தந்தையரால் இராசமலருக்குச் சீதனமாக எழுதிக் கொடுக்கப்பட்டதென்பதும், இராசமலரின் கணவன் கமலேந்திரனின் போக்கு, சின்னராசாவுக்குப் பிடிப்பதில்லை என்பதும், சின்னராசா வீடு ஒன்று தேடுகிறான் என்பதும் தர்மதாஸின் காதுகளுக்கு எப்படியோ எட்டிவிட்டது.

அன்றொருநாள், தனது மாங்கூடல்க் கிராம வீட்டுக்கு, சின்னராசா விறகு பறித்து முடித்ததும் தர்மதாஸ் அவனோடு கதைத்தார்.

"சின்னராசா, ஆறு பரப்புக் காணியோடை வீடொண்டு வாங்கிப் போட்டம். அது இஞ்சையிருந்து கிட்டத்தட்ட அரைக்கிலோ மீற்றர் தூரம். அடுத்த கிழமை எங்கடை குடிபூரல். உனக்கு விருப்பமெண்டால் இந்த வீட்டுக்கு வா. எனக்கு வாடகை வேண்டாம். வீட்டையும் வளவையும் சுத்தமாய்

வைச்சிருந்தால்ப் போதும். உன்னைப் பற்றிக் கனபேர் எனக்குச் சொல்லிப் போட்டினம். நீ, இந்த வீட்டிலை குடியிருக்கலாம். ரண்டறையும் ஒரு குசினியும் உங்கள் மூண்டு பேருக்கும் போதும்."

தர்மதாஸ் இப்படிச் சொன்னதும், திகைத்து நின்றான் சின்னராசா. இந்த உலகத்தில் இப்படியொரு அதிர்ஷ்டம் தனக்கு வருமென்று அவன் எதிர் பார்க்கவேயில்லை.

"ஐயா, என்ரை சொந்தங்கள்-இரத்தங்கள் சொல்லாததை-சொல்ல விரும்பாததை நீங்கள் சொல்லிப் போட்டியள். உங்கடை வீட்டுக்கார அம்மாவும் சம்மதிச்சால், இந்த மாங்கூடல்க் கிராமத்துக்கு நாங்கள் கட்டாயம் வருவம்."

கையெடுத்துத் தர்மதாஸைக் கும்பிட்டான் சின்னராசா. அந்தக் காட்சி, தர்மதாஸின் மனைவி புனிதவதியையும் கண்கலங்க வைத்திட்டது. வடமராட்சிக் கிராமமொன்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர் புனிதவதி. அங்குள்ள மகாவித்தியாலயமொன்றில்ப் படித்துப் பல்கலைக்கழகம் புகுந்த அவர் ஒரு கலைப் பட்டதாரி. திருமணமானபின் இங்கு வந்து, இரண்டு கிலோ மீற்ரர் தூரத்திலுள்ள தனது கணவனின் பாடசாலையில்ப் படிப்பிக்கிறார். ஏழைகளுக்கு இரங்குவதில் - உதவுவதில் தர்மதாஸ் எப்படியோ அப்படித் தான் புனிதவதியும்.

சின்னராசா ஏழைகளின் வரிசையிலே ஒருவன் என்பதாலும் கேட்ட கேட்ட நேரமெல்லாம் எந்த எடுபிடி வேலையையும் தட்டாமல்-சலிக்காமல்-சினக்காமல் செய்து தருபவன் என்பதாலும் குடிவெறி, புகைத்தல் போன்ற தீயபழக்கங்கள் அற்றவனென்பதாலும் சின்னராசாவின் மேல் புனிதவதிக்கும் ஒரு இரக்கம்.

"சின்னராசா, உன்ரை நேர்மையுங் கண்ணியமுந்தான் இந்த உடன்பாட்டுக்கு எங்களை வரச் செய்தது. என்ரை தகப்பன் ஒரு ஏழையெண்ட காரணத்துக்காக எந்தச் சீதனமும் எடுக்காமல் என்னைக் கலியாணம் செய்தவர் என்ரை கணவர். அவர் சம்மதம் தந்தபிறகு என்ரை சம்மதமும் கேட்டாய். அவற்ரை வழிதான் என்ரை வழி. உன்ரை குடும்பத்தோடை வந்து இந்த வீட்டிலை இரு."

புனிதவதி சொன்னதுதான் தாமதம் சின்னராசாவின் கண்கள் நீரை நிறைத்துக் கொண்டிருந்தன. அந்தத் துளிகளின் ஊடாகச் சின்னராசா பார்த்த போது, தர்மதாஸ் தம்பதிகள் மங்கல் உருவங்களாக அவனுக்குத் தெரியவில்லை. சிவனும் பார்வதியும் போல அவர்கள் காட்சி தந்து, தனக்கான உதவியும் ஆசியும் அருளினர் என்ற பூரிப்புப் பொங்க, வீடு சென்றான் சின்னராசா. அவனது மாட்டு வண்டிலும் துள்ளுநடை போட்டு வீட்டை அடைந்தது.

"இஞ்சை பார் தம்பி சின்னராசா, ரண்டு குடும்பமிருக்க என்ரை ரண்டறை வீடு போதாது. நீங்கள் வேறை வீட்டைப் பாருங்கோ. உங்களிலை மூண்டு பேர். எங்களிலை நாலு பேர். என்ரை குமர்ப் பிள்ளையள் ரண்டு

பேருக்கும் ஒரு தனி அறை கட்டாயம் வேணும். இவ்வளவு காலமும் ஒரு விதமாய்ச் சமாளிச்சுப் போட்டம். இனிச் சமாளிக்கிறது கஸ்ரமாயிருக்கு. கொத்தானும் இதைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்."

தமக்கை இராசமலர் அன்றொரு நாள் இப்படிச் சொன்னதை நினைவுக் கெடுத்த சின்னராசா, தனது குடிபூரலுக்குத் தமக்கை இராசமலரையோ மைத் துனர் கமலேந்திரனையோ அழைக்கவில்லை. இவர்களை அழைக்காதபடி யால்ப் புல்லுத்தரைக் கிராமத்திலுள்ள தனது உறவினர்களையும் அழைப்ப தில்லையென்று முடிவெடுத்துக் கொண்டான். அன்றைய பால் காய்ச்சு வைப வத்தில்ச் சின்னராசா குடும்பம் மட்டுந்தான். தர்மதாஸின் குடிபூரலும் அதே நாள் அதே நேரமென்றபடியால்த் தர்மதாஸ்சும் அங்கு வரவில்லை.

மாங்கூடல்க் கிராமத்தில்ச் சின்னராசா குடிபுகுந்ததிலிருந்து அவனது மாட்டு வண்டிலுக்குச் சுமாரான உழைப்பு. அங்குள்ள மூலை முடக்குகளெல் லாம் சின்னராசாவின் மாட்டுக்குத் தண்ணீர் பட்ட பாடம். மூன்றாண்டு காலம் அவனுக்கு வெள்ளிதிசை. அதற்கடுத்த ஆண்டு 1999இல் புற்று நோயால்ப் பாதிக்கப்பட்ட தனது மனைவி நல்லம்மாவை அந்த ஆண்டின் நவம்பர் 30இல் அவன் இழந்துவிட்டான்.

மனைவியைப் பறிகொடுத்த சின்னராசாவுக்கு, வாழ்க்கை ஒரு வேதனையாகியபோதும் அந்த வேதனையைத் தாங்கிக் கொள்ளும் வல்ல மையை அவன் இழக்கவில்லை. அதற்குக் காரணமாயிருந்தவர்கள் தர்மதாஸ் -பக்கத்து வீட்டு றாஜதுரை - முன்வீட்டு முத்தையா - முத்தையா வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளியிருக்கும் - தனது வீட்டின்முன் கடை நடத்தும் சுந்தரம் ஆகியோர். மாலை ஆறு மணியிலிருந்து இரவு ஏழு மணி வரை சின்னராசா வோடு கதைத்து அவனை ஆறுதல்ப்படுத்தியபின் தான் இவர்கள் வீடு திரும்பு வார்கள். கடையிலிருந்து அநேகமாகச் சுந்தரம் வருவான். வராத நாட்களில்ச் சிவபாலன் வருவான். ஆறு மணிக்கு வரும் தர்மதாஸ் அங்கிருந்து புறப்பட எட்டரை மணியாகும். இந்த நிலையில்த் தனது சோகச் சுமையைக் கீழே இறக்கி ஓரளவு மனத்தைரியத்தை வரவழைத்துக் கொண்ட சின்னராசா, தனது மகன் அருள்ராசாவின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவும் தவறுவதில்லை.

காலச் சக்கரம் அருள்ராசாவைப் பதினெட்டு வயது வாலிபனாக்கிவிட் டது. அதனால், உழைக்க வேண்டும் என்று விரும்பிய அவனுக்கு வியாபாரத் தில்த்தான் நாட்டம். சமையலைத் தொடங்கும் தனது தகப்பனுக்குத் தேவை யான அனைத்து உதவிகளையும் செய்து முடித்தபின், அயல்க் கிராமங்களுக் கும் வேறு கிராமங்களுக்கும் சாவச்சேரியிலுள்ள கிராமப் புறங்களுக்கும் சென்று, தொகைக் கணக்கில்த் தேங்காய், மாங்காயென்று அந்தந்தப் பருவ காலத்தில் வாங்கி, வாடகைக் கார் ஒன்றில் வீட்டுக்குக் கொண்டு வருவதும், கால்க் கிலோ மீற்ரர் தூரத்திலிருக்கும் சந்தையில் அவைகளை விற்றுப் பணம் சேர்ப்பதும் அவனது வழக்கம்.

அருள்ராசா வியாபாரத்தில் ஈடுபட்டதால், சின்னராசாவுக்கு ஒரே குதூ கலம். "நானில்லாத காலத் திலை என்ரை பிள்ளை உழைப்பான். குடும்பஸ்த

னாகிவிட்டால்த் தனது குடும்பத்தையும் நல்லாய்ப் பாப்பான். வீணாகத் தெரு அலைஞ்சு கெட்ட பேர் கேக்காமல் தன்ரை வருங்காலத்துக்குத் தேவையான வருமானத்தைத் தேடித்தாற அத்திவாரத்தையும் அமைச்சிட்டான். எனக் கினிக் கவலையே இல்லை." என்றெல்லாம் பெருமிதங் கொள்ளும் சின்ன ராசா தனது உழைப்பிலே கண்ணுங் கருத்துமாக இருந்தான்.

அன்றைக்குச் சின்னராசாவின் வண்டில், தர்மதாஸ் வீட்டுக்கு விறகு பறித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தது. திரும்பிக் கொண்டிருந்த ஒழுங் கையில் ஆங்காங்கே பள்ளமும் திட்டியும். வண்டில் பிரதான தெருவில் ஏறுவ தற்குமுன், மாட்டினுடைய முன்னங்கால் திடீரெனச் சறுக்கி மூலையில் நாட் டப்பட்டிருந்த மின்கம்பத்தோடு மோதியதும் வண்டில் சரிந்துவிட்டது. வண் டிலில் இருந்த சின்னராசா ஐயோ! ஐயோ!! என்று கத்தியவாறு தொப்பென்று கீழே விழுந்துவிட்டான். அவனது வலக்கையிலே பலத்த காயம். வண்டிலும் உடைந்து, மாட்டின் வலது காலில் முறிவும் ஏற்பட்டுவிட்டது. கூப்பிடு தூரத் தில்த்தான் தர்மதாஸின் வீடு. "ஐயோ" என்ற கதறல் கேட்டு அந்த இடத் துக்கு ஓடிவந்த தர்மதாஸ், பிரதான தெருவால்ப் போய்க்கொண்டிருந்த கார் ஒன்றை மறித்து, சின்னராசாவை யாழ்-பொது வைத்தியசாலையில்ச் சேர்த்து விட்டார் உடனடியாக,

"பயப்படுற அளவுக்கு ஒண்டுமில்லை. எலும்பிலை முறிவு எண்டால்த் தான் பிரச்சனை. எக்ஸ்றேயிலை அப்பிடிக் காட்டேல்லை. ஆனால், நிலத் திலை கிடந்த கல்லிலை இவற்ரை வலக்கை நல்லாய் அடிபட்டதாலை அந் தக் கையிலை வீக்கமும் நோவும் கொஞ்சங் அதிகமாயிருக்கு. ஆளை வீட்டை கூட்டிக்கொண்டு போங்கோ. நான்தாற மருந்தைக் கவனமாய் எடுக்க வேணும். மூண்டு கிழமை படுக்கையிலை இருந்தால் நல்லது. மற்றது இப் போதைக்குப் பாரங்கள் தூக்கக் கூடாது."

டொக்ரரின் அறிவுரையோடு வீட்டுக்கு வந்துவிட்டான் சின்னராசா. நேரம் அப்போது இரவு ஏழு. விடயமறிந்த றாஜதுரையும் அவனது மனைவி றாஜேஸ்வரியும் காலடி வைத்தார்கள் சின்னராசா வீட்டில். நடந்ததைக் கேட்ட அதிர்ச்சியால் நடுங்கிய அவர்கள், தர்மதாஸோ, சின்னராசாவோ எதிர்பார்க்காத இன்னொரு அதிர்ச்சிச் சேதியையும் அந்த நேரம் வெளியிட வேண்டியிருந்தது.

"மாஸ்ரர் ஐயா, வண்டில் கொண்டு சின்னராசா புறப்பட்ட கையோடை நாலு மணியிருக்கும். அருள்ராசா எங்களிட்டை வந்து சொல்லிப் போட்டுச் சாவச்சேரிக்குப் போனது தேங்காய் கொண்டர. வழக்கமாய் ஆறு மணிக்கு வாறபிள்ளை இன்னுங் காணேல்லை. என்னாலை போகமுடி யேல்லை. உங்களுக்குத் தெரியுந்தானே இடைக்கிடை எனக்குத் தலை சுத்து மெண்டு. சுந்தரத்திட்டையும் சொன்னனான். அந்தத் தம்பிக்கு எங்கை போய்க் கண்டுபிடிக்கிறதெண்டு தெரியாது. முன்வீட்டு முத்தையாவும் வீட் டிலை இல்லை. இப்ப, என்ன செய்வம் சொல்லுங்கோ மாஸ்ரர் ஐயா?"

தர்மதாஸ் மாங்கூடல்க் கிராமத்திலை இருந்த காலத்திலை எல்லோரும்

அவரை மாஸ்ரர் ஐயா என்று தான் அழைப்பார்கள். றாஜதுரை சொன்ன வார்த்தைகள், தர்மதாஸின் காதுகளிலே படிந்ததுதான் தாமதம். அவரின் முகத்தில், சின்னராசாவுக்கு ஏற்பட்ட நிலைமையினால் ஏற்கனவே படிந்திருந்த சோகம், நாகந் தீண்டிய ஒருவனின் உடலிலே ஏறிக்கொண்டிருந்த நஞ்சுபோல், விறு விறு என்று ஏறிக்கொண்டிருந்தது. மகனை நினைத்துக் கண்ணீர் கண்ணீராய்க் கொட்டிக் கொண்டிருந்த சின்னராசாவை ஆறுதல்ப்படுத்திவிட்டு, சுந்தரத்தின் மோட்டார்ச் சைக்கிளில் நிதானமாகப் பறந்தார் தர்மதாஸ்.

சாவச்சேரிப் பொலிஸ் நிலையம் - படைமுகாம்கள்-அதன்பின் திரும்பி வரும் வழியிலுள்ள படைமுகாம்கள் - பொலிஸ் நிலையங்கள் யாழ் - பொலிஸ் நிலையம் - ஐ.சி.ஆர்.சி - மனித உரிமைகள் ஆணைக் குழு என்று தர்மதாஸ் போகாத கேட்காத நிலையங்களே இல்லை. எங்கெங்கு போனாரோ அங்கங்கெல்லாம் அவருக்குத் தரப்பட்ட "தெரியாது தெரியாது" என்ற எதிர்மறைப் பதிலோடல்லாமல் உடன்பாட்டுப் பதிலோடு அவர் திரும்பவில்லை. சோர்ந்துவிட்டார் பாவம். இருந்தாலும் சின்னராசாவின் சோர்வையும் - மனப் பாரம் - துன்பம் ஆகியவற்றையும் ஒரளவு தணிப்பதற்காக அவனுடைய வீட்டுக்கு நாளாந்தம் வராமலும் இருக்கமாட்டார். அவரோடு சேர்ந்து றாஜதுரை, முத்தையா, சுந்தரம் ஆகியோரும் வருவார்கள்.

"உங்கடை மகன் அருள்ராசா கெதியிலை இஞ்சை வந்து உங்களைப் பாப்பான் அழாதைங்கோ" என்று தைரியங்கூறி அவனை ஆறுதல்ப்படுத்தி விட்டு இரவு மணி ஏழானதும் தத்தம் வீடு திரும்புவது வழக்கம். தர்மதாஸ் மட்டும் எட்டு எட்டரை வரை சின்னராசாவோடுதான்.

அன்றைக்கொரு நாள் இரவு எட்டு மணிபோல் காலஞ்சென்ற தன் மனைவி நல்லம்மாவின் தாலிக்கொடியையும் ஒரு சிறு துணிப்பைக்குள், தான் வைத்திருந்த சிறுதொகைப் பணத்தையும் தர்மதாஸின் கைகளிலே கொடுத்தான் சின்னராசா.

தர்மதாஸின் அந்த நேரத் திகைப்பு சின்னராசாவுக்கு விளங்கிவிட்டது. தர்மதாஸை உற்றுப் பார்த்தபடியே இருந்தான் அவன். கொஞ்ச நேரம் சிலையாகி நின்ற தர்மதாஸ் வாய் திறந்தார் ஏதோ கேட்பதற்கு. அதற்குமுன், தான் சொல்ல வேண்டியதைச் சொல்லத் தொடங்கினான் சின்னராசா.

"ஐயா, என்ரை பிள்ளை வந்தால், அதின்ரை கையிலை இதுகளைக் குடுங்கோ. வராமல் விட்டால் உங்களிட்டை இருக்கட்டும். மறுத்துச் சொல்லாதைங்கோ. நான் தந்தது, என்ரை மகன் வாற வரைக்கும் உங்களிட்டை இருக்கட்டும். ஒண்டுமே இனிச் சொல்லாமல்க் கொண்டு போங்கோ"

சோதனையும் வேதனையும் முட்டி நிறைந்த நெஞ்சோடு வீடு சேர்ந்தார் தர்மதாஸ். அவருடைய நினைவெல்லாம் சின்னராசாவாகவே இருந்தது. ஆனால் சின்னராசா? தன்னுடைய மகனையே அடிக்கடி எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பான் பாவம். எந்த இடத்தில்க் குந்தினாலும் எந்த இடத்தில்க் கால்நோக நின்றாலும் அருள்ராசாவைக் கற்பனை செய்து பார்க்கும் அவனது கண்கள் மங்கலாக மாறாமலிருப்பதில்லை. நீர்ததும்பும்

விழிகளோடுதான் அவனது இன்றைய வாழ்க்கை. அதனால்ச் சமையல் செய்வதையும் அவன் நிறுத்திவிட்டான். பசியேறினாலும் வயிறு அழுதாலும் அவன் சாப்பிடுவதில்லை.

எதுக்காக நான் சாப்பிட வேணும். ஆருக்காக நான் வாழ வேணும். எனக்கென்ன மனைவியா பிள்ளையா குட்டியா? என்ற பிடிவாதம் அவனுடைய சமையலுக்குத் தடைக்கல்லாகிவிட்டது. பட்டினியிருந்து சாவதையே அவன் விரும்பினான்.

இதையறிந்த தர்மதாஸ், றாஜதுரை, முத்தையா, சுந்தரம் ஆகிய நால்வரும் தத்தமக்குள் கதைத்து அந்தந்த வேளைக்குரிய சாப்பாட்டைக் கொண்டு வந்து சின்னராசாவுக்குக் கொடுக்கத் தவறமாட்டார்கள்.

“இதுகளுக்கேன் கஸ்ரத்தையும், கரைச்சலையும் நான் குடுக்கவேணும்” என்று நினைத்துக் கொண்டு, ஒரு சில வேளைகளில்க் கைநீட்டி வாங்க மறுத்துவிடுவான். ஆனால் கொடுப்பவர்களின் அன்பும், ஆதரவும் அவனை ஏங்க வைத்துவிடும். அதனால் அவர்கள் கொடுப்பதை ஏற்பதற்கு மறுக்கவோ அவர்கள் கேட்பதை எதிர்த்துச் சொல்லவோ அவனால் இயலாது. ஒருவகைச் சோகமும் கண்ணீரும் கலந்த நிலையில் அவர்களைப் பார்த்துவிட்டுக் கொடுப்பதை ஏற்றுக் கொள்வான்.

அவர்கள் செய்கின்ற இந்த உபசாரம் அவனுக்கு ஆறுதலைத் தந்தாலும், மாங்கூடல்க் கிராமத்து ஏனையோர் தன்னைப் பார்க்க வரவில்லையே என்று எண்ணும் போதெல்லாம் விம்மி வெடிப்பான். பார்க்கவராத மக்கள் சின்னராசாவை மறந்தது உண்மைதான். வண்டில்க் கலாசாரம் மறைந்து இப்போது ‘லான்ட்மாஸ்ரர்’ கலாசாரம் வந்துவிட்டது. அந்தக் கிராமத்து வாசியான சசிகரன் என்பவன் லான்ட் மாஸ்ரர் வாகனமொன்றைச் சொந்தமாக வாங்கியதால், அந்த மக்களெல்லாம் தத்தம் தேவைகளுக்கு அதையே இப்போது நாடினர். அதனால்ச் சின்னராசாவின் தேவை அவர்களுக்குத் தேவையில்லாமல்ப் போனதால்ச் சின்னராசா மறக்கப்பட்ட ஒருவனாகிவிட்டான் அந்தக் கிராமத்தில்.

கேட்ட கேட்ட நேரத்தில் விறகு பறிப்பதும் பறித்த விறகுகளைச் சிறு சிறு துண்டுகளாகப் பிளந்து கொடுப்பதும் புதிதாக வீடு கட்டுபவர்கள் கேட்கும் சீமெந்து, கம்பி ஆகியவைகளைத் தனது வண்டில் மூலம் ஏற்றிப் பறிப்பதும் பிய்ந்து ஓவென்று கிடக்கும் வேலிகளை அடைத்துக் கொடுப்பதுமாக, எந்தக் கிராமத்துக்கு மறுக்காமல் வேலை செய்து கொடுத்தானோ அந்தக் கிராமம் தன்னை மறந்ததை அவனால் மறக்க முடியவில்லை. தான் செய்த வேலைக்கு அவர்கள் கூலி கொடுத்தாலும், “முடியாது - இண்டைக் கெனக்கு வேறை ஓடர் வந்திருக்கு” என்று மறுத்துக் கூறாமல், அந்தந்த நேரத்தில்த் தனது கடமையைச் சரியாகச் செய்த தன்னை இந்தக் கிராமம் மறந்தது - நன்றியைத் தெரிவிக்கத் தவறியது ஏன் என்று சிந்திக்கும் நேரமெல்லாம், அவனது உடம்பை ஏதோ தாக்கிக் கொல்வது போன்றிருக்கும். அத்தகைய உணர்வு அவனுக்கு.

"நன்றி மறந்த சமுதாயமாக எப்போது நீ மாறினாய் மாங்கூடல்க் கிராமமே என்று கத்திக் கேட்டால் என்ன" என்று நினைப்பான்.

"என்னென்ன எங்களுக்கு நடக்க வேணுமோ அது நடக்கும் சின்னராசா. ஆரையும் நாங்கள் குறை சொல்லக்கூடாது" என்று தர்மதாஸ் அடிக்கடி கூறுவதை அவனது நாக்கு நினைவுபடுத்தியதும் அவனது வாய் தானாகவே மூடிவிடும்.

மூன்று கிழமைகளாகச் சின்னராசாவின் வீட்டில்க் காலடி வைக்கவில்லை தர்மதாஸ். பாடசாலையில் மூன்று கிழமை லீவு எடுத்து, தனது மூத்த மகன் சத்தியதாஸின் கணனிக் கல்வி சம்பந்தமாகத் திடீரென்று கொழும்பு சென்று மூன்று கிழமைகள் அங்கு தங்கியவர், தான் செய்ய வேண்டியதை வெற்றிகரமாகச் செய்து முடித்து, அன்றொரு நாள் இரவு பத்து மணிக்குப் பிரத்தியேக வாகனமொன்றில் வீடு திரும்பி, மறுநாள்க் காலை ஆறுமணி போல்ச் சின்னராசா வீட்டிலே காலடி வைத்தார்.

அன்று ஒரு சனிக்கிழமை. சின்னராசா நல்ல தூக்கம். எழுப்ப மனமில்லாமல் எழுப்புகிறார் அவனை. வேதனைச் சுமைகளைத் தனது தலையிலே அவன் ஏற்றி வைத்திருப்பதால், நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கிறான் என்று முதலில் நினைத்தவரின் மனதில் அடுத்துச் சிந்தித்தபோது, நிம்மதி பிறக்கவில்லை. மீண்டும் அவனைத் தட்டித் தட்டியெழுப்புகிறார். மூச்சைப் பார்க்கிறார் - நாடியைப் பிடிக்கிறார் அவ்வளவு தான்.

தர்மதாஸின் கதறலையும் புலம்பலையும் கேட்டு, றாஜதுரை, றாஜேஸ்வரி, முத்தையா, சுந்தரம் ஆகியோர் அங்கு கூடிவிட்டனர். சோகம் தோய்ந்த அவர்களின் கண்களில் நீர் நீராக வடிந்து கொண் டிருந்தது.

வந்த நாள்த்தொட்டு இன்றுவரை தங்களோடு அன்பாகப் பழகி, தமக்கு வேண்டிய - தாம் கேட்ட சின்னச் சின்ன வேலைகளையெல்லாம் தமக்குச் செய்து தந்த அந்தச் சீவனுக்காக, தாம் தாம் செய்ய வேண்டிய ஒழுங்குகளை றாஜதுரை, முத்தையா, சுந்தரம் ஆகிய மூவரும் செய்ய அரைக் கிலோமீற்ரர் தூரத்திலிருக்கும் கிராம அலுவலரின் பணிமனை சென்று நடந்ததை விளக்கினார் தர்மதாஸ்.

"மயான ஒழுங்கையும் ஏனைய ஒழுங்குகளையும் நீங்கள் செய்யுங்கோ. மற்றதுகளை நான் செய்து முடிச்சுப் போட்டு, நாளை எட்டு எட்டரைக்கு வாறன்" என்று கிராம அலுவலர் விஜயசேகர் உறுதி சொன்னதை அடுத்து, சின்னராசாவின் இறுதிப் பயணத்துக்கான அனைத்தும் நிறைவு பெற்றன.

"நான் செத்தால் ஐயா, மேளங்கள் பட்டாசுகள் ஒண்டுமே வேண்டாம். வீடு வீடாய்ப் போய்ச் சொல்றதையும் நான் விரும்பேல்லை. கேள்விப்பட்டு வாறவை வரட்டும்" என்று அன்றொரு நாள் றாஜதுரை, முத்தையா, சுந்தரம் ஆகியோருக்கு முன், தர்மதாஸ்சுக்குச் சின்னராசா சொன்னதுபோல் மேளங்கள் பட்டாசுகள் எதுவுமே இல்லாமல், சின்னராசாவின் பூதவுடல், அமைதியாக எடுத்துச் செல்லப்பட்டு, மாங்கூடல்க் கிராமத்துக்குரிய மயானத்தில் எரிந்து கொண்டிருந்தது. கொள்ளி வைத்தவர் தர்மதாஸ்.

வந்தவர்களெல்லோரும் தத்தம் வீடு திரும்ப வேண்டியவேளை நெருங்கியதும் ஒவ்வொருவராக, மயானத்தை விட்டகன்றனர். மற்ற மற்ற நாள்க் காலை தர்மதாஸின் பெயரிலே அவரின் வீட்டு விலாசத்துக்கு ஒரு கடிதம். வெள்ளிக்கிழமை மாலை, தான் இறப்பதற்கு முன் தனது கைப்படச் சின்ன ராசா எழுதிய கடிதம் அது. பாடசாலை முடித்து மாலை நேரம் வீட்டுக்கு வந்தபோது தான் அக்கடிதம் தர்மதாஸின் கையில்க் கிடைத்தது.

"ஐயா, சாவச்சேரிக்குப் போன இடத்திலை அருள்ராசாவை ஆமி புடிச்சுப் போட்டுதெண்டு, இந்த மாங்கூடல்க் கிராமச் சனங்கள் தன்ரை கடையிலை நிண்டு கதைச்சதெண்டு, தம்பி சுந்தரம் மூலம் அறிஞ்சனான். ஆரோ சொல்லிக் குடுத்துத்தான் புடிச்சவங்களெண்டும் கதைச்சவையாம். என்ரை பிள்ளை இயக்கத்திலை இல்லை. அதுக்கு என்ன நடந்ததெண்டு எனக்குத் தெரியாது. என்ரை பிள்ளை வருமெண்ட நம்பிக்கையும் என்னைவிட்டுப் போட்டுது. ஐயா, உங்களிட்டை நான் தந்த பொருள், வாரிசை இழந்த இந்தப் பாவிக்கு இனித் தேவைப்படாது. எனக்காக நீங்கள் சிலவழிச்சது எனக்குத் தான் தெரியும். பழைய வண்டிலையும், மாட்டையும் வித்துப் போட்டுப் புதிய வண்டிலும் மாடும் வாங்கவேணுமெண்டு நான் கதைச்சதைக் கேட்டிட்டு அந்த மாசமே அதுகளை எனக்கு வாங்கித் தந்தியள். என்ரை நல்லம்மா மோசம் போனபிறகு, தாலிக்கொடியை வித்து அந்தப் பணத்தை உங்களுக் குத்தர நினைச்சன். நீங்களோ என்னைப் பேசி அதையும் தடுத்திட்டியள். என்ரை பிள்ளையைத் தேடிக் கண்டுபிடிக்க நீங்கள் சிலவழிச்சதும் கொஞ்சமில்லை.

இப்ப என்ரை ரண்டு கையையும் தூக்கி, உங்களைக் கும்பிட்டு நான் கேக்கிறது இதுதான். நான் தந்த ஏழு பவுண் தாலிக்கொடியை வித்து, உங்களுக்கு நான் தரவேண்டிய கடனை எடுங்கோ. என்ரை சோகக் கண்ணீர் உங்கடை பாதங்களுக்கு முன்னாலை விழுந்து கேக்குதையா - கட்டாயம் செய்யுங்கோ." இதற்கு மேல் வாசிக்கத் தர்மதாஸால் முடியவில்லை. அவனது கைகளிலிருந்து நழுவிய கடிதம் கீழே விழுந்து ஒரு மூலைக்குள் முடங்கியது. அதையெடுத்த புனிதவதி தர்மதாஸை நிமிர்ந்து பார்த்தாள். நீர் ததும்பிய தர்மதாஸின் கண்களோ கடிதத்தையே பார்த்து நின்றன. கடிதத்தின் மிகுதியை வாசிக்கத் தொடங்கினாள் புனிதவதி.

"என்ரை பேராலை மூண்டாம் நாள்ச் சிலவையோ முப்பத்தொராம் நாள் நினைவு தினத்தையோ நடத்த வேண்டாம் ஐயா. நீங்கள் விரும்பினால், முதியோர் இல்லத்துக்குக் கொஞ்சப் பணத்தைக் குடுத்து என்ரை நினைவாலை அதுகளைச் சாப்பிடச் சொல்லுங்கோ. என்ரை வீட்டிலையிருக்கிற எங்கடை உடுபுடைவையை அகதி முகாமிலையிருக்கிறதுகளுக்கு இல்லாட்டில்ப் பிச்சைக்காரருக்குக் குடுத்தால் எனக்குப் புண்ணியம் கிடைக்கும். இதையெல்லாம் நீங்கள் செய்வியளெண்ட தைரியத்திலை எழுதிக் கேக்கிறன். ஏனெண்டால் நீங்களெனக்குப் புறத்தியில்லை. இந்த ஏழைக்கு இண்டைவரை நீங்கள் செய்த எல்லா உதவிக்கும் என்ரை கையெடுத்து உங்களுக்கு நன்றி

சொல்லிறன் ஐயா.

என்ரை பிள்ளையில்லாமல் நானிருந்து பயனில்லை. நானும் போறன். என்ரை உயிர் எப்பிடிப் போனதெண்டு விசாரணை செய்யவேண்டாம். பாக் கிறதுகளுக்கு கரைச்சல் தராமல் - பாயிலை கிடந்து அழுத்திக் கஸ்ரப்படாமல் - உயிரொண்டு சாகிறதுக்கு என்ன செய்ய வேணுமோ அதைத் தான் இண் டைக்கு இரவு நானும் செய்யப் போறன். மூண்டு வருஷத்துக்கு முதல் என்ரை நல்லம்மாவும் இந்த மாசம் இந்த நாளிலை தான் உலகத்தை விட்டிட்டுப் போனது. அந்த நினைவு நாளிலை நானும் உலகத்திட்டை விடை கேட்டுக் கொண்டு போறன் ஐயா.

உங்கடை அன்புக்குப் பாத்திரமான
சின்னராசா *30.11.2002*"

ஊற்றெடுத்த தர்மதாஸின் கண்ணீர்த் துளிகள் தாரை தாரையாகத் தரையிறங்கின. அவரோடு சேர்ந்து, புனிதவதியும் கண்ணீர் வடித்தாள். கடித மூலம் சின்னராசா எதையெதை அன்பாக - பணிவாக எழுதிக் கேட்டானோ அவைகளில் ஒரு சில ஏற்கனவே நிறைவு பெற்றுவிட்டன. இன்று அவனது விருப்பப் படி 3ம் நாள்ச் சிலவை நிறைவேற்ற முதியோர் இல்லத்துக்குப் புறப் படுகிறார் தர்மதாஸ். சின்னராசாவின் அடுத்தடுத்த விருப்பங்கள் வெகு விரை வில்த் தர்மதாஸால் நிறைவேறப்பெறும். அந்த நாட்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார் தர்மதாஸ்.

எப்படியோ வந்து எப்படியோ பழகி, ஒட்டிப்பிறந்த உயிரைப்போல், தர்மதாஸோடு ஒட்டி நின்றது அந்த ஏழை உயிர். எந்தப் பிறப்போ எந்தக் குலமோ எந்த வர்க்கமோ என்று பேதம் பார்க்கவில்லை தர்மதாஸ். எல்லா இரத்தமும் ஒரே இரத்தந்தான் என்ற தர்மதாஸின் நினைவலைகளில் வந்து வந்து மிதந்து கொண்டிருப்பான் சின்னராசா.

சின்னராசாவின் உடைந்த வண்டிலும் மிருக வைத்தியர் சத்தியனால்க் குணமாக்கப்பட்ட சின்னராசாவின் காளை மாடும் இன்றைக்கும் தர்மதாஸின் வளவில்த்தான். அத்தோடு அவன் கொடுத்த தாலிக்கொடி தர்மதாஸ் குடும் பத்தின் பூசை அறைச் சுவரொன்றில் இன்றும் சின்னராசாவின் நினைவுச் சின்ன மாகக் காட்சி தந்து கொண்டேயிருக்கிறது.

மூதறிஞர் கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்)
அவர்களின் ஓராண்டு நினைவாக
வெளிவந்த 'முதுசொம்' சிறுகதைத் தொகுப்பு
நூலில் இடம்பெற்ற சிறுகதை.
2005 யூலை.

# 2 யாழ் நங்கை

**தூ**ணோடு சாய்ந்து சிந்தனையோடு போராடும் நிலையிலிருந்து அவன் விடுபடவேயில்லை. ஒரு பெருமூச்சு – ஒரு விம்மல் – ஒரு அழுகை – அந்த அழுகையினால் வழிந்தோடும் கண்ணீர்க் குழம்பு. இவையெல்லாம் அவனுக்கு இன்று நேற்றல்ல, இழக்கக் கூடாததை என்று இழந்தானோ, அன்றையிலிருந்து உருவெடுத்த நிகழ்வுகள்தான் இவை.

"அண்ணை....., நடந்ததை யோசிச்சு அழுதுகொண்டிருக்காமல்ச் சாப் பிடுங்கோ. நீங்கள் சாப்பிடாட்டால், என்னாலையும் சாப்பிடமுடியாது. தயவுசெய்து சாப்பிடுங்கோ." இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லி அவனது மனநிலையை மாற்ற முயற்சிப்பாள் செல்வறாணி. ஆனால் அவன்...? கைய சைத்து, தலையசைத்து தனது சம்மதமின்மையை வெளிக்காட்டிச் சென்றுவிடு வான். ஏதாவது ஒரு எண்ணம் வந்தால் மட்டும், அவனது மதியவேளைக் குடலை, ஒரு பீங்கான் சோறு நிரப்பிவிடும். வயிறு நிரம்பினாலென்ன, நிரம்பா விட்டாலென்ன அந்த வளவின் ஒரு மூலை அவனை வரவேற்கும். அங்கு அவனை அணைப்பவை கவலையும் கண்ணீருந்தான். வேலைக்குப் போகி றவர்கள் வந்து "செந்தில்" என்று குரல் கொடுத்தால் மட்டுமே "ஷேர்ட்" ஐ அணிந்து ஏனோ தானோ நடைபோட்டு அவர்களோடு சென்றுவிடுவான் எது வித தாமதமுமில்லாமல்.

வேலையென்றால் அவனுக்குக் கடவுள் மாதிரி. கண்ணும்கருத்துமாகச் செய்து முடிப்பது அவனது வழக்கம். அப்படி முடித்தால்த்தான் அவ னுக்கொரு திருப்தி. அவனது வேலையைப் பார்த்தால், முப்பத்தைந்து வயது ஆள் செய்த வேலையென்று எவரும் சொல்லமாட்டார்கள். அனுபவத்தில் ஊறிய ஒருவன் செய்த வேலையென்றே சொல்லுவார்கள். அந்தளவுக்கு அவ னது வேலையில் ஒரு அழகு இருக்கும். வேலை முடித்து வீடு திரும்பியதும், தான் உழைத்த பணத்தைத் தனது தங்கை செல்வறாணியிடம் கொடுத்து விட்டு வழக்கமான மூலையில் அமர்ந்து சிந்தனையில் மிதப்பான். இது அந்த ஊருக்கும் தெரிந்த விடயமாகிவிட்டது.

தமையனின் இந்த நிலையைக் கண்டு ஆறாது அழுவாள் செல்வறாணி. வெந்தணழிலே வேகும் புழுவாகத் துடிப்பாள். அன்றைக்கும் அப்படித்தான். அவளது அழுகையும் கண்ணீரும் எல்லை கடந்து உருண்டன. தனது அண் ணன் நிலத்திலே புரண்டு புரண்டு அழுது புலம்பிய காட்சி அவளது உள்ளத்

தைக் குடைந்து விட்டது. துப்பாக்கி ரவைகள் துளைத்த உடலொன்று எப்படித் துடிக்குமோ அப்படி.

"அழாதைங்கோ அண்ணை..... நீங்கள் அழுது புலம்பிறதைப் பாத்தால் என்னாலை.... என்னாலை..." மேலும் பேசுவதற்கு அவளால் முடியவில்லை. கலங்கிய அவளின் கண்களிலே நீர்த்துளிகள். இரத்த பாசம் அவளைச் சோகத்தின் உச்சிக்கே கொண்டு சென்றுவிட்டது. செந்திலுக்கு அது தெரியும்.

"றாணி! என்ரை சந்தோஷ வாழ்க்கை முடிஞ்சுபோச்சம்மா. கடவுள் என்னை எடுக்கும் வரை இருப்பன். நீ என்ரை ஒரேயொரு சகோதரம் எண்ட படியாலை இதை உனக்குச் சொல்லாமலிருக்க என்னாலை முடியேல்லை. என்ரை கவலையைக் கட்டுப்படுத்தாதை-என்ரை அழுகையைக் கண்டு நீ அழாதை. இதுக்கு மேலை எதையும் நான் சொல்லமாட்டன். போம்மா. போய்... உன்ரை வேலையைக் கவனி."

செல்வறாணி மெதுவாக நடந்து சமையலறைக்குள்க் காலடி வைக்கிறாள். தமையனின் ஆறாத் துயருக்கு எந்த நிகழ்வுகள் காரணமாயிருந்தனவோ, அந்த நிகழ்வுகள் அவளது மனத்திரையில்ப் படக்காட்சி "றீல்" ஓடுவது போல் ஓடிக்கொண்டிருந்தன.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி கந்தர்மடம் பகுதியெல்லாம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. ஸ்ரீலங்கா அரச படையினர், தமிழ்ப் புலிப் போராளிகளின் கட்டுப்பாட்டில் அப்போதிருந்த யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காகத் தொடுத்த யுத்தத்தின் ஒருவகைத் தாக்குதல்தான் இந்த எறிகணை வீசல்கள். இப்படியொரு நிலை வருமென்று தெரிந்தோ என்னவோ புலிப்போராளிகள் ஏற்கனவே தென்மராட்சியை அடைந்துவிட்டார்கள். அதனால் அவர்கள் மீது இந்த எறிகணைகள் விழவில்லை. விழுந்து வெடித்ததெல்லாம் பொதுமக்கள் மீதும், அவர்களின் இருப்பிடங்கள் மீதும், கோயில்கள், பாடசாலைகள் என்றிருந்த கட்டடங்கள் மீதுந்தான்.

இந்த அகோர எறிகணை வீசல்களினால் ஏற்பட்ட அனர்த்தங்களையும் தாக்கங்களையும் சமாளிக்க முடியாத பொதுமக்கள் தத்தமக்குரிய பணம், நகைகள், ஒருசில உடுபிடவைகள், சமையலுக்கான அத்தியாவசியப் பொருட்கள், சமான்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, ஓட்டமும் நடையுமாக வெளியேறினர். அப்படி வெளியேறிய குடும்பங்களோடு ஒரு குடும்பமாகச் செந்திலின் தங்கை செல்வறாணியும் அவளது கணவன் கந்தசாமியும் அடங்குவர். தன்னுடன் இப்போதிருக்கும் ஒரேயொரு ஆதாரமான தனது குழந்தை யாழ் நங்கையைத் தோளில்ச் சுமந்தபடி நடந்துகொண்டிருக்கிறான் செந்தில்.

யாழ் நங்கை இரண்டு ஆண்டை எட்டிவிட்டாள். தாயை உரித்து வைத்த சாங்கம், நல்ல நிறம், அழகான தோற்றம், மூக்குத்திக்காய்க் கண்கள். ஒட்டுமொத்தமாக அவளைக் கவர்ச்சியின் பிறப்பிடம் எனலாம். யாழ் நங்கை வாய் திறந்தால்ப் போதும், மழலை மழலையாகக் கொட்டுவாள். செந்திலின் இருண்ட பாதைக்கு ஒளி நிறம் பூசியவள் அவள்தான். அவளைத் தனது இடது தோளில் ஏந்தி இடது கையால் அவளது உடலை அணைத்து வலது கையில்

ஒரு "பாக்"குடன் நடக்கிறான் செந்தில்.

கந்தர்மடம் தாண்டி நாயன்மார்கட்டுப் பாரதி சனசமூகநிலையத்தை அண்டியபோது நேரம் பிற்பகல் இரண்டு முப்பது. ஒரே சனக்கூட்டம். அத்தோடு வண்டில்கள், சைக்கிள்கள், கார்கள், வான்கள், லொறிகள் என்று ஒரே வாகன நெருக்கடி. வடமராட்சியை –தென்மராட்சியை நோக்கிய பயணம் தொடர்கிறது. நடந்து செல்வோரின் கைகளிலும் தோள்களிலும் பொதிகள், "பாக்"குகள். சைக்கிள்களின் முன்பக்கக் கூடைகளிலும் பின்பக்கக் 'கரியர்' களிலும் பாரமான பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வயதுபோன சில ஆண்கள், ஆடுகளையும், மாடுகளையும் கயிற்றில்க் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். சிலருடைய சைக்கிள்க் 'கரியர்'களில் மண்வெட்டி, வாச்சி ஆகியவை. பரிதாபமான, வேதனைக்குரிய காட்சிகள்.

செல்வறாணி நன்றாகச் சைக்கிள் ஓடுவாள். அவளுக்கென்று ஒரு சைக்கிள் உண்டு. மேசன் "கென்றாக்" செய்யும் கந்தசாமி, தான் உழைத்துச் சேகரித்த பணத்தில்த் தனது மனைவி செல்வறாணிக்கு ஒரு புது "லுமாலா லேடிஸ்" சைக்கிள் வாங்கிக் கொடுத்து இரண்டாண்டுகள். கடைக்குச் சென்று சமையல்ச் சாமான் சட்டுக்கள் வாங்குவதற்குச் செல்வறாணி பயன்படுத்துவது அந்தச் சைக்கிள்தான். அதை உருட்டிக் கொண்டுதான் செல்வறாணி நடக்கிறாள். அவளது சைக்கிள்க்கூடைக்குள் ஒரு "பாக்"கும் (Bag) சைக்கிள்க் கரியரில் ஒரு பெரிய பாக்கும், அவளது இடது தோளில் ஒரு சிறிய பாக்குமாகப் பயணம் தொடர்கிறது. கந்தசாமியும் அதே மாதிரித்தான் செல்கிறான்.

இவர்கள் இருவருக்கும் இதுவரை குழந்தைகளில்லை. ஆனாலும் வயது போய்விடவில்லை. செல்வறாணிக்கு முப்பது. கந்தசாமிக்கு முப்பத்தைந்து. செந்திலின் குழந்தை யாழ் நங்கை செல்வறாணியின் வீட்டிலிருப்பதால், குழந்தையில்லையே என்ற மனத்தாக்கம் செல்வறாணிக்கோ கந்தசாமிக்கோ இருக்கவில்லை. செந்திலுக்குப் பின்னால் இவர்கள் இருவரும் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

பிரதான வீதியான கண்டி வீதியில்ச் சனநெருக்கடியும் வாகன நெருக்கடியும் அளவுக்கு அதிகமாகிவிட்டதால் அந்த நெருக்கடிக்குள்த் தன்னுடைய பிஞ்சுப் பாலகி அகப்பட்டு அந்த அவஸ்தையால் அழக்கூடாதென்பதற்காகப் பிரதான வீதியின் இடது பக்கமாயுள்ள செம்மணி வயல்ப் பாதையை நாடினான் செந்தில். ஒத்துக்கொண்டு செல்வறாணியும் கந்தசாமியும் அவனுடன் செல்கிறார்கள்.

இவர்கள் செல்லும் வயல்களையும் வரம்புகளையும் மழை நீரானது தனது பிடிக்குள்ச் சிக்கவைத்துக் கொண்டிருந்த காலம் அது. இந்தப் பாதையால்ச் சென்றால் இருளுவதற்கு முன் நாவற்குழிப் பாலத்தில் ஏறிவிடலாம். ஏறிவிட்டால் மட்டுவில் ஊரை நேரத்தோடு அடைந்துவிடலாம். பிறகு ஏதாவதொரு பாடசாலையில் அல்லது கோவிலில்த் தஞ்சம் புகுந்துவிடலாம் என்று மூவரும் கதைத்துக்கொண்டே நடந்தனர். நடந்துகொண்டிருந்த போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் விழுந்து வெடிக்கும் எறிகணைச் சத்தம் அவர்களின் காதுகளில் விழாமலில்லை. அந்தப் பயங்கர ஓசையின் காரணமாக

நடையைத் துரிதப்படுத்த முனைந்தார்கள்.

வயல்களையும் வரம்புகளையும் மீறி மழை நீர் பாய்ந்திருந்ததால் இவர்களின் நடை வேகம் குறைந்து விட்டது. நத்தையாகவும் ஆமையாகவும் நகரத் தொடங்கினர். இவர்கள் மட்டுந்தான் அப்படி நடந்தார்கள் என்று நினைக்கக் கூடாது. அப்பாதையால்ச் சென்ற அனைவரது நடையும் அதே வேகந்தான்.

யாழ் நங்கையைத் தனது தோளில் ஏந்தி வலது கையில்ப் பாக்கொன்றைத் தூக்கியபடி நீரூடாக நடக்க முடியாமல் நடந்துகொண்டிருக்கும் செந்திலின் நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர் மல்கும் செல்வறாணியை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில்க் கவனித்துவிட்டான் கந்தசாமி.

"எங்களுக்கு எது நடக்கவேணுமோ அது நடக்கும். அழுதழுது நிலை தளரக்கூடாது. கவனமாய் உருட்டிக்கொண்டு வா. உன்ரை சைக்கிளிலை பாரம் ஏறியிட்டுது. தண்ணீருக்குள்ளை உன்னை விழுத்தினாலும் விழுத்தும்" என்று செல்வறாணிக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறிக்கொண்டு அவளின் இடது பக்கமாகத் தனது சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தான் கந்தசாமி. இருவர் பார்வையும் தமக்கு முன்னால்ச் சென்று கொண்டிருக்கும் செந்திலின் மேல்த்தான்.

யாழ் நங்கைக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாதென்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நிதானமாக நடக்கிறான் செந்தில். திடீரென ஒரு பலத்த காற்று. செந்திலின் உடல் ஓரளவு உறுதி தளர்ந்து அசைய - கால்கள் இடறி இழுக்க– அவனது பாதை மாறுகிறது. குன்றும் குழியுமான இடமொன்றில் அவனது கால்கள். அதைத் தவிர்ப்பதற்காக அடுத்த அடியை எடுத்து வைத்தான். அடி வைத்த இடம் ஆழ்ந்த பள்ளமானபடியால் அவனது இரண்டு கால்களும் அப் பள்ளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. ஆபத்தான பள்ளத்தைத் தவிர்த்து நடக்க முயன்ற செந்தில் இப்போது அதே பள்ளத்துக்குள்.

"ஐயோ... ஐயோ... என்ரை குழந்தை, என்ரை குழந்தை, என்ரை யாழ், என்ரை யாழ் நங்கை..." அவ்வளவுதான். மூச்சுத் திணறிய செந்திலால் எதுவுமே செய்யமுடியவில்லை. பிஞ்சுக்குழந்தை யாழ் நங்கை ஆழமான நீரில் தத்தளித்தாள் பாவம். செந்திலுக்குபின்னால்ப் பத்தடி தூரத்தில் வந்துகொண்டிருந்த செல்வறாணியும் கந்தசாமியும் தத்தமது சைக்கிள்களையும், பொதிகளையும் கைவிட்டு அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள். நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாக ஓடுவதென்றால் யாரால்த்தான் முடியும்?

யாழ் நங்கையின் இறுதி மூச்சு, நீரோடு நீராகக் கலந்துவிட்டது. மழலை மழலையாகப் பொழிந்து, அந்தப் பொழிவிலே இதுவரை குழந்தைச் செல்வம் இல்லாத தன்னையும் தன் கணவனையும் நனைத்த யாழ் நங்கைக்காகக் கண்ணீர் கண்ணீராய்க் கொட்டினாள் செல்வறாணி. எல்லாம் முடிந்தது என்ற நிலையிலே கந்தசாமி. யாழ் நங்கையின் நினைவைத் தவிர வேறெதுவும் அவனைத் தொடவில்லை. தேம்பித் தேம்பி அழுதான்.

செந்திலின் நிலையோ பரிதாபம். அக்கம் பக்கம் நின்றவர்கள் செந்திலையும் பிள்ளையையும் தரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அருகில் நின்ற ஆயுள்வேத வைத்தியர் பொன்னையாவின் உதவியால் மூச்செடுத்த செந்

திலை, செல்வறாணி கந்தசாமி உட்பட அங்கு கூடி நின்ற அனைவரும் தேற்றினர். அந்தக் கூட்டத்துள்க் காணப்பட்ட ஒருவரின் சைக்கிளில் இருந்த மண்வெட்டியொன்று யாழ் நங்கையின் பிரேதக் குழியை வெட்டியது. மீளாத் துயிலடைந்தாள் யாழ் நங்கை.

வீசிக் கொண்டிருந்த பலத்த காற்றையும் ஊடறுத்துக்கொண்டு நடந்த செந்தில், செல்வறாணி, கந்தசாமி மூவரும் தண்ணீருக்குள் விழுந்த பொதிகளையும் சைக்கிள்களையும் எடுத்துக்கொண்டு நாவற்குழிப் பாலத்தையும் தாண்டி மட்டுவில் ஊரை அடைந்தபோது நேரம் இரவு 8 மணி.

அங்கிருந்த கோயில்கள்–பாடசாலைகள் எல்லாம் அகதி முகாம்களாயின. ஒரே நெருக்கடி. இடமேயில்லை. சிற்சில வீடுகளில் இருப்பிடம் வேண்டினர். அனைத்தும் தோல்வி. தோல்வியைத் தழுவிக் கொண்டு நடந்த இம் மூவரையும் ஒருவன் அணைத்தான். குடிசை கொடுத்தான். பசி வயிற்றுக்குப் பதில் சொல்லாது இருந்த இவர்களுக்கு உண்ணக் கொடுத்தான். விவேகானந்தரின் வார்த்தைகளில் இவனே மகாத்மா. "எவனது நெஞ்சு ஏழைகளுக்காக-ஏழை மக்கட்காகத் துயரத்தில் ஆழுமோ அவனையே மகாத்மா என்பேன்" என்பது விவேகானந்தரின் கூற்று.

காலச் சக்கரங்கள் சுழன்று ஆறு மாதங்கள் முடிவடைந்ததும் வடமராட்சி, தென்மராட்சி மண் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. வலிகாம மக்கள் மீண்டும் தங்கள் தங்கள் இல்லங்கட்குத் திரும்பலாம் - பயமின்றித் திரும்பலாம் என்று **1996** ஏப்பிறில் மாதப் பிற்பகுதியில் அரச படை அதிகாரிகள், ஸ்ரீலங்கா வானொலி மூலம் வலிகாம மக்களுக்கு விடுத்த அறிவித்தல், வலிகாம மக்களுக்கு ஒரு பெரும் மகிழ்ச்சியை ஊட்டியது. அதனால் அவர்கள் தங்களது யாத்திராகாமத்தை முடித்து மீண்டும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பும் ஆயத்தங்களில்ப் பரபரப்பாயிருந்தனர்.

செந்திலைக் காதலித்துச் சௌந்தரி திருமணம் செய்ததால், சௌந்தரியின் தந்தையான கட்டடக் கென்ற்ராக்ரர் பரமானந்தம் சௌந்தரிக்கு வீடு கொடுக்கவில்லை. தன்னுடன் கூலி வேலை செய்த செந்திலுடன் தனது மகள் ஓடிவிட்டாளென்ற ஆத்திரம் அவருக்கு. செந்திலின் தந்தை சிவசுப்பிரமணியமும் தனக்கென்றிருந்த அந்த நான்கு பரப்பு வளவையும் வீட்டையும் தன் ஒரேயொரு மகள் செல்வறாணிக்குத் தானும் தனது மனைவி சிவறாணியும் இறக்கு முன்பே எழுதிவிட்டார். செந்திலுக்கென்று சொந்த வீடு எதுவும் இல்லை. உழைத்து ஒரு வீடு கட்டக்கூடிய அளவுக்கு செந்திலாலும் முடியாது. அதனால்த்தான் செல்வறாணி கந்தசாமி தம்பதியரின் விரும்பின்படி செந்தில் சௌந்தரி குடித்தனம் செல்வறாணியின் வீட்டிலமைந்தது.

**1996** ஏப்பிறில் **30** ஆம் திகதி கந்தர்மட வீடு செல்வறாணியையும் கந்தசாமியையும் செந்திலையும் மீண்டும் வரவேற்றது. ஒரு சில பொருட்களைத் தவிர வீட்டிலிருந்த மற்றைய பொருட்கள் களவாடப்படவில்லை. செல்வறாணிக்கும் கந்தசாமிக்கும் அது ஒரு பரம திருப்தி. இருந்தும் அந்த வீட்டின் நான்கு பக்கங்களிலும் சோக வேலிகள். அந்த வேலிகளுக்குள்த்தான் செந்திலின் வாழ்வு. அந்த வேலிக்கோடுகளுக்கு வெளியே அவனை இழுத்தெடுக்க

எவராலும் முடியவில்லை. இந்த முயற்சியில்ச் செல்வறாணிக்குப் படு தோல்வி. கந்தசாமியின் அணுகுமுறை வேறு. அதற்குச் செந்தில் எடுபட வில்லை. தனக்கு ஏற்பட்ட துன்ப நிகழ்வுகளை மட்டுமே தனது இரத்தத்துடன் ஓடவிட்டுக் கொண்டிருக்கிறான் தனது மைத்துணன் செந்தில் என்ற ஊகத் துடன் அகன்று விடுவான் கந்தசாமி. தனது கணவரால்க்கூட, தனது அண்ண னின் மன நிலையை மாற்ற முடியவில்லையே என்ற பெருமூச்சுடன் செல்வ றாணியின் மனத்திரையில்ச் செந்தில் பற்றி இதுவரை ஓடிக்கொண்டிருந்த சோக நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன.

"றாணி..." என்று குரல் கொடுத்தபடி சமையலறைக்குள்க் காலடி எடுத்து வைத்தான் கந்தசாமி. விழி நீரைத் துடைத்து நிமிந்தாள் செல்வறாணி. "உன்ரை அண்ணனைப் பாக்கிற நேரமெல்லாம் எனக்குப் பரிதாபமாயிருக்கு- பயமாயுமிருக்கு. இப்படியொரு பொல்லாத தண்டனையை அவனுக்கு ஏன் கொடுத்தார் கடவுளெண்டு எனக்குப் புரியேல்லை. இவ்வளவு நாளும் அவன் உப்படியில்லை. இப்ப தான்...."

விம்மி வெடித்தான் கந்தசாமி. எப்படியிருக்கும் செல்வறாணிக்கு. சமை யலறையெல்லாம் ஒரே சோகமயம். மணம் முடித்து ஐந்தாண்டு காலமாக இந்தச் சோடிகள் அனுபவித்துவந்த இன்ப ஊற்று நீரோடை இப்போது வற் றிக் காய்ந்து வரண்டு விட்டது. வளவே சோகக் குவியல்களாக மாறிவிட்டது.

"என்ரை யாழ்...... என்ரை யாழ் நங்கை...... டேய்! என்ரை யாழ் நங் கையை எனக்குத் தாடா. நீ ஆரடா அதை என்னட்டையிருந்து பறிக்கிறத் துக்கு. அதில்லாமல் எப்படியெடா நான் வாழுறது? என்ரை சொத்தைத் திருப் தித்தாடா என்னட்டை. டே! அண்டைக்கு என்ரை ஆக்கள் எனக்கு உதவி செய்திருந்தால் என்ரை யாழ். நங்கையை என்னட்டை இருந்து நீ பறிச்சிருக்க மாட்டாய். அதை நான் இழந்திருக்க மாட்டனெடா மாட்டன்."

இத்தகைய கதறல் வார்த்தைகளுடனும், இடையிடையே எழும் அழுகை - சிரிப்பு இவற்றுடனும் வளவைச் சுற்றிச்சுற்றி நடக்கிறான் செந்தில். ஒரு சில கிழமைகளாகச் செந்திலின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றந்தான் இது. உச்ச கட்டத்தை அடைந்துவிட்டது. நாளாந்தம் இந்த ஓசைதான் அந்த வளவுக்குள்க் கேட்டவண்ணமிருந்தது.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் தனது இல்லத்துணையான சௌந்த ரியை இழந்தவன் செந்தில். புற்றுநோய் அவளைத் தனது இரையாக்கிக் கொண்டது. குணம் – நிறம் அனைத்தும் சிறந்தவள் சௌந்தரி. தனது இரு பத்தெட்டாவது வயதில் மரணமென்பதைச் சௌந்தரி அறிந்திருக்காவிட் டாலும் செந்தில் அதை அறிந்திருந்தான். சாத்திரி சிவநாதன் அடித்துச் சொன் னார் அது தவறவேயில்லை.

சௌந்தரியின் விதியைக்கேட்டு ஆனைக்கோட்டை ஊர் அழுத போதும், அவளைப் பெற்ற தந்தை பரமானந்தம் அழவுமில்லை–அது பற்றிக் கதையெடுக்கவுமில்லை. தன் சாதியில்லாத வேறு ஒரு சாதிக்காரனையே தன் மகள் முடித்துவிட்டாள் - வீட்டாருக்கோ, ஊராருக்கோ தெரியாமல்ச் செந்தி லுடன் ஓடி விட்டாள் என்பது தான் பரமானந்தரின் அக்கறையின்மைக்குக்

காரணம். ஆனால் பெற்ற வயிற்றுக்குப் பதில் சொல்ல முடியாமல்த் தனக்குள் ளாகவே அழுது தீர்த்தாள் சௌந்தரியைப் பெற்ற சிவனேஸ்வரி. அதுவும் பர மானந்தத்துக்குத் தெரியாதபடி. இன்னமும் அவளது சோகம் மாறவில்லை யென்றால்த் தன் உயிரில்ப் பாதியாயிருந்த சௌந்தரியைப் பறிகொடுத்த செந் திலின் சோகம்? அந்தச் சோகம் ஆறுவதற்கு முன் தன்னுடைய இறுதிச் சொத் தான யாழ் நங்கையையும் இழந்து கவலை –வியாகுலம்– வேதனை ஆகியவற் றால்த் தன்னைப் போர்த்துச் சூனிய உலகிலே வாழாமல் வாழ்ந்து கொண்டி ருக்கிறான் பாவம்.

"செந்திலுக்கு என்னப்பா நடந்தது...." என்று ஊரெல்லாம் கேட்கும் கேள்விக்கும் கேலிக்கும் செந்தில் ஆளாகிவிட்டான் என்றால் எப்படியிருக் கும் செல்வறாணிக்கு. தன் அண்ணனின் நிலை கண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த செல்வறாணி தன் கணவன் கந்தசாமியை மெதுவாகப் பார்த் தாள்.

"அத்தான் இறைவன் எனக்குத் தரவிருக்கும் குழந்தையைத் தவறா மல்த் தந்தால் அந்தக் குழந்தையை... அந்தக் குழந்தையை.... என்ரை.... என்ரை....." வார்த்தைகளைத் தொடர்வதற்கு அவளின் தொண்டைக்குள்க் கருக்கட்டிய சோகம் விடவில்லை. விம்மி வெடித்துக் கந்தசாமியின் மடியிலே முகம் புதைத்து அழுதாள்.

"றாணி.... அப்படியொரு பாக்கியத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறேன். நான் வணங்கும் என்ரை முருகன் அதை எனக்கு நிறைவாகத் தந்தால்–அதுவும் ஒரு பெண் குழந்தையாயிருக்க வேணுமெண்டுதான் ஆசைப்படுகிறன் அந்தக் குழந்தை யாழ் நங்கையாகவே இருக்கும். உன்ரை அண்ணன் செந்திலின் சொத்தாகவே வளரும். இது சத்தியம். செந்திலுக்குத் திடீரென்று ஏற்பட்ட இந்த மனநோய் எந்த மருத்துவத்தாலும் மாறாது. யாழ் நங்கையால்த் தான் மாறும் எண்ட அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கும் இருக்கு–கவலைப்படாதை."

கந்தசாமியின் இந்த வார்த்தைகளால்ச் செல்வறாணியின் சோகக் கண் ணீர் ஆனந்தக் கண்ணீராக உரு மாறியது. யாழ் நங்கை வரவிருக்கும் அந்த நாளைத்தான் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறார்கள் இருவரும். இன்னும் ஆறு மாதம்.

18–04–2004

தினக்குரலில் வெளிவந்தது

# 3 றெஜினாவின் கருணை உள்ளம்

அன்றைக்கு அவனுடைய மனம் வேறெதையுமே யோசிக்காது, கீழ்த் திசை வானத்தில் மட்டுமே கவனஞ் செலுத்தியது. நேரம் காலை எட்டுமணி யிருக்கும். காற்று வீழ்ந்து விட்டதனால் இலைகளும் தளிர்களுங்கூட அசைய வில்லை. அவனுடைய பெருமூச்சுமட்டுந்தான் அடிக்கடி வெளிச்சென்று எந் தச் செடிகளுக்கடியில் அவன் அமர்ந்திருந்தானோ அந்தச் செடிகளைச் சிறித ளவு அசைத்து ஆட வைத்தது. காலத்தை எம்மால் வெல்ல முடியாது காலமே எம்மை வென்றுவிடுகிறது என்று முகை வெடித்த மொட்டு என்ற நாவலில் வரும் அந்த வரிகளை அவன் சிந்தித்தவாறே எழுந்தான், தனது வீட்டுக்குள்ச் செல்வதற்காக.

அது ஒரு குடிசை. மண் சுவர்களால் அமைக்கப்பட்ட அந்தக் குடிசை யின் கூரை தென்னோலை யால் வேயப்பட்டது. சிறியதொரு குடிசை என்றே சொல்லவேண்டும். ஓர் அறை. அந்த அறைமுன் ஒரு விறாந்தை. பக்கத்தில் ஒரு குசினி இது தான் அந்தக் குடிசை.

அந்தக் குடிசைக்குள்க் காலடிவைத்த அவன் தன் மனைவியின் படத்தை நிமிர்ந்து பார்த்துப் பெரு மூச்செறிந்தான். "பார்வதி, உன்னை நான் இழந்ததாலை எல்லாத்தையும் இழந்து போனன். என்னோடை நீ வாழ்ந்த காலமெல்லாம் என்ரை வீட்டிலை நீ ஒரு சரஸ்வதிதான். எல்லாத்திலையும் எனக்கொரு திருப்தியிருந்தது. சாப்பாட்டுக்கோ உடு துணிக்கோ எந்தக் குறை யுமில்லாமல் இந் தக் குடும்பம் காலங்கடத்தியதை இந்தப் பொன்னம்மான் கிராமம் அறியும். ஆனால் இப்ப....."

மாணிக்கத்தின் பெருமூச்சு அந்த மண்சுவர்களில் முட்டி நின்றுவிட் டது. உண்மையிலே ஒரு பக்குவமான பெண் தான் பார்வதி. சகல விஷயங் களையும் அலசி ஆராய்ந்து செய்யும் திறனுடையவள். பக்குவமானவள் மட்டு மல்ல பண்பும் உள்ளவள். மாணிக்கத்தின் மாத வருவாய் போதாதென்பதால் ஒரு கைமெசினை வைத்து அந்தக் கிராமத்துச் சிறுவர்களுக்கு உடுப்புத் தைத் துக் கொடுத்து அதனால் வந்த ஊதியத்தைத் தன் குடும்ப நன்மைக்காகப் பயன்படுத்தியவள் அவள். இன்றைக்கு அவள் இருந்திருந்தால் ஐம்பது வயதை எட்டிப்பிடித்திருப்பாள். அவளின் இறப்பு அந்தக் குடும்பத்திற் கேற்பட்ட ஒரு துர்அதிர்ஷ்டந்தான்.

சென்ற ஆண்டு நொவெம்பரில்ப் பிள்ளைப்பேறுக்காக அவஸ்தைப் பட்ட அவளை யாழ். பொதுவைத்தியசாலைக்கோ பிரத்தியேக மருத்துவ மனைக்கோ கொண்டு செல்லமுடியாத சூழ்நிலையில் அவள் இறந்து விட்டாள். அதை நினைத்தபோது மாணிக்கம் பெருமூச்சோடு மட்டும் நின்றுவிடவில்லை. தனது பாதம் மிதித்த அந்த இடத்தையும் நனைத்துவிட்டான் கண்ணீரால்.

காலத்தை எம்மால் வெல்ல முடியாது. காலமே எம்மை வென்றுவிடுகிறது. என்பது பார்வதியின் வாழ்வில் உண்மையாகிவிட்டதை எண்ணியவாறு வீட்டுக்குள்ச் சென்ற அவன், வேட்டியை மாற்றி ஒரு துவாய்த் துண்டைத் தோளில்ப் போட்டுக் கொண்டு வெளியேறினான்.

மாணிக்கம் சென்றது கந்தர் மடத்தை நோக்கித்தான். தனக்கு ஏதாவது வேலை கிடைக்குமோ என்ற அங்கலாய்ப்போடு சென்றான். அன்றும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலி அடைத்தல், விறகு கொத்துதல், கதியால்ப் போடுதல், குழை வெட்டுதல் போன்ற வேலைகளைச் செய்தே வாழ்க்கை நடத்துபவன் அவன். அறுபது வயதை எட்டியிருக்கும் அவனுக்கு வேலை கொடுக்க எவருமே பின் நிற்பதில்லை. தயங்காமல்க் கொடுப்பார்கள். அவனது நேர்மையே அதற்குக் காரணமாயிருந்தது.

இந்த மாதம் அவனுக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. விடாது மழை பெய்து கொண் டிருந்ததும் அதற்கொரு காரணந்தான்.

வேலை கிடைக்கவில்லையே என்ற மனத்தாங்கலோடு வீடு திரும்பினான் மாணிக்கம். தன் மகள் றெஜினாவுக்குக் கிறிஸ்மஸ் உடுப்பு எடுப்பதற்குக் காசில்லை என்ற மனப்பாரம் அவனுக்கு. கடன்பட்டு வாங்கினால் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பது எப்படி என்பதால் அந்த நிலைப்பாட்டையும் அவன் விரும்பவில்லை. அப்படி வாங்குவதை றெஜினாவும் வெறுப்பவள்.

பதின்மூன்று வயதுச் சிறுமி இந்த றெஜினா. மாணிக்கத்திற்கும் பார்வதிக்கும் பிறந்த முதலாவது குழந்தை தான் அவள். இப்போதிருக்கும் கடைசிக் குழந்தையும் அவள் தான். ஒன்பதாவது ஆண்டில்ப் படித்துக்கொண்டிருக்கிறாள். கெட்டிக்காரச் சிறுமி என்று அவளுடைய ஆசிரியைகளும் ஆசிரியர்களும் அவளது முகத்திற்கு நேர் சொல்லாவிட்டாலும் மற்றையோர்க்குச் சொல்லிக் கொள்வார்கள் – சொல்வதில்ப் பெருமையுங் கொள்வார்கள். படிப்பில்ச் சிறந்தவள் என்றால் ஒழுக்கத்தில் .....? அதை விடச் சிறந்தவள். மேடைப் பேச்சில் – நாடக நடிப்பில்– விளையாட்டுத் துறையில் அவளுக்கு நிகர் அவள் தான்.

ஞாயிற்றுக்கிழமைகளில் - காலை எட்டு மணிக்கு அவள் தவறாது ஆலயத்தில் நிற்பாள். ஒழுங்காக வேதம் படிப்பதிலும் ஜெபம் செய்வதிலும் அவள் ஒரு தனி ரகம். பார்வதியிடம் குடிகொண்டிருந்த நற் பண்புகள் றெஜினாவிடமும் வளர்வதைக் கண்டு பலரும் அவளுக்கு ஆதரவு காட்டினார்கள். அந்த அளவுக்கு அவள் நல்லவளாகவே வளர்ந்தாள்.

இப்படிப்பட்ட தன் மகளுக்குக் கிறிஸ்மஸ் உடை இம்முறை வாங்கவில்

லையே என்ற மனப் பாரத்தோடு வீடு திரும்பிய மாணிக்கம் விறாந்தையில் அமர்ந்திருந்த சிறிது நேரத்தால், தேநீர்க் கோப்பையுடன் வந்து நின்றாள் றெஜினா.

"றெஜினா, இந்த மாசம் எனக்குப் போதிய வருவாயில்லாமல்ப் போன தாலை உனக்குப் புதுச் சட்டை வாங்கித் தரக்கூட என்னாலை முடியேல்லை. அப்பா வாங்கித் தரேல்லையெண்டு கவலைப் படக்கூடாதம்மா. அடுத்த முறைக் கிறிஸ்மஸ்சுக்கு வாங்கித் தாறன்" என்று தகப்பன் சொன்னதைக் கேட்ட றெஜினா அவரின் கண்களிலிருந்து வடியும் நீர்த்துளிகளையும் அவதானித்தாள்.

சின்ன விஷயங்குறித்து என்றுமே அழாத தனது தந்தை ஒரு சின்ன விஷயத்துக்காக இன்று அழுவதை அவளால்த் தாங்க முடியவில்லை. அவருடைய கண்களிலே மல்கிய நீர்த்துளிகளைத் தனது விரல்களால்த் துடைத்தெறிந்தாள் அவள்.

அடுத்தடுத்த வீடுகளில் கிறிஸ்மஸ் ஆரவாரத்தொனிகள் கேட்ட வண்ணமிருந்தன. "மகளே அடுத்த வீடுகளில்க் கிறிஸ்மஸ் விருந்துவைச்சு, கிறிஸ்மஸ் கொண்டாடினம், ஆனால் இந்த வீட்டிலை......." மாணிக்கத்தால் வசனத்தை முடிக்க முடியவில்லை. அவனது அழுகையோ விம்மலாக மாறியது.

"அப்பா, விருந்து வைச்சு ஆரவாரம் செய்வதாலோ இல்லையெண்டால் ஒரு சிலர் செய்வது போலைக் குடிச்சு வெறிச்சு ஆடிப்பாடுவதாலோ கிறிஸ்மஸ் கொண்டாடியிட்டம் – கிறிஸ்துவை மகிழ்ச்சிப்படுத்தியிட்டம் எண்டு நினைக்கிறது தவறப்பா. இதெல்லாம் கிறிஸ்துவைத் திருப்திப்படுத்தாது. கிறிஸ்துவை நாங்கள் மகிமைப்படுத்த வேணுமெண்டால் அந்தக் கிறிஸ்து சொன்ன வழிகளைப் பின்பற்றி நடப்பது தானப்பா முறை. புதுச் சட்டை போடேல்லை– விருந்து வைக்கேல்லை எண்டு கவலைப்பட வேண்டியதில்லை.கிறிஸ்து மறுபடியும் பிறந்திருக்கிறார் எங்களுக்கு நன்மை செய்யிறதுக்காக. ஆனபடியாலை எங்களுக்கு நன்மை பிறக்கப்போகுது எண்ட தைரியத்தோடை வாழவேண்டியது தான் இயேசு கிறிஸ்துவை நம்பிறவர்களுக்குரிய கடமை."

றெஜினா சொன்னதைக் கேட்ட மாணிக்கம் ஒரு கணம் திகைத்துப் போனான். ஒரு சிறுமியின் வாயிலிருந்து வரும் இந்த வார்த்தைகள் அவனை வாயடைக்கச் செய்து விட்டன.

"ஓய்வு நாள்ப் பாடசாலையில் இப்பிடியெல்லாம் சொல்லித்தாறவரப்பா எங்கடை போதகர்." என்று றெஜினா சொன்ன போது, இறைவனின் பண்புகள் எத்தகைய அழுத்தத்தை றெஜினாவின் மனதில்ப் பதித்து அவளை நல்லவளாக்கி வளர்த்து வருகின்றன என்பதை நினைத்த மாணிக்கத்தின் கண்கள் பொங்கிப் பூரித்து, ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்து மகிழ்ந்தன.

அன்று மார்கழி 25 ஆம் திகதி. வழமைபோல் அதிகாலை 5.30 மணிக்கே இருவரும் எழுந்து சமையலை ஆரம்பித்தனர். மாணிக்கம் வழக்க

மாகச் செய்யும் தேங்காய் துருவுதலையும் வெண்காயம் மிளகாய் வெட்டுத லையும் கிணற்றில் நீர் அள்ளிக் கொடுத்தலையும் செய்து முடித்தான். றெஜினா ஒரு சோறும், மீன் குழம்பும், ஒரு மரக்கறியும் ஆக்கி முடித்தாள். அன்றைக்குத் தேவையான மீனையும் காய்கறி வகைகளையும் முதல்நாளே வாங்கி வைப்பது அவர்களின் வழக்கம். அதனால்த் தான் அதிகாலை ஐந்தரை மணிக்குத் தொடங்கும் சமையல், காலை ஏழரை மணிக்கு முடிந்துவிடும். அன்றும் ஏழரை மணிக்குச் சமையலை முடித்துவிட்டுத் தங்கள் தங்கள் வேலைகளில்க் கவனம் செலுத்தினர் இருவரும்.

அன்று மாலை நான்கு மணிக்கு, யாழ் பல்கலைக்கழக வளாகத்துக்குரிய சி.எஸ்.ஐ ஆலயத்தில்க் கிறிஸ்மஸ் மரம் என்றழைக்கப்படும் சிறுவர்களுக்கான பரிசு நிகழ்ச்சிக் கொண்டாட்டம். போவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டி ருந்தாள் றெஜினா. தன்னுடைய சட்டைகளில் நல்லதொன்றை எடுத்துப் பார்த்த அவளின் கண்களிலே ஒரு புதுச்சட்டையும் தென்பட்டது. அதை எடுத்துக் கொண்டு தன் தகப்பனிடம் சென்றாள்.

"அப்பா....."

"என்னம்மா"

"இதிலை ரெண்டு சட்டை இருக்கப்பா. போன வருஷம் என்ரை பிறந்த நாளுக்கு என்ரை அம்மா துணி வாங்கித் தன்ரை கையாலை தைச்சுத் தந்தது இந்தப் பச்சை நிறச்சட்டை. மற்றது, சண்டே ஸ்கூல்ப் பரிசாக எனக்குக் கிடைச்சது நீலச்சட்டை. இதை நான் கொஞ்ச நாட்கள் போட்டிட்டு, என்ரை கையாலை கழுவி அயன் பண்ணி வைச்சனான். ஆனால், இந்தப் பச்சை சட்டையைப் போடாமல்ப் புதிசாகவே வைச்சிட்டன்."

''இண்டைக்கு நீ அதைப் போட்டுக்கொண்டு ஆலயத்துக்குப் போம்மா."

"வேண்டாமப்பா. எங்களை விட மிகமிகக் கஷ்டத்திலையிருக்கிற அந்த மேரிக்குக் கொடுக்கட்டாப்பா."

"றெஜினா"

மாணிக்கத்தால் மேலும் பேச முடியவில்லை. அசந்து போய் நின்று விட்டான். கிறிஸ்மஸ்சுக்குப் போடப் புதுச்சட்டையொன்று கிடைத்தும் அதை, தானே போடாமல் இன்னொரு பிள்ளைக்குக் கொடுக்க றெஜினா நினைத்தபோது சிலைபோல நின்றான் அவன். அப்படி நின்றவனை நிமிர்ந்து பார்த்த றெஜினா

"உங்கடை சம்மதம் இல்லாட்டால் நான் குடுக்கேல்லை அப்பா." என்று சொன்னதும் சிறு புன்னகையை வரவழைத்தான் மாணிக்கம்.

"நீ குடுக்க நினைச்சால் என்னை ஏனம்மா கேக்க வேணும் குடுக்கிறது தானே. கொடுத்தார்க்குக் குறைவில்லை."

"அப்பா நான் எதைச் செய்தாலும் உங்களைக் கேட்டுத்தான் செய்வன். அம்மா எங்களோடை வாழ்ந்த காலத்திலை இதைத்தான் அடிக்கடி எனக்கு ஊட்டுவா.

உன்ரை அப்பா குடிவெறி இல்லாதவர் றெஜினா. சண்டை சச்சரவு தெரியாதவர். யாராவது அவரை ஏசினாலும் அதுக்கு எதிர்வார்த்தை பேசாமல் வீட்டுக்கு வந்திடுவார். எந்தவித கரைச்சலும் எங்களுக்குத் தராமல் எங்களைக் காப்பாற்றுகிறவர் அவர். அப்பிடிப்பட்ட உன்ரை அப்பாவுக்கு நீ எப்பவும் நன்றியாயிருக்க வேணும். அதுமட்டுமில்லையம்மா நீ எங்கை போனாலும் எதைச் செய்தாலும் அப்பாவைக் கேட்டுத்தான் செயல்ப்பட வேணும் எண்டு அம்மா சொன்னதையும் என்ரை மனத்திலை நான் பதிச்சுவைச்சிட்டன். அதனாலைதான் உங்களைக் கேக்கிறனப்பா. உங்கடை பூரண சம்மதத்தோடையும் சந்தோஷத்தோடையுந்தான் எந்தக் காலத்திலும் நான் எதையும் செய்வன் என்று றெஜினா முடித்தபோது மாணிக்கத்தின் இதழ்களிலே புன்னகை ஊர்ந்தது.

“இந்த ஏழைகளில் ஒருவருக்குச் செய்யும் உதவி தான் கடவுளுக்கு நாங்கள் செய்யிற உதவி. இதை நான் நேசித்து நடப்பவனம்மா. எனக்குப் பூரண சம்மதம் - பூரண சந்தோஷம். நீ குடம்மா.”

றெஜினா உடுத்துக்கொண்டு அடுத்த தெருவில் இருக்கும் மேரியிடம் போகிறாள். நேரம் மூன்று பதினைந்து . சுழன்று கொண்டிருந்த மணிக்கூட்டுக் கம்பிகள் சரியாக நான்கு மணியைக் காட்டின.

ஆலய நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிறிஸ்மஸ் மரத்துக் கிளைகளில்க் கட்டப்பட்டிருந்த பரிசுப் பொருட்களை நன்றி கூறிப்பெற்றுக் கொண்டார்கள் ஒய்வு நாள்ப் பாடசாலைச் சிறுவர்கள்.

ஆராதனை முடிந்ததும் போதகர் தனது சிற்றுரையைத் தொடங்கினார். “அன்பு, தியாகம், மன்னிப்பு, பிறர்க்கு உதவி செய்யும் தன்மை ஆகிய பண்புகளின் அடையாளமே இயேசு கிறிஸ்து. அந்த அடையாளங்களை நாங்கள் பின்பற்றினால் - கைக்கொண்டால் நாங்களும் நல்ல நிறைவை அடைந்து வாழலாம். ஆகவே, இயேசு கிறிஸ்து பிறந்த இந்த நாளில் இயேசுவை உண்மையாகவும் உறுதியாகவும் பின்பற்றும் பலருக்கு நன்மை பிறப்பது ஆச்சரியமல்ல. அத்தகைய நன்மையைப் பெறும் ஒரு சிறுமி எமது ஆலயத்திலும் இருக்கிறாள். அவள் தான் றெஜினா” என்றதும் பரவசத்துக்கோபுரத்திலே மாணிக்கம் ஏறாமல் இறைவனுக்கு நன்றியைக் கூறிக்கொண்டான் தனது உள்ளத்தால்.

கனேடிய அரசினால் வழங்கப்படும் கெட்டிக்கார ஆனால் ஏழைச் சிறுவர்களுக்கான புலமைப் பரிசில் இம்முறை ஆலயக் குருவானவர் வணபிதா தேவ் ஆனந்தராசாவின் சிபாரிசினால், சி.எஸ்.ஐ பிஷப் அவர்கள் றெஜினாவைத் தேர்ந்தெடுத்ததை ஆலயத்தில் அமர்ந்திருந்த அனைவரும் வரவேற்றார்கள். ஆலய நிகழ்ச்சி முடிந்தது.

அடுத்த ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவியாகும் றெஜினாவை வாழ்த்தினார்கள் எல்லோரும்.

24-12-1988

சஞ்சீவியில் வெளிவந்தது

# 4 பட்டமளிப்பு நாள் அன்று...

எங்களுக்குப் பெண் குழந்தை பிறக்கப்போகுது என்று தங்களுக்குள் ஆசையாகச் சொல்லிக் கொண்டிருந்த அந்தத் தம்பதிகளுக்கு அழகான பட்டர் நிறத்தோல் போர்த்த குழந்தையாகப் பிறந்தவள் ஜெனிற்றா. திருமணமாகி ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் அவள் பிறந்ததால், அவளை மிகமிகச் செல்லமாக வளர்த்தவர்கள் அவளது தாய் தந்தையர் மட்டுமல்ல, அவளது பாட்டன் பாட்டி ஆகியோருந்தான்.

அழகான மூக்கும் கொளுத்த சொக்குகளும் கவர்ச்சியான சுருள் முடியும் கராம்புக்காய்க் கண்களும் பெண்ணொருத்திக்கு அமைய வேண்டிய மெல்லிய உடலுமாக வளர்ந்து ஐந்து வயதை அவள் நிறைவு செய்தபோது, அவளுக்குத் தங்கையாகப் பிறந்தாள் ஜெனிக்கா. ஜெனிக்காவின் இரண்டாவது வயதில், அவளுக்கிருக்க வேண்டிய உடலின் நிறை போதாதென்பதை அறிந்த அவளின் தாய் தந்தையர், அவளை யாழ் மருத்துவரொருவரிடம் காட்ட நேர்ந்தது.

இந்தப் பிள்ளைக்கு இருதயத்திலை ஒரு துவாரம். நீங்கள் கொழும்பு வைத்தியசாலையிலை காட்டினியளெண்டால் நல்லது என்று ஜெனிக்காவைச் சோதித்த அந்த மருத்துவர் கூறிய ஆலோசனைப் படி, ஜெனிக்காவைக் கூட்டிக்கொண்டு கொழும்பு சென்று விட்டார்கள் அவளது தாய்தந்தையர். அதனால், ஜெனிற்றாவை வளர்க்கும் பொறுப்பு அவளுடைய தாயின் தாய்க்கும் தகப்பனுக்கும் அதாவது பாட்டி பாட்டனுக்கு ஆகிவிட்டது. ஜெனிற்றாவின் பாட்டன் பாட்டி இருவரும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களாயிருந்ததால், அறிவுச் சிறப்பும் ஒழுக்கச் சிறப்புமுடைய ஒருத்தியாக ஜெனிற்றாவை வளர்க்க வேண்டுமென்ற ஆவலையும் தத்தம் உணர்வுகளில்ப் பதித்துக்கொண்டே அவளை வளர்க்கத் தொடங்கினார்கள்.

வானிலை மாற்றங்கள் போல ஜெனிற்றாவின் வளர்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. வீட்டார் மட்டுமல்ல மற்றவர்களும் ஆச்சரியப்படத்தக்கதான தோற்றங்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்தாள் ஜெனிற்றா. பருவமானாள்–மங்கையானாள்–பெண்ணுக்குரிய உருவமானாள்–ஏ.எல்த் தேர்விலும் சிறப்பான வெற்றி பெற்றாள்.

அதனால் யாழ் பல்கலைக்கழகம் தனது மாணவிகளுள் ஒருத்தியாக அவளையும் சேர்த்தபோது அவளடைந்த மகிழ்ச்சியைவிட, எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தவர்கள் அவளது பாட்டன் பாட்டியாகிய யேசுறாஜா யேசு

மலர் ஆகியோரும் ஜெனிற்ராவின் ஒரேயொரு தாய்மாமன் யேசடியானும் என்பதே உண்மை. கொழும்பில் வாழ்ந்துவரும் ஜெனிற்ராவின் தந்தை ஞான சீதன் தாய் தேவசீலி தங்கை ஜெனிக்கா ஆகியோருக்கு ஒரே குதூகலம்.

அவர்களின் அந்தக் குதூகலத்தை ஜீரணிக்க ஜெனிற்ராவால் முடிய வில்லை. யாழ்ப்பாணம் வந்து தன்னை அவர்கள் வாழ்த்தவில்லை என்ற பெருங்கவலை அவளது நெஞ்சை நிறைத்திருந்தது. இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக அதை மறந்து படிக்கத் தொடங்கினாள். வரப்போகும் பல்கலைக் கழகத் தேர்வுகளனைத்திலும், தான் மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும் – அந்த நேரத்திலாவது தன்னை அவர்கள் நேரடியாக வந்து வாழ்த்த வேண்டும் என்ற எதிர்பார்ப்புத்தான், கவலையைக் கொஞ்சங் கொஞ்சமாக மறக்கச் செய்து அவளைப் படிக்க வைத்தது.

கிழமை நாட்களில் இரவிலும் சனி ஞாயிறு என்றால் காலை மாலை இரவு ஆகிய நேரங்களிலும் ஒரே படிப்புத்தான். வீட்டுக்குப் பின்புறமுள்ள வேப்பமர நிழலில் அல்லது முற்றத்திலுள்ள மாமர நிழலில் அவளைக் காண லாம். ஒரு மேசை ஒரு கதிரை ஒரு சில பாடப்புத்தகங்கள் நோட்ஸ் கொப்பி கள் ஓரிரு பேனாக்கள் ஆகியவற்றோடு காணப்படும் அவள், தனது மனதைப் படிப்பதில் மட்டும் ஒரு நிலைப்படுத்திக் கொண்டிருப்பாள். வேறு சிந்தனை அவளுக்கு இருக்கவேயிருக்காது. தேநீர் வேளை வந்ததும் அவளுக்குரிய தேநீர் அவளைத் தேடி வந்து விடும். தேநீர் கொண்டு வருவது ஒன்றில்ப் பாட்டி அல்லது பாட்டனாயிருக்கும். தேநீரோடு சேர்த்து பிஸ்கற் அல்லது றோல்ஸ் அல்லது கேக் அல்லது பற்றிஸ் அல்லது வடை ஏதோ ஒன்று.

காலங்கள் ஓடிக்கொண்டிருந்தன. இறுதித் தேர்விலும் அவள் சிறப்பு வெற்றியை அடைந்து விட்டாள். இப்போது அவளொரு பட்டதாரி. பீ.பீ.ஏ என்று சொல்லப்படும் நிர்வாகமாணிப் பட்டதாரியான அவள் தனது, தாய் தந்தையர்க்கு அதை அறிவித்தபோதும் எதிர்பார்த்த பதிலை அவர்களிடமி ருந்து அவள் பெறவில்லை. வந்த பதில் ஜெனிற்ராவை மட்டுமல்ல ஜெனிற்ரா வின் பாட்டன் பாட்டியின் உள்ளங்களையும் செல்லரித்த கடதாசித் துண்டுக ளாக ஆக்கிவிட்டது.

“அப்பாவுக்கு ஒரு கையும் காலும் வழங்காது. பக்கவாதம். அவற்ரை ஐம்பத்தாறாவது வயதிலை அவருக்கு இப்பிடியொரு சோதினை. இனி அவற்ரை வாழ்க்கை எப்படியிருக்கப்போகுதோ” என்று சொல்லி முடிக்குமுன் அழத் தொடங்கினாள் ஜெனிற்ரா. யேசுறாஜா யேசுமலர் ஆகியோரின் வேதனையோ சொல்லியடங்கா. வேலை முடித்து வீடு வந்த யேசடியான் சேதி கேட்டதும் கத்திக் கதறியபடி தனது கட்டிலில்க் குப்புற விழுந்து விட்டான்.

யேசுறாஜா யேசுமலர் தம்பதிகளின் ஒரேயொரு மகன் தான் யேசடி யான். யாழ்ப்பாணத்திலுள்ள பிரத்தியேக நிறுவனமொன்றில்க் காசாளராக வேலை பார்க்கும் அவனுக்கு இப்போது நாற்பத்தைந்து வயது. அக்காள் தேவ சீலியை விட ஐந்து வயது இளையவன்.

தனக்குக் கலியாணமே வேண்டாமென்று பிரமச்சாரியத்தைக் கட்டிப் பிடித்தபடி அக்காள் தேவசீலியின் வீட்டிலுள்ள (தாய் தகப்பன் தேவசீலிக்குச் சீதனமாகக் கொடுத்த வீடு) மூன்று அறைகளில் ஒன்றிலே தங்கியிருக்கிறான்.

அவனது திருமணத்தைப் பற்றி ஞானகீதன்–தேவசீலி–யேசுறாஜா –யேசுமலர் நால்வரும் எவ்வளவோ வற்புறுத்தியும் திருமணஞ் செய்ய அவன் மறுத்து விட்டான்.

ஆனாலும் தேவசீலியில் அவனுக்கு அளவு கடந்த பாசம். அத்தான் ஞானகீதனிலும் அப்படித்தான். அதனால்த் தான் ஞானகீதனுக்குப் பக்கவாதம் என்று அறிந்ததும் வேதனை தாங்க முடியாமல்க் கத்திக் கதற்றியபடி தனது கட்டிலில் விழுந்துவிட்டான் பாவம்.

இது நடந்து ஒரு கிழமையால் ஞானகீதன் தேவசீலி ஜெனிக்கா மூவரும் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள். அன்றிலிருந்து ஜெனிற்ராவின் போக்கி லொரு மாற்றம். நடக்க முடியாத தனது தந்தைக்கு வேண்டிய உதவிகள் செய் வதற்கு அவள் தவறுவதேயில்லை.

யாழ்ப்பாணத்திலும் ஞானகீதனுக்கு அக்குப் பஞ்சர் வைத்தியந்தான். கொழும்பில் அக்குப் பஞ்சர் வைத்தியஞ் செய்தவர் தான் யாழ்ப்பாணத்தி லுள்ள அக்குப் பஞ்சர் வைத்தியரையும் இவனுக்கு அறிமுகப்படுத்தியிருந்தார். ஊசி மருந்து மூலம் இந்த வைத்தியர் செய்யும் வைத்தியமும் இவரின் ஆலோ சனைப்படி ஞானகீதன் செய்யும் தேகப்பயிற்சியும் ஞானகீதனை ஒரு சிறு தூரம்வரை நடக்கவைத்தன - அதுவும் தடியின் உதவியுடன். ஞானகீதனின் இந்த நிலை யேசடியானுக்கும் ஆறாத கவலையைத் தராமலில்லை. யேசுறா ஜாவுக்கும் யேசுமலருக்கும் நெஞ்சு வெடிக்கும் கவலை. இருந்தும் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல்த் தத்தமது நாளாந்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

அன்று பட்டமளிப்பு நாள். தாயும் மகளுமாகப் புறப்பட்ட நேரம் அம் மஜி......அப்புஜி......என்று யேசுமலரையும் யேசுறாஜாவையும் செல்லமாகக் கூப்பிட்டுக் கொண்டே இருவரிடமும் வந்தாள் ஜெனிற்ரா.

“போட்டு வாம்மா. எண்டைக்கும் நீ சிறப்பாக இருக்க வேணுமெண்டு ஒவ்வொரு நாளும் கையெடுத்து என்ரை யேசுவை நான் கும்பிட்டது வீண் போகேல்லை. தெய்வம் உனக்கு எப்பவும் துணையிருக்கும்.”

கன்ன்ங்கன்னமாய் ஜெனிற்ராவைக் கொஞ்சியபின் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் யேசுமலர். “சரி சரி ... உத்துப் பாத்தது போதும். நேரமாகுது. பிள்ளை போட்டு வரட்டும் ” என்று கூறிய யேசுறாஜா ஜெனிற்ரா வின் கன்னங்களைக் கொஞ்சிய பின் யேசுமலரைப் பார்த்தார். இருவரும் சேர்ந்து விடை கொடுத்ததும் தனது தாயாருடன் புறப்பட்டாள் ஜெனிற்ரா.

யாழ் பல்கலைக்கழகம் கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீற்றர் தூர மிருக்கும். தெருப்படலையருகில் இவர்களுக்காகக் காத்திருந்த ஓட்டோவில் இருவரும் ஏறிவிட்டார்கள். பல்கலைக்கழகத்தை நோக்கி நகர்ந்து கொண்டி ருந்தது ஓட்டோ. போகும் வழியெல்லாம் யேசுமலரின் நினைவு தான் ஜெனிற் ராவுக்கு.

“வினாடிக்கு வினாடி என்ரை செல்லம் என்ரை குஞ்சு எண்டு வாயூற ஊறச் சொல்லிற என்ரை பாட்டி இண்டைக்கு எனக்கொரு விசேஷமெண்டு தெரிஞ்சும் ஏன் என்னைச் செல்லமெண்டோ குஞ்செண்டோ சொல்லாமல்ப் போட்டு வாம்மா எண்டு மட்டுஞ்சொன்னவ.”

அவளுடைய மனதிலேயெழுந்த இக்கேள்வி அவள் போய்க்கொண்டிருந்த வழியிலே வீசிய காற்றோடு காற்றாகக் கலந்து கொண்டிருந்தது. "ஒரு வேளை விழாவுக்குத் தன்னைக் கூட்டிக் கொண்டு போகேல்லையெண்ட கோபமோ?"

இப்படியும் அவள் நினைக்கத் தான் செய்தாள். அப்படி நினைத்தபோதெல்லாம் அவளுடைய கண்ணுக்குள் நீர்த்துளிகள் தேங்கித் தேங்கி உறைந்து கொண்டிருந்தன. இருந்தும் தனது தாய்க்கு அது தெரியக்கூடாது என்பதால் அதை மறைத்தபடி பட்டமளிப்பு மண்டபத்துள் நுழைந்த அவள் தாய்க்குரிய இருக்கையைக் காட்டிவிட்டுத் தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்து விட்டாள்.

அமர்ந்தவளால்ப் பாட்டன் பாட்டியை மறக்கமுடியவில்லை. தனது கண்முன்னால் அவர் களிருவரும் நிற்பது போன்ற ஒரு உணர்வு. பட்டமளிப்பு முடிந்ததும் உடனடியாக வீடு செல்ல வேண்டும். அம்மஜியையும் அப்புஜியையும் படம்படமாய் எடுக்க வேண்டும் நிறைய எடுக்க வேண்டும் ஆசைதீர எடுக்க வேண்டும் என்ற நினைவைத் தனது நெஞ்சிலே அவள் நிறைந்தபோது நேரம் நான்கு முப்பது.

ஜெனிற்றா ஞானகீதன் என்ற பெயர் கூப்பிட்டதும் பாட்டியையும் பாட்டனையும் தனது மனதிலே நினைத்துக் கொண்டு சான்றிதழைப் பக்குவமாகப் பெற்றுத் தனது ஆசனத்துக்குத் திரும்பினாள் ஜெனிற்றா.

அதே வேளை ஜெனிற்றாவின் நினைவைத்தனது நெஞ்சிலே இடைவிடாது ஏந்தியபடி தனது காரியங்களைச் செய்து கொண்டிருந்த யேசுமலருக்கு, சொல்லவேண்டிய எதையோ தான் சொல்லாமல் விட்ட ஒரு உணர்வு. மெதுவாக்கூப்பிட்டாள் யேசுறாஜாவை.

"என்ரை செல்லத்துக்கு இப்ப சேட்டிப்பிக்கற் கிடைச்சிருக்கும் இல்லையா அப்புஜி.?" ஜெனிற்றா எப்படிக் கூப்பிடுகிறாளோ, அப்படித்தான் ஜேசுமலரும் தனது கணவனை இப்போது கூப்பிடுவது வழக்கம்.

"இப்ப மணி ஐஞ்சரை - பிள்ளை இப்ப மைதானத்திலை படமெடுத்துக் கொண்டிருக்கும்." யேசுறாஜா இப்படிச் சொன்னதும் தொடர்ந்தாள் யேசுமலர்.

"என்ரை செல்லத்தின்ரை பட்டமளிப்பு விழாவைப் பாக்கவேணுமெண்டு ஆசைப்பட்டனான். ஆனால்......?" அதற்கு மேல் அவளால்ப் பேச முடியவில்லை. மனதுக்குள்த் திரண்டு வளர்ந்து அவளை வேதனைப்படுத்திக் கொண்டிருந்த அந்த ஆதங்கக் கட்டி, வெடித்துச் சிதறியதும் யேசுறாஜாவின் மடியில்ச் சாய்ந்தபடி பற்களைக் கிட்டினாள். கண்கள் சிறிது சிறிதாக மூடத் தொடங்கின. தொண்டைக்குளிருந்து வெளிவந்து கொண்டிருந்த இழுவல்ச் சத்தத்தைக் கேட்ட யேசுறாஜா. அய்யோ அம்மஜி அம்மஜி" என்று கத்தத் தொடங்கி விட்டார்.

ஜெனிற்றா கூப்பிடுவது போலத்தான் அவரும் யேசுமலரைக் கூப்பிடுவது வழக்கம். எத்தனையோ அம்மஜிகள் அவனது வாயிலிருந்து புறப்பட்ட போதும் யேசுமலரிடமிருந்து பதிலில்லை. தொண்டை வெடிக்கக் கத்தினார். அவருடைய கத்தலையும் கதறலையும் கேட்டுத் தடியின் உதவியுடன் அங்கு வந்த ஞானகீதனின் உள்ளம் பதறத் தொடங்கியது.

ஞானகீதன் யேசுறாஜா இருவரும் கதறிக் கதறியழுத ஓசைகேட்டு ஓடி வந்த அயல் வீட்டு ஆயுள்வேத வைத்தியர் தயாளநாதர் யேசுமலரின் நாடி பார்த்தார். அவரின் கண்கள் குளமாகிக் கொண்டிருந்தன.

அப்போதுதான் வேலைவிட்டு வீடுவந்தான் யேசடியான். அவனு டைய நிலையைச் சொல்ல வேண்டியதேயில்லை. ஒரே கத்தலும் புலம்பலுந் தான் "ஐயோ என்ரை அம்மா என்ரை அம்மா என்னை விட்டிட்டுப் போட்டி யளே அம்மா" என்று கத்திக் கதறியழுத அவனோடு சேர்ந்து அங்கிருந்த மற் றவர்களும் கத்தத் தொடங்கிவிட்டார்கள்.

யேசுமலரின் பூதவுடல் கிடத்தப்பட்ட கட்டிலில் எரிந்து கொண்டி ருந்த மெழுகுவர்த்தி தன்னைத்தானே எரித்து உருகிக் கொண்டிருந்தது. ஜெனிற்றாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த யேசுறாஜாவின் மன தில் ஒரு சில எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன.

"உனக்குப் பட்டம் கிடைக்கிற அந்த நிகழ்ச்சியைப் பாக்க வேணு மெண்டு நெஞ்சு நிறைஞ்ச ஆசையோடை காத்துக்கொண்டிருந்தவ உன்ரை அம்மஜி. ஆனால் நீ.........? அவவை விட்டிட்டு உன்ரை அம்மாவைக் கூட் டிக் கொண்டு போட்டாய். தன்னை நீ கூட்டிக்கொண்டு போய்க் காட் டேல்லை எண்டதை என்னட்டைச் சொல்லிச் சொல்லித் தன்ரை நெஞ்சிலை யிருந்த அந்தச் சுமையைக் கொஞ்சங் கொஞ்சமாயிறக்கி என்ரை நெஞ்சிலை போட்டிட்டுப் போட்டா உன்ரை அம்மஜி. தன்ரை பாசத்தையெல்லாம் கொட்டிக்கொட்டி உன்னை வளத்தவ உன்ரை அம்மஜி. நீ திரும்பிவர ஒரு ஐஞ்சு நிமிஷம் பிந்தினாலும் அவவின்ரை உடம்பிலை ஏதோ ஒண்டு குத்திக் கிழிச்சு அவவைக் கொல்லிற மாதிரியிருக்கும்.

"ஐயோ என்ரை செல்லம் இன்னும் வரேல்லை. வகுப்புக்குப் போன என்ரை குஞ்சுக்கு என்ன நடந்துதோ தெரியாது. போய்ப்பாத்து வாருங்கோ அப்புஜி எண்டு என்னை அந்தரப்படுத்துவா. அந்த நேரம் பாத்து நீ திரும்பி வருவாய். அவ்வின்ரை உடம்பிலை தேனூறிக் கொண்டிருக்கும். கன்னங் கன்னமாய் உன்னைக் கொஞ்சுவா . இதெல்லாம் தெரிஞ்சும் ஏனம்மா பிழை விட்டனி. நீ படிச்ச பெண். சரி பிழை எது எண்டு உனக்குத் தெரியும். சரியாய் நீ யோசிச்சிருந்தால் அம்மஜி இண்டைக்கு எங்க ளோடையிருந்திருப்பா. நீ பிழைவிட்டதாலை அம்மஜி இண்டைக்கு எங்களோடையில்லை. நீயும் நானும் அம்மஜியை இழந்திட்டம் "என்றெல்லாம் ஜெனிற்ரா வந்ததும் சொல்ல வேண்டுமென்று யேசுறாஜா நினைத்துக் கொண்டிருந்த அதே நேரந் தான் வீட்டுக்குள்க் காலடிவைத்தார்கள் ஜெனிற்றாவும் தேவசீலியும்.

எப்படியிருந்திருக்குமென்று கதை கேட்கும் நீங்களே நினைத்துப் பாருங்கள் "ஐயோ என்ரை அம்மா என்ரை அம்மா"என்று தேவசீலியும் ஐயோ என்ரை அம்மஜி என்ரை அம்மஜி என்னை விட்டிட்டுப் போட்டியளே அம்மஜி. எனக்குப் பட்டம் கிடைச்சதைப் பாக்கிறதுக்கு உங்களை நான் கூட் டிக்கொண்டு போகேல்லை எண்ட கவலையிலை என்னை விட்டிட்டுப் போட்டியளா அம்மஜி. என்ரை அம்மஜியை நானினி எங்கை பாக்கிறது. என்ரை தெய்வமே என்ரை யேசுவே ஏனையா எனக்கிந்தச் சோதினை. சொல்லு தெய்வமே சொல்லு," என்று ஜெனிற்றாவும் கத்திக்கதறி அழுது

கொண்டிருந்தார்கள். எல்லை கடந்த பாசத்தோடும் பண்பான வழிப்படுத்தலோடும் தன்னை வளர்த்த தனது அம்மஜியின் முகத்திலே முகம் புதைத்து அழுதுகொண்டிருந்த நிலையை ஜெனிற்ரா நிறுத்தவில்லை.

அடுத்த நாள் மாலை மூன்று மணிக்கு யேசுமலரின் பிரதேச ஊர்வலம். ஏராளமான மக்கள் கூட்டம். யேசுமலர் மக்களோடு பழகும் விதம் அந்த மாதிரி. கருத்து வேற்றுமை காரணமாக ஒருசிலர் அவளோடு அப்படியிப்படித் தான். தன்னோடு அவர்கள் கோபம் என்பதற்காக, அவர்களுக்கு எதிராக அவள் எவருக்கும் எதையுஞ் சொல்வதில்லை. தானும் தன்ரை பாடுமாயிருப்பாள். அதனால்த்தான், அவள் காலமானதைக் கேள்விப்பட்டு அங்கு வந்தவர்கள், அவளைப்பற்றியே கதைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொதுவாக ஒரு மையவீட்டுக்கு - ஒரு சாவுவீட்டுக்கு வருவோரில் எண்பது வீதமானோர் இறந்த வரைப் பற்றிக் கதைப்பதில்லை. தங்கள் தங்கள் வீட்டுக் கதைகளை - அலுவலகக் கதைகளை - மற்றவர்கள் செய்யும் தவறுகளை-அரசியல் விவகாரங்களை வெளிநாட்டில் நடப்பவைகளைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருப்பதுதான் வழக்கம். ஆனால் இன்று வயல்தரைக் கிராம மையவீட்டுக்கு வந்த அத்தனை பேரும் யேசுமலரின் அருமைபெருமைகளையும் அக்குடும்பத்தின் ஒழுக்கத்தையுமே அலசிக்கொண்டிருந்தார்கள். யேசுமலரை முழுமையாக அறியாதவர்களும், அவளை அறிந்துகொள்ள இது ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது.

மாலை மணி சரியாக மூன்று. "தெய்வ ஆட்சி நாடு ஒன்று விண்ணில்"... என்ற பாடலோடு தொடங்கிய நல்லடக்க வழிபாட்டு ஆராதனை "மரணத்தின் பின் வாழ்வு" என்ற தலைப்பில்ப் போதகர் ஆற்றிய உரையோடு முடிவுற்றது. நேரம் நான்கு பதினைந்து. யேசுறாஜாவும் ஜெனிற்ராவும் அழுகையை நிறுத்தவேயில்லை. யேசடியான் - தேவசீலி - ஞானகீதன் மூவரும் வேதனை தாங்காது அழுது கொண்டிருந்தார்கள்.

சேமக்காலையில் நடந்த இறுதி ஆதாரனையின் முடிவில் ஒரு பிடி மண்ணைக்கிள்ளி அம்மஜி என்று கத்தத் தொடங்கிய ஜெனிற்ராவின் உடல் நிலையில்த் திடீரென ஒரு தளர்வு. உடல் தளர்ந்து விழப்போன அவளை யேசுறாஜா அணைத்துத் தாங்கிய அதே நேரம், யேசுமலரின் உடல் அடக்கஞ் செய்யப்பட்டது. உரியவர்களிடம் விடைபெற்ற மக்கள் அங்கிருந்து கலையத் தொடங்கினர்.

யேசடியான் - தேவசீலி - ஞானகீதன்-ஆகியோரை ஏற்றிவந்த காரின் முன்னாசனத்தில் யேசுறாஜாவும் அவரது இடது பக்கத்தில் ஜெனிற்ராவும் அமர்ந்திருக்கக் கார் புறப்பட்டது. "என்ரை செல்லத்துக்கு எதைச் சொல்ல வேணுமெண்டு நினைச்சனோ அதை இனிச் சொல்லமாட்டன்" என்ற உறுதியோடு நடமாடுகிறார் யேசுறாஜா. ஆனால் ஜெனிற்ரா? ஜெப அறையிலிருக்கும் யேசுமலரின் படத்தைக் கொஞ்சு கொஞ்சென்று கொஞ்சியபின், தனது கடமையிலே ஈடுபடுவாள். ஆனாலும் அவளின் மனதிலே பட்டமளிப்பு நாளிலே நடந்த அந்தத் துர்அதிர்ஸ்ட நிகழ்வு மட்டும் ஊற்றெடுத்துக்கொண்டேயிருந்தது.

# 5 எவர் தேடியுமென்ன...

கிளைகள் பரப்பி வியாபித்துக் காணப்படும் அந்த மாமர நிழலில்த் தான் அந்தப் பிரத்தியேகக் கணித வகுப்பு நடந்துகொண்டிருக்கிறது. நிழல் தரும் அந்த மாமரத்தைச் சுற்றி நாலாபக்கமும் பூந்தோட்டம். அந்தப் பூந் தோட்டத்தின் இடையிடையே ஐந்தாறு கோப்பி மரங்கள். ஆறடிக்கு மேல் வளரவிடாமல் மட்டமாகக் கத்தரிக்கப்படும் மரங்கள் தான் அவை. பூந்தோட் டத்தின் நடுவிலுள்ள மல்லிகைப் பந்தலுக்கும் பூந்தோட்டத்தின் வடக்கு எல் லைக்குமிடையில்த் தான் அந்த மாமரமும் அதன் நிழலிலுள்ள வகுப்பறையும். அந்த வகுப்பறைக்குப் போவதற்காக அந்தப் பூந்தோட்டத்தின் தெற்குப் பக் கத்தில் ஒரு வாசல் விடப்பட்டிருக்கிறது.

மல்லிகை, றோசா, கோப்பி ஆகியவை பூக்கின்ற காலத்தில் அந்த வாசலில் நின்றால்ப் போதும், நிற்கின்றவரின் மூக்கைத் தொளைத்துக் கொண்டு வாசம் வாசமாய் வரும். அந்த வாசத்தை முகர்ந்து தத்தமது மனங் களைச் சந்தோஷத்தால் நிரப்பிக்கொண்டு, செய்யவேண்டிய வேலைகளைச் செய்வார்கள் அந்த வீட்டிலுள்ளவர்கள். அவர்களுடைய வீட்டுக்கு வருபவர் களும் அந்தப் பூந்தோட்டத்தின் பரப்பளவையும் அழகையும் அங்கிருந்து எழும் நறுமணத்தையும் சுவைக்காமல் அகல்வதில்லை.

இரண்டு பரப்பிலமைந்த பூந்தோட்டமென்றால் எப்படியிருக்கும்? அதன் நடுவிலிருக்கும் மல்லிகைப் பந்தலுக்குள் மூன்று சீமெந்து மேசைகள். அந்த மேசைகளைச் சுற்றி ஆறு ஆறு பிரம்புக் கதிரைகள். அருகிலொரு தண் ணீர்ப் பைப். மாலை நேரம் ஐந்தரை மணிக்கு நல்லறாஜன், புனிதவதி, சுஜாந் தன், சுஜானிக்கா நால்வரும் சீமெந்து மேசைகளைச் சுற்றியுள்ள கதிரைகளில் அமர்ந்து தேநீர் அருந்து வார்கள். இடையிடையே தங்கள் ஊரின் தற்போ தைய வளர்ச்சி பற்றியும் நாட்டின் அரசியல் நடப்புப் பற்றியும், தங்கள் உற் றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரின் சுகங்கள், துக்கங்கள் பற்றியும் அல சிப் பார்ப்பது அவர்களின் மாலைநேரச் செயல்ப்பாடுகளில் ஒன்று. இந்த நிகழ்வு கூடுதலாக ஒரு மணிநேர நிகழ்வாகவே இருக்கும்.

இந்த நிலை இப்போது அங்கில்லை. நல்லறாஜனின் மகன் சுஜாந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் டொக்ரராகப் பாஸ் பண்ணிய அடுத்த மாதமே கொழும்பிலுள்ள பிரத்தியேக வைத்தியசாலையொன்றில் வேலை

கிடைத்துக் கொழும்பு சென்றது - மகள் சுஜானிக்கா தனது மாலை நேரம் முழுவதையும் எதிர்வரும் ஏ.எல்ப் பரீட்சைக்காகச் செலவிடுவது - மனைவி புனிதவதி தனது பாடசாலை மாணவிகளுக்குப் படிப்பிக்க வேண்டிய அடுத்த நாள்ப் பாடங்களை ஆயத்தம் செய்வதில் நேரத்தைப் போக்குவது ஆகியவை தான் இந்த நிலைக்குக் காரணம். ஆனபடியால் மாலை நேரங்களில் நல்லறாஜ னைத் தவிர மற்றெவருமே அந்த இடத்தை நாடுவதில்லை. காலையில் அப் படியில்லை. ஆசிரியரும் மாணவர்களுமாகக் காட்சியளிப்பார்கள் அந்த மாமர நிழலிலுள்ள கணித வகுப்பறையில்.

சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில் நடைபெறும் அந்தக் கணித வகுப்பு கள் காலை ஒன்பது மணி தொடக்கம் பதினொரு மணி வரை இரண்டு மணித் தியால வகுப்புக்களாக நடைபெற்றுக் கொண் டிருக்கும். முதல்த் தடவை அல் லது இரண்டாவது தடவை பரீட்சை எடுத்துத் தோல்வி கண்டவர்களுக் கென்று நடத்தப்படும் இந்த வகுப்புக்கள் சனி, ஞாயிறு நடைபெறுவதில்லை. நல்லறாஜனுக்கும் அங்கு படிக்கும் பிள்ளைகளுக்கும் ஓய்வு தேவை தானே. அதற்காகவே அந்த இரண்டு நாட்களையும் நல்லறாஜன் தவிர்த்து மற்ற ஐந்து நாட்களிலும் வகுப்புகள் நடத்துகிறான் போலும்.

வகுப்புகள் நடைபெறும் காலை நேரங்களில் நல்லறாஜனின் மனைவி புனிதவதியும் மகள் சுஜானிக்காவும் வீட்டிலிருப்பதில்லை. காலை எட்டு மணிக்குப் பாடசாலை செல்லும் அவர்கள் வீடு திரும்பும்போது, பிற்பகல் மூன்று மணியாகிவிடும். கொழும்பில் வேலை பார்க்கும் டொக்ரர் சுஜாந்தன் பொறுப்பான நேர்மையான சேவையாளனென்பதால், தேவையில்லாமல் லீவு எடுப்பதை அவன் விரும்புவதேயில்லை. தாய் தந்தை சகோதரி மூவரையும் பார்ப்பதற்கு யாழ்ப்பாணம் போகவேண்டு மென்று அவன் லீவு எடுத்தாலும் சனி, ஞாயிறு உட்பட ஐந்து நாள்கள் மட்டுந்தான். அதுவும் ஆண்டுக்கு ஒரு முறைக்கு மேலில்லை.

இப்படியான நிலையொன்று அந்தக் குடும்பத்தில் உருவாகியதால், நல்லறாஜன் மட்டுந்தான் வீட்டில். தன்னந்தனியாக இருப்பதை அவன் விரும் புபவனல்ல. யாராவது ஒருவருடன் பேசிக் கொண் டிருக்க வேண்டுமென்ற உணர்வுடையவன் அவன். அதனால்த்தான், ஏ.எல்த் தேர்வில்த் தோல்வி யடைந்த மாணவ மாணவிகளுக்காகத் தனது வளவிலுள்ள மாமர நிழலில் பிரத்தியேகக் கணித வகுப்பை நடத்திக்கொண்டிருக்கிறான்.

பிரத்தியேகக் கல்லூரியான யாழ் - மகேசன் கல்லூரியில் முப்பத் தைந்து ஆண்டுகள் கணிதம் கற்பித்த நல்லறாஜன் இளைப்பாறி மூன்று மாதங் கள் முடியுமுன், பல மாணவ மாணவிகளின் இடைவிடாத தூண்டுதலின் காரணமாகவே, இந்தப் பிரத்தியேகக் கணித வகுப்பை அவன் ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. யாழ் - குடாநாட்டின் மிகச் சிறந்த கணித மேதைகளுள் நல்லறாஜனும் ஒருவன். பாடசாலையில் அவன் படிப்பித்துக் கொண்டிருந்த காலத்தில், யாழ். கல்வி வலய அதிகாரிகளால்க் கணித ஆசிரியர்களுக்கென ஒழுங்கு செய்யப்படும் கருத்தரங்குகளில் நல்லறாஜனின் ஆலோசனைகள்

மறுப்பெதுவுமின்றி ஏற்றுக்கொள்ளப்படும். அந்தளவுக்கு அவனொரு திறமை சாலி - அனுபவசாலி.

இப்போது அவன் நடத்தும் வகுப்பிலும், தனது மாணவ மாணவிகள் தன்னைப் போல்க் கணித அறிவு பெறவேண்டுமென்பதில் அவனுக்கொரு தனி ஆசை. தனது இந்த ஆசையை அவர்களுக்கு அடிக்கடி நினைவுபடுத்து வான். அவர்களும் அதை உள்வாங்கிக் கொண்டு ஆர்வத்தோடு படிப்பார்கள். அந்த மாமர நிழலிலிருந்து படித்தாலே போதும், சிறப்பாகப் படிக்கவேண்டு மென்ற ஆசை, இடைவிடாமல் அவர்களின் உணர்ச்சி நரம்புகளில் ஓடிக் கொண்டேயிருக்கும். அதனால்த்தான் தொண்ணூறு வீதப் பிள்ளைகள் கெட்டிக்காரரர் என்று பெயர் எடுத்துக் கொண்டிருந்தனர். நல்லறாஜனுக்கு ஒரே ஆனந்தம்.

காலப்போக்கில் அவன் நடத்தும் 'நல்லறாஜன் ரியூஷன் கோணர்' (Nallarajan Tuition Corner) ஆண்களைச் சேர்க்காமல்ப் பெண்களை மட்டுமே சேர்த்துக் கொண்டிருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் முப்பத்தைந்து மாணவிகள் கற்றுக் கொண்டிருந்த இந்த வகுப்பில், தற்போது ஒன்பது மாண விகள் மட்டும் கற்றுக்கொண்டிருப்பதுதான். இதற்கான காரணம் என்னவாயி ருக்குமென்று அங்கு படிக்கும் எல்லா மாணவிகளும் யோசித்தார்கள். விலக் கப்பட்ட மாணவ மாணவிகளின் வாய்களிலும் இதே பேச்சுத் தான். ஒரு வேளை, கூடுதலான தொகையைச் சேர்த்துப் படிப்பிப்பதால்த் தனது வீட்டின் மலசலகூடம் சுத்தமாக இருக்காதென்ற நினைப்போ அல்லது சொந்த வீட் டில் நடத்துவதால், பத்துக்குக் குறைந்த தொகையே இருக்கவேண்டுமென்று ஏதாவது விதியோ எவருக்குந் தெரியாது.

நல்லறாஜனின் பத்துப் பரப்பு வளவும் அதிலமைந்த வீடும், அவனது பரம்பரைச் சொத்து. ஐந்தாவது பரம்பரை உரிமையாளனாக இப்போது அவன் தான். இந்த அறுபத்தொரு வயதிலும், வீடு வளவைச் சுத்தமாக அழகாக வைத் திருப்பதில் அவனுக்கிருக்கும் அக்கறை சொல்ல முடியா ஒன்று. வீடு வளவின் சுத்தத்துக்காகச் செய்ய வேண்டிய அனைத்தையும் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பவன் அவன். அறுபத்தொரு வயதென்று எவருமே அவனைச் சொல்ல மாட்டார்கள். நாற்பது நாற்பத்தைந்து வயதென்று கணிக்கக் கூடியதாகத் தான் அவனது தோற்றமிருக்கும். அத்தோடு மிகவும் அழகானவன். வட்டமுக அழகனென்று அவனது ஊர் - அவனது பாடசாலை - அவனது நண்பர்கள் அவனை அழைப்பது அவனது அழகுக்காகத்தான். நிறத்திலும் அவன் அழகன் தான். வெள்ளைக்காரனைப்போல் நல்ல நிறம். அழகானவனாக- வசீகரமானவ னாக - நல்ல நிறமுடையவனாக இருந்தானே தவிர, ஏ.எல் படிக்கத் தொடங் கும்வரை, கெட்டிக்காரனாக அவனிருக்கவில்லை.

எட்டாம் வகுப்பு வரை மந்த மூளையென்றும், ஒன்பதாம் வகுப்புத் தொடக்கம் பதினோராம் வகுப்பு வரை சராசரி மாணவனென்றும் ஏ.எல் வகுப்பில் நல்ல கெட்டிக்காரனென்றும் பேரெடுத்தவன். அவனது கெட்டித் தனத்தை அறிந்த கணித ஆசிரியர்களும், கணித ஆசிரியர் மூலம் அவனை

அறிந்த ஏனைய ஆசிரியர்களும் அவனைப் புகழ்ந்து வாழ்த்துக்கூறத் தவற மாட்டார்கள்.

அதிபர் அவர்களும், மாணவர்களுக்கான காலை நேர ஒன்றுகூடல்க் கூட்டத்தில் (அசெம்பிளியில்) "ஒவ்வொரு படியாக ஏறியேறித் தான் நினைத்த இலக்கை மாணவனொருவன் அடையலாம் என்பதற்கு எமது ஏ.எல் மாணவன் நல்லறாஜன் மிகச் சிறந்த உதாரணம். அவனது விடா முயற்சி, மிகக் கெட்டிக்காரனாக அவனை ஆக்கிவிட்டது. அவனது ஆசிரியர்களே மெச்சு மளவுக்கு அவன் தனது பாடங்களனைத்திலும் சிறந்து விளங்குகிறான்.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு இலக்கணமாகி நிற்கும் அந்த மாணவன், பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றபின், எமது பாடசாலை ஆசிரியர் குழாமில் ஒருவராக வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்களும் நல்லறாஜன்போல், முயற்சியெடுக்க வேண்டும். தமது குடும்பத்துக்கும் எமது பாடசாலைக்கும் புகழ் தேடித் தரவேண்டும் என்பதும் எனது ஆசை" என்று நல்லுரை ஆற்றி மாணவர்களை உற்சாகப்படுத்துவதில்ப் பின் நிற்பதில்லை.

அதிபர் ஆசிரியர்மார் ஆகியோரின் வாக்குத் தெய்வ வாக்காக மாறியதால், யாழ்/பல்கலைக்கழகம் சென்று கணிதத் துறையில்ச் சிறப்புப் பட்டம் பெற்ற நல்லறாஜன், தனது பழைய கல்லூரியான யாழ் - மகேசன் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து சிறந்த கல்விப்பணியாற்றித் தனது அறுபதாவது வயதில் இளைப்பாறிய பின் தான் 'நல்லறாஜன் ரியூஷன் கோணர்' என்ற பிரத்தியேகக் கணித வகுப்பை நடத்திக் கொண்டிருக்கிறான்.

அவனது மனைவி புனிதவதியும் ஒரு பட்டதாரி ஆசிரியை. நல்லூர் மகளிர் மகாவித்தியாலயத்தில் வர்த்தகப் பாடம் போதிக்கும் அவளுக்கு இப்போது ஐம்பத்துநான்கு வயது. ஐம்பத்தைந்துக்குப்பின், ஒப்பந்த அடிப்படையில் அறுபது வயதுவரை தனது சேவையை நீடிக்கலாமென்று ஒரு விதியிருந்தாலும் அதை அவள் விரும்பவில்லை. அடுத்த ஆண்டு கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான சம்மதத்தைத் தனது கணவனிடமிருந்து பெற்றுக் கொண்டாள் அவள். அத்தோடு சுஜானிக்காவின் ஏ.எல்த் தேர்வும் அடுத்த ஆண்டு என்பதால், இருவரும் ஒரேயடியாய் விலகலாம் என்ற எண்ணமும் புனிதவதிக்கு இருக்கத்தான் செய்தது.

தாயைப்போல், நல்ல ஒழுக்கமும் கெட்டித்தனமும் நிறையப் பெற்றவள் சுஜானிக்கா. தாய் படிப்பிக்கும் அதே பாடசாலையில்த் தானும் படிப்பதால், தனது நடத்தை தனது தாய்க்கு நல்ல பெயரை ஈட்டித் தர வேண்டுமென்ற மனப்பக்குவங் கொண்டவள் சுஜானிக்கா. அதனால்த்தான் அவளது ஒழுக்கமும் நூற்றுக்கு நூறாக அமைந்தது.

இவளின் ஆசிரியைமாருக்கு இவளென்றால்ப் போதும். இவளின்

கெட்டித்தனமும் ஒழுக்கமுந்தான் அதற்குக் காரணம். தன்னைப் படிப்பிக்கும் ஆசிரியைமாரை மட்டுமல்ல, ஏனைய ஆசிரியைமாரையும் மதித்துச் செய லாற்றும் தன்மை அவளோடு ஒட்டிப் பிறந்தது. ஆசிரியைமாருக்கு என் னென்ன உதவிகள் தேவையோ அவைகளை உடனுக்குடன் செய்து கொடுப் பாள். தன்னுடன் படிக்கும் ஒரு சில மாணவிகளுக்கு விளங்காத கணக்குகளை அவர்களுக்கு விளக்கப்படுத்துவதில் அவள் என்றைக்குமே பின் நின்றதில்லை.

நல்லறாஜனும் அப்படித்தான். தன்னிடம் கணிதம் பயிலும் மாணவி கள், கணிதத்தில்க் கெட்டிக்காரிகளென்று பெயரெடுக்கத்தக்கதாக, அவர் களை நெறிப்படுத்தவேண்டுமென்ற நினைப்பே அவனது மனதில். அவனிடம் கற் கும் மாணவிகளுக்கும் அந்த நினைப்பை ஊட்ட அவன் தவறவில்லை. மழை காலமென்றால், அந்த வகுப்பு இடம் மாறிவிடும். தனது வீட்டிலுள்ள இரண்டு விறாந்தைகளுள் ஒன்றை, மழை கால வகுப்பறையாக்கி வைத்திருக்கி றான் நல்லறாஜன். மாமர நிழலின் குளிர்ச்சியிலிருந்து படித்த மாணவிகள், விறாந்தையிலிருந்து படிப்பதை விரும்புவதேயில்லை. ஆனாலும் மழையைத் தடுத்து நிறுத்த யாரால்த் தான் முடியும். பூமிக்குத் தேவையென இறைவன் தந்த வரங்களுள் அதுவும் ஒன்று. அப்படியான ஒன்றைத் தடுக்க முடியாது தவிக்கும் மாணவிகள், மழையின் அறிகுறி கண்டால்ப் போதும், "ஐயோ மழை வரக்கூடாது" என்று வர்ணபகவானை நேர்ந்து கொண்டே படிப்பார் கள்.

நல்லறாஜனும் மிகத் திறமாகப் படிப்பிப்பான். செய்ய வேண்டிய கணி தப் பயிற்சிகளை, இடையிடையே பகடிகளையுஞ் சேர்த்து மாணவிக ளின் மனதிலே பதியும்படி விளக்குவதில் அவனொரு விண்ணன். அப்படியிருந்தும் ஓரிரு மாணவிகளின் மூளை நரம்புக்குள் அந்த விளக்கங்கள் ஏறுவதில்லை. மற்ற மாணவிகளோ கொடுத்த பயிற்சிகளை எதுவித தங்குதடையுமின்றிச் செய்துமுடித்து அவனிடம் சரி வாங்கியபின் சந்தோஷமாக வகுப்பைவிட்டு வெளியேறுவார்கள். நல்லறாஜனின் மகிழ்ச்சிக்கும் அளவேயிருக்காது.

சரியாகச் செய்யமுடியாததால்த் தலைசொறியும் அந்த இரண்டு பேரின் நிலைகண்டும் அவன் சலித்து விடுவதில்லை. அவர்கள் விட்ட பிழை களை மறுபடியும் மறுபடியும் விளக்கி, அதே கணக்குகளை அவர்களைக் கொண்டு சரியாகச் செய்வித்தபின் தான், வீடு செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுப்பான். அதோடு மட்டும் அவன் திருப்திப்படுவதில்லை. நடந்து முடிந்த பத்துப் பதினைந்தாண்டு ஏ.எல்ப் பரீட்சை வினாத்தாள்களை யுஞ் செய்துகாட்டி அத்தகைய பயிற்சிகள் எவ்வளவு அவசியம் என்பதையும் இடைவிடாமல் அவைகளைச் செய்து நல்ல பயிற்சி எடுப்பதால் 'ஏ' அல்லது 'பீ' எடுக்கலாமென்ற உறுதியையும் அவர்களின் உள்ளத்தில்ப் பதியவைத்து விடுவான்.

இதையறிந்துதான், பல மாணவர்கள் அவனிடம் படிக்கவேண்டு மென்று அழாக் குறையாய்க் கேட்டார்கள். அவன் சம்மதிக்கவில்லை ஆண் களை எடுப்பதில்லை என்ற முடிவுக்கு அவன் வந்ததால், அவர்களின் வரவை

அவன் விரும்பவில்லை. நல்லறாஜனின் இந்த மறுப்பு, அவனுடைய மாணவி களுக்கு எப்படியோ தெரிய வந்துவிட்டது.

"நிறையப் பேர் உங்களிட்டைப் படிக்க ஆசைப்படுகினம் சேர்" ஒருத்தி கேட்டாள்.

"அதிலும் பொடியன்கள் தான் கூடுதலாகக் கேக்கிறான்கள்" இது இன்னொரு மாணவி சொன்னது.

"கணிதத்துக்கு உங்கடை பேர் தான் எல்லா இடமும் அடிபடுகுது சேர்" வேறொருத்தியின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் தான் இவை.

"நீங்கள் கணிதம் சொல்லிக்குடுத்த பிள்ளையளிலை கனபேருக்கு 'ஏ' ஒரு சிலருக்கு 'பீ' அதுக்குக் குறைய இல்லையாம் சேர்" இது ஷியாமினி சொன்னது.

"வேண்டாம் சேர் கனபேரெண்டால் கேட்டுப் படிக்கேலாது இந்த ஒன்பது பேரும் போதும்" என்றாள் புவிஜனா.

"புவிஜனா சொல்றதுதான் சரி. இந்த ஒன்பது பெட்டைச்சியளும் எனக் குப் போதும். கனக்க ஆசைப்படக் கூடாது. பேராசை பெருந் தரித்திரம்" நல்லறாஜனின் இந்த வார்த்தைகள் புவிஜனாவுக்கு உடன்பாடாகியதால் நன்றி சொல்லி நிறுத்தினாள் புவிஜனா. மற்ற எட்டுப் பேரின் பார்வையும் புவிஜனாவின் மேல் விழுந்தது. அதன்பின் நல்லறாஜனையும் நோட்டமிட அது தவறவில்லை. நல்லறாஜனின் உதடுகளிலொரு புன்னகை ஓடிக்கொண் டிருந்தது. அந்தப் புன்னகையை அடக்கிக் கொண்டு அவர்களின் முகங்களைப் பார்த்துச் சொன்னான்.

"பிள்ளையள் சோடா தாறன் குடிச்சிட்டு மற்றப் பயிற்சிகளையும் செய் யுங்கோ." நல்லறாஜன் இப்படிக் கேட்டதும் "றாஜன் சேருக்கு ஏன் சிரமம் ஒரு கிளாஸ் தண்ணீர் போதும்" என்றாள் புவிஜனா.

"றாஜன் சேர்" என்று தான் அவனைத் தெரிந்தவர்களும் அவனோடு படிப்பித்த சக ஆசிரியர்களும் அவனை அழைப்பதுண்டு. அவனுக்கும் "றாஜன்" என்று மற்றவர்கள் தன்னை அழைக்க வேண்டுமென்பது தான் விருப் பம். இங்கு படிக்கும் மாணவிகளும் அதற்கு விதிவிலக்கல்ல. அதனால்த் தான் புவிஜனாவும் "றாஜன் சேர்" என்று விளித்து நீர் கேட்டாள். இரண்டு மணித் தியாலங்கள் கணிதப் பாடம் படிப்பிப்பதால் ஏற்படும் தொண்டை வரட்சி யைப் போக்க வேண்டுமென்று நினைத்த நல்லறாஜன் சமையலறை சென்று சுடுநீர்ப் போத்தலில்த் தனது மனைவி ஊற்றி வைத்த தேநீரைக் குடித்து, புவி ஜனாவுக்காக ஒரு செம்பில் நீரையும் கொண்டு வந்து அவளிடம் கொடுத்த கையோடு பிள்ளைகள் செய்து முடித்த கணக்குகளிலுள்ள சரி பிழைகளைப் பார்வையிடத் தொடங்கிவிட்டான்.

தன்னால்க் கொடுக்கப்பட்ட பத்துக் கணக்குகளையும் சரியாகச் செய்து காட்டிய எட்டுப் பேரும், தத்தம் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் புவிஜனாவால்ப் பத்தாவது கணக்கைச் சரியாகச் செய்ய முடிய வில்லை. தடுமாறிக் கொண்டிருந்தாள் பாவம். அவளைக் கண்டு பரிதாபப்

பட்ட நல்லறாஜன் இன்னுமொரு இலகுமுறை மூலம் அந்தக் கணக்கை அவளுக்கு விளக்கப்படுத்தியதும் அதைச் சரியாகச் செய்து முடித்து வீடு சென்றாள் புவிஜனா.

இலகுவான விளக்கங்கள் மூலம் தனது மாணவிகளை ஓரளவு கெட்டிக்காரிகளாக்கியவன் நல்லறாஜன். ஒரு சில கணக்குகளைச் சரியாகச் செய்யாது தடுமாறி அதன் காரணமாக வீடு செல்லப் பிந்தும் ஷியாமினி - புவிஜனா ஆகிய இருவரில் ஷியாமினி சரியாகச் செய்யும் நிலைக்கு வந்தது நல்லறாஜனை மாபெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது. இருந்தும் புவிஜனாவின் ஒரு சிறு தடுமாற்ற நிலையால் ஓரளவுக்கு அவன் துக்கப்பட்டது மாத்திரமன்றிக் காலப்போக்கில் அவள்மீது பரிதாபத்தையும் காட்டி வந்தான்.

வாகனச் சில்லுகள் ஓடுவதுபோல் மாதங்களும் ஓடிக்கொண்டேயிருந்தன. அன்று ஒரு வியாழக்கிழமை. காலை வானம் வெளிச்சத்தையும் தெளிவையும் தன்னுடைய உடல் முழுவதிலும் போர்த்திருந்த நேரம். எட்டுத் திசைகளிலும் சூரியக் கதிர்களின் ஒளிப்படர்வுகள். மண்மங்கையையும் முத்தமிட அவைகள் தவறவில்லை. றோசாக்கள், எக்சோறாக்கள், மல்லிகைகள், கனகாம்பரங்கள், சூரியகாந்திகள், செவ்வந்திகள், அடுக்குச் செவ்வரத்தைகள், காசித்தும்பிகள், கோழிக் கொண்டைகள், நந்தியாவட்டைகள், வகை வகையான குறோட்டன்கள் ஆகியவற்றாலமைந்த நல்லறாஜனின் வட்ட வடிவப் பூந்தோட்டத்தை மூடிய சூரியக்கதிரொளிகள் தமது கைவண்ணத்தை அதன் மேல் காட்டிக் கொண்டிருந்தாலும் மாமர நிழலிலமைந்த கணித வகுப்பறையை அவைகளால்த் தொட்டுப் பார்க்கவும் முடியவில்லை. குளிர்ச்சியாகவே காணப்பட்டது அந்த வகுப்பறை. வகுப்புத் தொடங்குவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்களே பாக்கி.

வகுப்புத் தொடங்குவதற்குப் பதினைந்து நிமிடத்துக்குமுன் வருவது தான் புவிஜனாவின் வழக்கம். மற்றப் பிள்ளைகள் வருவதற்கு முன்னதாகவே வந்து கணக்குப் பயிற்சியில், தான்விட்ட பிழைகளை ஆராயத் தொடங்கி விடுவாள். அன்றைக்கும் அப்படி அவள் ஆராயத் தொடங்கியதுதான் தாமதம் வானம் திடீரெனக் கறுத்து இடியும் மின்னலும் - சுழன்றடிக்கும் காற்றும் மழையுமாக மாறியது. திசை அனைத்திலும் ஒரே இருள். தனது தொப்பியையும் போட்டுக் கொண்டு மாமரத்தோடு ஒட்டிநின்ற புவிஜனாவோ பயந்து நடுங்கினாள். மற்றப்பிள்ளைகள் அவளோடு இருந்திருந்தாலாவது அவளது உள்ளத்திலெழுந்த பயப்பீதி ஓரளவு அகன்றிருக்கும். அந்தப் பிள்ளைகள் இனி வரமாட்டார்கள். கொட்டும் மழையில் எப்படி வருவது? இதை நினைத்தபோது மேலும் பயந்தாள் புவிஜனா. நல்லறாஜனின் வீட்டுக்குள் நுழையலாமென்றால் அதன் வெளிக்கதவும் பூட்டு. ‘‘றாஜன் சேர் வெளியே வரட்டும்’’ என்றபடி அந்தக் கதவையே பார்த்துக் கொண்டிருந்த புவிஜனாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. குடையை விட்டிட்டு வந்ததும் அவளுக்கொரு அந்தரம். நேரத்தைப் பார்த்தாள் ஒன்பதுக்கு இன்னும் ஐந்தே ஐந்து நிமிடங்கள்.

வீட்டுக்குள்க் கட்டப்பட்டிருக்கும் குளியலறையில்த் தனது காலைக் குளிப்பை முடித்த நல்லறாஜன் தனது அறைக்கு வந்தபோது தான், மழையின் அகோரம் அவனுக்குப் புரிந்தது. "இந்த மழையில் எந்தப் பிள்ளை வரும் வகுப்புக்கு" என்று நினைத்தபடி யன்னலூடாக எட்டிப் பார்த்தான் கணித வகுப்பறையை. ஆடை ஓரளவுக்கு நனைந்தபடி மாமரத்தோடு ஒட்டி நின்ற புவிஜனாவைக் கண்டதும் அவனுக்கு ஒரே அதிர்ச்சி. "புவிஜனா" என்று கத்தியபடி குடையுடன் ஓடிச்சென்று அந்தக் குடைக்குள் புவிஜனாவையும் சேர்த்து அணைத்தபடி வீட்டுக் கதவடிக்கு வந்த நல்லறாஜன் கதவைச் சாத்தித் தாள் போட மறந்தவனாய் வீட்டு விறாந்தைக்கு வந்துவிட்டான்.

நனைந்த ஆடையோடு காட்சிதரும் அவளின் உடலைக்கண்ட நல்லறாஜனின் காமவெறி விஷம் போலேறிக் கொண்டிருந்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினான் உடனடியாக. எவ்வளவோ கெஞ்சினாள் புவிஜனா. "நானுங்கள் மாணவி காமுகியல்ல. உங்கடை மனதைப் பக்குவப்படுத்தி நல்லவனாய் வாழுங்கோ" என்றெல்லாம் அவள் சொன்னதைக் கூட அவன் செவிமடுக்கவில்லை. "புவி, உனக்குக் கர்ப்பம் தங்காதபடி செய்யவேண்டியதை நான் செய்வன். பிளீஸ் புவி மறுக்காதை" என்று தன்னை வற்புறுத்திய நல்லறாஜனை தனது ஆசிரியனென்றும் பாராமல்க் கொல்லவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

ஆனால் அவனுக்கு? தனது கனிவான சொற்களால்ப் புவிஜனாவை வசியப்படுத்தலாமென்ற நினைவு தோற்றதால் அவளை வலோற்காரப்படுத்தித் தனது காம இச்சையைத் தீர்க்க வேண்டுமென்று முடிவெடுத்தான் நல்லறாஜன்.

ஆசிரியன் - மாணவி என்ற நல்லுறவும், புரிந்துணர்வும் சாம்பராகி, அடி பிடியும் மல்லுக்கட்டுமாக மாறியது மழைகாலத்தில்க் கணித வகுப்பு நடக்கு மந்த விறாந்தை. நல்லறாஜனின் பிடியிலிருந்து தப்புவதற்காக அங்கு போடப்பட்டிருந்த வாங்குகளையுந் தாண்டி வெளியே ஓடமுயன்ற புவிஜனாவை எட்டிப் பிடிக்க நல்லறாஜன் முயன்றபோது, வாங்கின் மூலைக்கூர் அவனது மண்டையைப் பதம்பார்த்துவிட்டது. இரத்தம் ஒழுக ஒழுக அப்படியே விழுந்துவிட்டான்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளியேறிய புவிஜனா வீடு சேர்ந்ததும் தாயிடம் சொன்னாள். "அம்மா வெளிக்கிட்டுப்போய் ஐஞ்சு நிமிஷமில்லை. ஒரே மழை. வகுப்புக்குப் போகமுடியேல்லை. எங்கடை மாரியம்மன் கோயிலுக்குள்ளை நிண்டிட்டன். மழை இனி விடாதெண்டு தெரிஞ்சபடியால்த் திரும்பி வந்திட்டன். நல்ல காலம் தொப்பி கொண்டு போனபடியாலை தலை நனையேல்லை. சட்டையெல்லாம் நனைஞ்சு போச்சு" என்று சொல்லி கிணற்றடி சென்று நனைந்த உடையையும் கைக்குட்டையையும் கழுவி முடித்துக் குளித்துக் கொண்டிருந்த அவள் நினைவில் நல்லறாஜன் தான். இனி என்ன நடக்குமோ என்ற நினைவும் அவளுக்கில்லாமலில்லை. கைக்குட்டை காய்ந்ததும் அதை மற்ற நாள்க் காலை எரித்துவிட்டாள்.

நல்லறாஜன் விழுந்து கிடந்த இடத்துக்கு மேலேயுள்ள ஒடுகள் சில உடைந்திருந்ததால் அவனது மண்டையிலிருந்து ஓடிய இரத்தம். மழை ஒழுக் கால்க் கழுவுண்டு அந்த நிலத்தைக் கேவலமாக்கிவிட்டது. அடை மழை ஆறு மணிக்கு ஓய்ந்தபின் தான் வீட்டுக்குள்க் காலடி வைத்தார்கள் புனிதவதியும் சுஜானிக்காவும். பிறகென்ன? கத்தலும் கதறலும் புலம்பலுமாகக் காட்சியளித் தது அவர்களின் வீடு. ஊரார் உறவினர் அனைவரும் கண்ணீர்விட்டதோடு பொலிசுக்கும் தகவல் கொடுத்தனர். தகப்பனின் மறைவு கேட்டுக் கதறியழுத சுஜாந்தன் அடுத்த நாளே யாழ்ப்பாணம் வந்துவிட்டான். வீட்டில் ஒரே கூக்குரல்.

பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். அக்கம் பக்கம் உள்ள வர்களும் அந்த ஊரிலுள்ள ஏனையோரும் விசாரிக்கப்பட்டதோடு நல்லறாஜ னின் மாணவிகளும் விசாரிக்கப்பட்டனர். புவிஜனாவிடமும் கேட்டார்கள். “எனது கற்பைச் சூறையாட வந்தவன் நல்லறாஜன். அதனால் விறாந்தையி லிருந்த நாற்காலியொன்றால் அவனை அடித்தேன். இரத்தம் வடிய வடியக் கீழே விழுந்து கிடந்த அந்தக் காமுகனின் மண்டையைப் பல தடவைகள் பதம் பார்த்தது அந்த நாற்காலி. அவன் இறக்கும்வரை எனது முயற்சியை நான் நிறுத்தவில்லை. அதன் பிறகு நாற்காலிக் கால்களில்ப் படிந்திருந்த இரத் தத்தை எனது கைக்குட்டையால்த் துடைத்தெடுத்து வெளியேறினேன்.” என்று தனது தாய் தந்தை சகோதரர்களுக்கு உண்மை சொல்லாதவள், பொலி சுக்கா சொல்லுவாள். “அண்டைக்கு ஒரே மழை. அதாலை வகுப்புக்கு நான் போகேல்லை” என்று சொல்லி முடித்தாள்.

நல்லறாஜனின் மரணம் பற்றிய உண்மை எவருக்குமே தெரியாது. அவ ளுக்கும் தெய்வத்துக்கும் மட்டுந்தான் தெரியும். தெய்வமோ நேரே வரப் போவதில்லை. அப்படி நேரே வந்தாலும் புவிஜனா செய்தது சரியென்று தான் ஒத்துக்கொள்ளும். ஆனபடியால் அவளோடு மட்டும்தான் மர்மமாக - இரகசி யமாக இருக்கும். இன்றைக்கும் தனது கடமைகளைச் செய்வதற்காக அவள் வெளியே போய் வருகிறாள் எதுவித படபடப்புமில்லாமல். பொலிசாரின் கண்களும் அவளில்ப் படத்தான் செய்கின்றன. ஆனாலும் எப்படி அவளைப் பிடிப்பது? நல்லறாஜனின் கொலையைத் துப்புத் துலக்கு வதற்காக மோப்ப நாய்கள் போல் எல்லா இடமும் தேடித் திரிகிறார்கள் பொலிசார். எப்படித் தேடியுமென்ன? எவர் தேடியுமென்ன?

# 6 நன்றி மறந்த சமுதாயமே

"அவனது கண்கள் எதற்காகக் குழிவிழுந்து கிடக்கின்றன; உடல் ஏனோ ஒட்டி உலர்ந்துவிட்டது."

அன்றொரு நாள் சித்தார்த்தர் தனது தேரிலே உலாச் சென்றபோது தான் கண்ட ஏழைகளின் நிலையைப் பற்றித் தனது தேர்ச் சாரதி சந்தகனிடம் கேட்ட கேள்விகள் தான் இவை.

இன்று இவனைப் பார்த்து நான்கூட இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது. அவனையே உற்றுப் பார்க்கிறேன். அவனோ தனது சிந்தனையில் மட்டுமே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

கண்டி நகரத்து வீதிகளில் ஒன்று திருகோணமலை வீதி. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை என்பது இதன் புதுப்பெயர். இந்த ஊரிலுள்ள மிகப் பிரபல்யமான திரித்துவக் கல்லூரியும் இதே வீதியில்த்தான் அமைந்திருக்கின்றது. அதன் அருகிலேயே இவனது இருப்பிடம்.

அது ஒரு நடைபாதை. காலா காலமாக நடைபாதையிலே காலங் கடத்துகிறானென்றால் அவன் ஒரு அனாதையாக - ஏழையாக இருக்க வேண்டும். தாய், தந்தை, மனைவி, குழந்தை, வீடு, மாடு, சுற்றம், கொற்றம் எதுவுமே இல்லாதவன் என்பதே பொருத்தம். உண்மையும் அதுதான்.

வாழ்க்கையில் உயர்வதற்கு எதுவித ஆதாரவும் இல்லாதவன். ஆனாலும் தோற்றத்திலோ மிக உயர்ந்தவன். மெலிந்த உருவம் என்றே சொல்ல வேண்டும். வயது அறுபதைத் தாண்டியிருக்கும். கறுப்பு நிறமேனி. 'சைக்கிள்'க் கொழுப்பை மேலெல்லாம் பூசினால் எப்படியிருக்குமோ அப்படிப் பட்ட நிறம். குளித்துப் பல மாதங்கள் என்று நம்புகிறேன். அதனால் அவனது நிறத்தோடு அழுக்கும் படிந்திருந்தது.

திருகோணமலை வீதியில் உள்ள பல வீடுகளில் நீர்வசதி இல்லையென்பது எல்லோருக்கும் தெரியும். நீர்க்குழாய்கள் பூட்டப்படாத அவர்களின் வீடுகளுக்கு நீர் கொடுத்து உதவுவது கண்டி மாநகர சபை.

வீதியோரத்தில்க் காணப்படும் அந்தப் பைப் மாநகர சபையால் நிறுவப்பட்ட ஒன்று. மக்களின் வசதிக்காகப் போடப்பட்ட அந்தப் பைப் ஒரு சில ஏழைகளுக்கு வேலை வாய்ப்பையும் தேடிக் கொடுத் திருக்கிறது என்பது அந்நகரத்திலுள்ள பலருக்கும் தெரியும்.

இந்த ரீதியில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட சிலரில் ஒருவன் தான் இவன். பெயர் வெள்ளைமுத்து. அவனது பெயருக்கும் நிறத்திற்கும் எது வித ஒற்றுமையும் இல்லை.

திருகோணமலை வீதியிலுள்ள பல நீர்வசதியற்ற வீடுகளுக்கு அவன் நீர் அள்ளிக் கொடுத்து உழைப்பவன். வீதியோரத்தில் உள்ள அந்தப் பைப் மூலமே அவன் தண்ணீர் இழுப்பான். தனது இரண்டு கைகளிலும் இரண்டு வாளிகளைத் தூக்கிச் சுமப்பது அவனது வழக்கம்.

அதிகாலை 5.30 மணிக்கு அவனது வேலை ஆரம்பமாகினாலும் முடிவுறும்போது காலை 10.30 மணி ஆகிவிடும். அதன் பின்னரே சாப்பிடுவான்.

ஒரு கிளாஸ் தேநீர். அதில் நனைப்பதற்கு அரை இறாத்தல் பாண். அவன் பாவிப்பது ஒரு வெறும் பால்ப் பேணி.

மத்தியான வேளை இரண்டு மணிபோல் எதையாவது சாப்பிட்டு அரை குறையாக வயிற்றை நிரப்பிக் கொள்வான். சோறு கிடைக்கும் நாள்களில் அவனது இன்பத்திற்கு எல்லைக்கோடு போட முடியாது.

மதிய உணவு முடிந்ததும் ஒரு சிறு உறக்கம். தூக்கம் விழித்து எழும் அவனுக்காக வேலைகள் காத்திருக்கும். மறுபடியும் தண்ணீர் இழுக்கும் வேலைதான்.

பிற்பகல் 3.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை இழுத்துக் கொண்டேயிருப்பான். அவனது வாழ்வில் வேலைச் சலிப்போ அலுப்போ ஏற்பட்டதில்லை.

வாளிகள் ஒரு வேளை கால நோய்ப்பட்டு உடைந்தாலும் அவனோ நோய்வாய்ப்படுவதில்லை சோம்பலும் அவனிடம் குடியிருப்பதில்லை. வேலையென்றால் வேலை தான். யாரும் குறை சொல்ல இடங்கொடான். அந்த அளவுக்கு அவனது வேலையில் நிறைவே இருந்தது.

ஆனால் இன்று...? அவனது காலும் கையும் தைரியமிழந்து சோர்ந்து விட்டன. வேலை செய்ய அவனால் முடியவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு வாளிகளைத் தூக்கிய அவனது விரல்கள் இன்று பலம் இழந்துவிட்டன. அதனால்ப் படுத்துவிட்டான். படுப்பதைத் தவிர வேறு வழியுமில்லைத்தான். அவனது ராஜாங்கத்தில் அவன் ஒரு தனி ஆள். அரசன் மந்திரிப் பிரதானிகள் குடிமக்கள் அனைத்தும் அவனே. அவனை ஆஸ்பத்திரியில் வைத்துப் பராமரிப்பதற்கோ தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பதற்கோ யாரிருக்கிறார்கள்? அதைத் தெரிந்ததனால் அவன் படுத்துவிட்டான்.

அவனது படுக்கையறை - குளியலறை - குசினியறை அனைத்தும் அந்த நடைபாதை தான். மலசலங் கழிப்பதற்கு மட்டும் வேறெங்காவது போய்வருவான். அவனுடைய சிந்தனை இன்று வழக்கத்திற்கு மாறாகவேயுள்ளது. அதிக நேரம் அவன் சிந்திப்பதற்குக் காரணம்? அவனது சிந்தனையை ஓரளவுக்கு நான் ஊகிக்கிறேன்.

யார் யாருக்கு உதவி செய்தானோ அவர்கள் எவருமே அவனைக் கவனிப்பதில்லை. 'காவோலை விழக் குருத்தோலை சிரித்தது' போல, இளம்

பெண்ணொருத்தி இவனது வேலையைத் தட்டிக் கொண்டாள்.

அவளை வரவேற்றுத் தத்தம் வேலைகளைப் பூர்த்தியாக்கிக் கொண்ட திருகோணமலை வீதி மக்கள். வெள்ளை முத்துவை நினைப்பதே இல்லை. இதை நினைக்கும் போதெல்லாம் வெடித்து வெடித்து அழுவான். இன்றும் அவனைச் சிந்தனையில் ஆழ்த்தியது இது தான் என்பது என்னுடைய தீர்க்க தரிசனம்.

'காலா காலமாக வேலை செய்து உதவிய என்னை எவராவது நினைச் சுப் பாத்தாங்களா? ஒரு வேளை சோறு தந்து இந்தாப்பா இதைச் சாப்பிடு. மாடு மாதிரி வாளியும் கையுமாத் தண்ணி இழுத்து நமக்கெல்லாம் உதவி செய்தே. அதை நாம் மறக்க முடியுமா? பெரிசா எதையும் நாம் செய்யாட்டா லும் இந்தச் சின்ன உதவியையாவது ஏத்துக்க.'

இப்படி யாராவது தனக்குச் சொல்லியிருக்கலாம் - உதவி செய்திருக்க லாம் - தன்னைத்தேற்றியிருக்கலாம் என்பது அவனுடைய ஒரு அங்கலாய்ப்பு. அவனது எதிர்பார்ப்புகள் அந்த மக்கள் மனதிலிருந்து வரவேயில்லை.

அவனது முதுகைத் தட்டி அவனது சிந்தனையைக் கலைத்தபின் மெது வாகக் கேட்டேன். உண்மையை ஒத்துக்கொள்ளாமல் அவனால் இருக்க முடி யவில்லை.

'கவலைப்படாதப்பா; நம்மளுக்கும் ஒரு காலம் வரத்தான் போகுது. அந்தக் காலம் ஏழையளைப் பொறுத்தவரை நாளைக்கென்பது நிச்சயம்.'

இப்படியெல்லாம் சொல்லி அவனைத் தேற்றுவேன். என்னால் இயன் றதைக் கொடுக்கவும் நான் மறப்பதில்லை. எனது கையிலிருந்து ஐந்து ரூபா நோட்டைப் பெறுகின்ற நேரமெல்லாம் அவனது கண்களிலிருந்து கண்ணீர் வடியும்.

அவனது கண்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. ஆறாகப் பாயும். அதனால் அதிக நேரம் அவனோடு நான் நிற்பதில்லை. அகன்று விடுவேன். அவனோ என்னையே பார்த்து நிற்பான். என் உருவம் அவனது கண்களிலிருந்து மறையும் வரை அவனது கண்கள் வேறிடத்தைப் பார்ப்பதில்லை.

வழக்கத்திற்கு மாறாக அன்று ஒரு பத்து ரூபா நோட்டை நீட்டினேன். இரண்டு கைகளாலும் அதனை வாங்கித் தனது கண்கள் இரண்டிலும் ஒற்றிய பின் 'இனி எப்ப சாமி வருவீங்க' என்றான்.

தழுதழுத்த அந்தக் குரலில் ஒருவகை அன்பும் பண்பும் இருப்பதை நான் உணராமலில்லை. அவனது குரலில் எனக்கொரு தனி விருப்பம். இறு மாப்பு இல்லாத தொனி. ஒருவேளை பொருள் இல்லாமை தான் அதற்குக் காரணமோ எனக்குத் தெரியவில்லை.

'எவனிடம் இல்லாமை உண்டோ, அவனிடம் பண்பு ஏராளமாக உண்டு' இப்படியாக ஒரு பெரியார் அடிக்கடி கூறுவார். இந்தக் கூற்றுக்கு வெள்ளைமுத்து ஒரு உதாரணம்.

'இந்தாப்பா! எப்ப என்னைப் பாக்கணுமெண்ணு நீ நினைக்கிறியோ அப்ப நான் வந்திடுவன். நாளைக்கு வரட்டுமா?'

'வேணாங்க சாமி....' என்னைப் பார்த்துச் சாமி என்று தான் அழைப் பான். அவனைவிட ஒரு சில வயது நான் இளையவன். சாமி என்று என்னை அழைப்பதை நான் விரும்பாவிட்டாலும் அவனுக்கு அதுவே விருப்பம்... நான் இடைமறித்தும் கேளான். அன்றும் அப்படித்தான்.

'சாமி உங்களுக்குச் சிரமம்தர நான் விரும்பல்ல. அடுத்த கிழமை முடிஞ்சா வாங்க. எனக்குக் காசு தர உங்களால முடியாட்டாலும் உங்க அன்பு கிடைச்சா அது ஒண்ணு போதுங்க.'

எனது கண்களிலிருந்து நீர்த்துளிகள் பொலு பொலென விழுந்தன. அவனைக் கட்டித்தழுவி அன்பை எல்லாம் கொட்ட வேண்டும் போலிருந் தது. அதைச் செய்ய என்னால் முடியவில்லை. வரட்டுக் கௌரவமே என்னை யும் தடுத்துவிட்டது என்ற நினைவோடு நடந்தேன்.

சமுதாயம் மாறவேண்டும். எல்லோருக்கும் போதிய உணவும் உடை யும் வசதியான இருப்பிடமும் கிடைக்க வேண்டும். இது கிடைப்பதற்கு மனித சக்தி ஒன்று திரண்டு செயல்ப்பட வேண்டும் என்று நான் நினைத்ததற்கும் வீடு சேர்வதற்கும் சரியாகவே இருந்தது.

ஒரு சில வேலைகளின் மத்தியில் வெள்ளைமுத்துவின் நினைவை நான் மறந்துவிட்டேன். என்னைக் காணும் நேரமெல்லாம் அன்பையும் ஆதரவை யும் கொட்டிக் குவிக்கும் வெள்ளைமுத்துவை எதற்காக மறந்தேன் என்பது தான் எனக்குப் புரியவில்லை.

'மனிதன் என்றால் மறப்பவன் பின் நினைப்பவன்' இப்படியாக ஒரு புத்தகத்தில்ப் படித்த ஞாபகம் என்னை உறுத்தியது. 'இன்று எப்படியாவது வெள்ளைமுத்துவைப் பார்க்கத் தான் வேண்டும்' என்ற எனது மனச்சாட்சிக் குப் பணிந்தபடி திரித்துவக் கல்லூரியையும் கடந்து வெள்ளைமுத்துவின் இருப்பிடம் அடைந்தேன். அன்று பெரிய வெள்ளி.

வெள்ளைமுத்து ஒரே தூக்கம். அவனது ஊன்றுகோல் நடைபாதையி லுள்ள ஒரு வீட்டின் வெளிச் சுவரில் சாத்திக் கிடக்கிறது. வேலை செய்ய முடியாத காலம் வந்தபோது ஊன்றுகோலின் உதவியோடு தான் அவன் நடப் பது வழக்கம்.

பாரமான கல்லொன்று அவனது காலில் அடித்ததனால் ஏற்பட்ட நோவுதான் ஊன்றுகோல் பாவிக்கக் காரணமாயிற்று. அந்த ஊன்று கோலைப் பார்த்தேன்.

அவனிடமிருந்த ஒரேயொரு மாற்றுடை அந்த ஊன்று கோலில் சுற்றிக் கிடக்கிறது. அவனது பிச்சைப் பாத்திரமோ அவனது வலக் கரத்தின் பக்கத் தில். அதனருகில்த் தேநீர் குடிக்கும் பேணி. இவை நான்குந்தான் அவனது உடைமைகள்-உரிமைகள். நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கிறான் பாவம்.

எனது அழுகையை என்னால் அடக்க முடியவில்லை. விம்மிவிம்மி அழவேண்டும் போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு மெதுவாகத் தட்டினேன் வெள்ளைமுத்துவை. அவன் எழும்பவில்லை. பசி வயிறு. அத னால் நன்றாகத் தூங்குகிறான். எனது மனச்சாட்சி கூறியதையும் மீறி மறுபடி

யும் தட்டினேன். எனது கையிலிருந்த இருபது ரூபாவையும் கொடுத்து 'நல்லாச் சாப்பிடப்பா' என்று சொல்லவே துடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் வெள்ளைமுத்து...?

இப்படியொரு காட்சி எந்த மூலைமுடக்கிலும் இருக்கக் கூடாது. பிறக்கும்போது அன்பே ஆருயிரே என்று அழைத்து அணைத்துக் கொஞ்சி, பாசத்தோடு பாதுகாப்பும் தந்து குழந்தைப் பருவத்தை வளர்த்தெடுக்கும் சமுதாயம் வெள்ளைமுத்துவை அனாதைக் கோலமாக்கியது ஏன்?

அவனது அவல முடிவுக்கு வழிவகுத்தது ஏன்? பிச்சை எடுக்கும் நிலைக்கு வெள்ளைமுத்துவை வளரவிட்டது ஏன்? இறுதியில் அவனைக் கைவிட்டது ஏன்? இந்தக் கேள்விக்கணைகள் அனைத்தும் இன்றைய சமுதாயத்தின் அங்கமான என்னையும் தைத்து ஊடறுத்துக் கொண்டேயிருந்தன.

பொலிஸின் உதவியோடு அனாதைப் பிணமாகவே போய்க்கொண்டிருக்கிறது வெள்ளைமுத்துவின் பிணம். சவக்காலையில் அவனது குழியின் மேல் மலர்வளையம் இல்லை... மக்களின் நிழலில்லை எனது கண்ணீர் மட்டுமே சொட்டுச் சொட்டாக விழுந்து தெறித்தது. வெள்ளைமுத்து என்மீது வைத்த அணையா அன்புக்கும் மரியாதைக்கும் நான் வடித்தது ஒரு சில கண்ணீர்த் துளிகளே.

திரும்பிவர முடியாத நீண்ட பயணம் செய்த வெள்ளைமுத்துவை இன்றைக்கும் நினைத்து நினைத்து அழுகிறேன். அவனுக்குக் கொடுப்பதற்காக நான் கொண்டு சென்ற இருபது ரூபா நோட்டு - ஞாபகப் பொருளாக இன்றைக்கும் என்னிடம் இருக்கும் அந்த நோட்டு என்னைப் பார்த்து ஏனோ சிரித்துக் கொண்டிருக்கிறது....?

**20-05-1989**
**சஞ்சீவியில் வெளிவந்தது**

# 7 நினைவுச் சின்னம்

வன்னியில் யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து அழத்தொடங்கிய சீதா, தனது அழுகையைத் தொடர்ந்து கொண்டேயிருந்தாள். சீதாவைப் பொறுத்தவரை 2009தாம் ஆண்டு அவளுக்கு அழுகை ஆண்டாகவே அமைந்தது.

அவள் வாழும் கடல்க்கரைக் கிராமத்தில் அவளைச்சுற்றிக் குடியிருப்பவர்கள் அவளோடு கதைக்காமல் உறவையும் முகத்தையும் முறித்து வெறுத்து அவளை ஒதுக்கி விட்டார்கள். இரண்டு மூன்று கிலோ மீற்றர் தூரத்தில்க் குடியிருக்கும் அவளது ஒரே சகோதரி ஞானாவும் அவளது கணவனும் தான் அவளுக்கு ஆறுதல்.

இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை சீதாவிடம் வரும் அவர்கள், சமைத்த உணவுப் பார்சல் கொண்டுவந்து கொடுத்து அவளைச் சாப்பிட வைப்பார்கள். அவர்கள் அங்கு வராத நேரங்களில் அவளது வாழ்வு வெறுந்தனிமை தான்.

"சமைச்சியா - சாப்பிட்டியா - சமைக்கேல்லையா" என்று அவளது அயலவர்கள் அவளைக் கேட்பதேயில்லை. அந்தப் பண்பாடோ அவள் தனித்தவள் என்ற சிந்தனையோ அவர்களிடம் இருக்கவில்லை. அவளும் அதைப் பெரிதுபடுத்த நினைக்கவில்லை.

அவளது நினைவெல்லாம் வன்னியில் வாழும் அவளது ஒரேயொரு தமையன் றெங்கனையும் அவனது குடும்பத்தையும் பற்றியே துளிர்த்துக் கொண்டிருக்கும். றெங்கன் - றெங்கனின் மனைவி சீதா- அவர்களின் ஆறு பிள்ளைகள் தான் எந்த நேரமும் அவளது நெஞ்சறையில் ஒட்டியிருந்தனர். அதனால்த் தினமும் அவர்களை நினைத்து அழுதுகொண்டேயிருப்பாள் .

ஆறு மாதங்களுக்கொருமுறை யாழ்ப்பாண கடல்க்கரைக் கிராமத்துக்கு, மனைவி பிள்ளைகளோடு வந்து தன்னோடு இரண்டு கிழமைகள் தங்கி வன்னி திரும்பும் றெங்கன் திடீரென்று தன்னுடனான கடிதத் தொடர்பை நிறுத்தியது -ஹான்ட்போனில் க்தைக்காதது - தன்னை வந்து பார்க்காதது அவளைக் கண்ணீரில் ஆழ்த்திக் கொண்டேயிருந்தன.

அக்கம் பக்கத்தார் அவளை அசட்டை செய்ததால் அவர்களிடம் போய் ஆறமுடியாத நிலையில் அவள். வீட்டின் முற்றத்திலும் வீட்டு வளவின் பின்புறத்தில் வளர்ந்திருந்த தென்னை மரங்களின் நிழழிலுந்தான் அவள் சுற்

றித் திரிவது வழக்கம் - அதுவும் வன்னி யோசனையோடு. ஒரு சில வேளை களில்த் தமக்கை வீடு.

"சீதா, கொஞ்ச நாளைக்கு நீ என்னோடை தங்கியிருந்திட்டு அதுக்குப் பிறகு உன்ரை வீட்டை போகலாந்தானே" என்று தமக்கை ஞானா கேட்டா லும், அதற்குச் சாதகமாகச் சீதாவின் பதில் அமைவதில்லை.

"சரி, இண்டைக்கிரவு என்னோடை தங்கு - நாளைக்கு நீ வீட்டை போகலாம். உனக்கும் ஆறுதலாயிருக்கும் - எனக்கும் சந்தோஷமாயிருக்கும்" என்று கூட ஞானா கேட்காமல் விடமாட்டாள். அதைக் கூடக் சீதாவின் மனம் ஏற்பதில்லை - தட்டிக் கழிப்பது வழக்கம்.

"அண்ணாவின் தொடர்பு இப்போது இல்லாமல்ப் போச்சு" என்று மட் டும் தமக்கைக்குக் கூறி வேதனைப்பட்டுக் கொண்டு உடனடியாகத் தனது வீடு திரும்பிவிடுவாள். தமையன் றெங்கனிலும் அவனது மனைவி பிள்ளைகளி லும் அளவு கடந்த பாசம் அவளுக்கு. அவளுக்கு அவர்கள் உயிரென்று சொன் னாலும் பொருந்தும்.

வன்னிப் போர் சூடுபிடித்து உக்கிர கட்டத்தை அடைந்த சேதிகள், யாழ்ப்பாண நாளேடுகளில்த் தினம் தினம் வந்து கொண்டிருந்தன. "இடம் மாறி இடம்மாறி ஓடி அலையும் வன்னிப் பொதுமக்கள், பாதுகாப்பைத் தேட முடியாமல் அலைகிறார்கள். சமயலில்லை - உணவில்லை - பசியும் பட்டினி யும்- கவலையும் கண்ணீருமாக வேதனைப்படுகிறார்கள். சில வேலைக ளில், பதுங்குகுழிகளை நாடிக் கால் வைத்தாலும் அங்கும் ஒரே ஷெல் அடி. சில பதுங்குகுழிகளுக்குள்ப் பாதுகாப்புத் தேடிய பலரின் கதியும் அதோ கதி தான்.

கிளிநொச்சி - தருமபுரம் - வன்னிபுரம் என்றெல்லாம் ஓடித்திரிந்து தங் களைப்பாதுகாப்பதற்காக, மாத்தளன் மண்ணில்க் கால்பதித்துத் தப்ப முயன்ற வேளை, ஷெல்கள் விழுந்து வெடித்ததில்ப் பல உயிர்கள் காவுகொள்ளப்பட் டன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவரில் ஐவர் அந்தச் ஷெல்களுக்குப் பலியாகி விட்டனர். ஒரு சிலரால் மட்டுமே தப்பமுடிந்தது.

எங்கும் மரண ஓலங்கள் - இரத்த ஆறுகள் - பிணக்குவியல்கள். ஷெல் மழையிலும் குண்டு மழையிலும் உயிர் நீத்துப் பிணக்குவியல்களாய் ஆகியவர் களின் பூதவுடல்கள் மீது கால் வைத்து மிதித்து அங்கிருந்து உயிர் தப்பிப் பிழைத்து மாத்தளன் மண்ணில்க் கால்பதித்தபலர், வவுனியாக் காம்புகளில்த் தங்கியிருக்கிறார்கள் என்றெல்லாம் சேதிகள் அடிபட்டுக் கொண்டிருந்தன.

இதையெல்லாம் நினைக்க நினைக்கச் சீதாவின் கண்களில் ஒரே நீர். அண்ணனுக்கும் அவரது மனைவி பிள்ளைகளுக்கும் என்ன ஆகியிருக்குமோ என்று மனதைப்போட்டுக் குழப்பிக்கொண்டிருந்ததால் வழிந்தோடும் கண் ணீர் தான் அது. காலிழந்து கையிழந்து அவஸ்தைப்படும் குழந்தைகள் - இளைஞர்கள் -யுவதிகள் - முதியோர்கள் ஏராளம் என்றெல்லாம் வெளியாகும் செய்திகள் அவளைக் கதறியழவைத்தன.

ஷெல் அடிப்பது படை வீரர்களா புலிப்போராளிகளா எவருக்குந் தெரி யாது. ஆண்டவர் ஒருவருக்குத்தான் வெளிச்சம் என்று யாழ்ப்பாணத்தில்ப்

பலர் கதைத்துக் கொள்வார்கள். கீதாவும் அதற்கு விதிவிலக்கல்ல.

"ஐயோ! எங்கடை வன்னித் தமிழ் இனத்துக்குத் தானா இந்த விதி வர வேணும். தெய்வமே! ஏனிப்பிடி விதிக்கிறாய் - வதைக்கிறாய் - பார்த்துக் கொண்டிருக்கிறியே? வேடிக்கை பாக்க வன்னித் தமிழ் இனத்தைத்தான் நீ தெரிஞ்செடுத்தியா? தமிழினத்துக்கு அநியாயம் செய்ய நீ துணிஞ்சிட்டியா?

இந்த அநியாயம் நடக்கக்கூடாதெண்டுதானே லட்சோப லட்சம் இலங்கைத் தமிழர் கனடாவுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் போய் இலங்கை உறவை அறுத்துக் கொண்டிருக்குதுகள் - தமிழர் பண்பாட்டை இழந்து கொண்டிருக்குதுகள்.

பரம்பரை பரம்பரையாக வாழும் நமது மண்ணில்-வன்னி மண்ணில் வன்னி மக்கள் தமது உரிமையுடன் மறுபடியும் வாழும் நிலையைப் பெறுவதற்கான வழியைச் செய். ஆண்டவா! இனியாவது கண்ணை விழித்துப் பார். காம்ப்பு வாழ்க்கையும் வறுமை வாழ்க்கையும் அதுகளுக்கு இனி வேண்டவே வேண்டாம் என்றெல்லாம் அழுதழுது வேண்டுவாள்.

"ஆயிரம் ஆயிரம் என்ற எண்ணிக்கையில் வன்னித் தமிழ்ப்பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்" என்ற சேதி பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருந்தபோது, கீதாவின் நெஞ்சறைகள் வெடித்துச் சிதறும். உடனடியாகப் போய் விடுவாள் பிள்ளையார் கோயிலுக்கு.

கடல்க்கரைப் பிள்ளையார் தான் அவள் வணங்கும் தெய்வம். ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் வரை அந்தப் பிள்ளையார் கோயிலில்த் தவம் கிடக்காமல் அவள் வீடு திரும்புவதில்லை. பிள்ளையாரில் அவளுக்கொரு தனிப் பக்தி.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. வன்னி நிலப்பரப்பு முழுவதையும் தம் வசமாக்கிவிட்டனர் படையினர். படையினரை எதிர்த்தாடிய புலிப் போராளிகள் தழுவியது தோல்வியை. கூடுதலான போராளிகள் படையினரால்ப் பிடிபட்டும் கொல்லப்பட்டுமுள்ளார்கள். ஒரு சிலருக்குச் சரணடைவதைத் தவிர வேறு வழி கிடைக்கவில்லை. ஒரு சிலர் எங்கேயென்று தெரியாத நிலை.

இலங்கை அரச படையினர்க்கும் ஆட்சிக்கும் மாபெரும் வெற்றி. வெற்றிப் பூரிப்பில்ப் பெரிய விழா எடுக்கிறது இலங்கை அரசு என்ற சேதிகள் வெளி வந்தன. படையினரின் உள்ளமெல்லாம் ஒரே பூரிப்பு.

வவுனியா செட்டிக்குளம் போன்ற இடங்களில்ப் படையினர் அமைத்த காம்ப்புகளில் அமர்த்தப்பட்டனர் வன்னியில் உயிர் தப்பிய பொதுமக்கள். காலச் சுழற்சியில்ப் படையினரின் அனுமதியுடன் ஒரு தொகுதியினர் தாம் விரும்பிய இடங்களுக்குச் சென்று குடியேற முடிந்தது. அதுவும் உறவினர்களின் வீடுகளில் அல்லது அவர்களின் வெறும் காணிகளில் ஓலைக் குடிசை கட்டி. யாழ்ப்பாண மண்ணும் பலரை ஆதரித்தது. இதைக் கேள்வியுற்ற கீதாவின் நினைவிலே றெங்கன் குடும்பம் நிழலாடாமலில்லை.

"அண்ணன் உயிரோடு இருக்கிறாரா மனைவி பிள்ளைகளோடு இங்கு வருவாரா" என்று அந்த நினைவு ஏங்கிக் கொண்டிருந்தது. "யாழ்ப்பாணம் வந்தவர்களோடு அண்ணனும் குடும்பமும் வந்திருக்கலாந்தானே ஏன் வர

ரேல்லை? தெய்வமே பிள்ளையாரே! அண்ணனும் குடும்பமும் பத்திரமாக இஞ்சை வந்து சேர வேணும்.'' என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்த கீதாவின் முன் அன்றொரு நாள் றெங்கனின் சிநேகிதன் சிவனும் அவனது மனைவியும் மூன்று பிள்ளைகளும்.

வன்னியிலிருந்து அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதையறிந்த கீதா அவர்களை வரவேற்றாள். அவர்களோடு வந்த இரண்டு வயதுக் குழந்தை, கீதாவின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. கீதாவின் முகம் அந்தக் குழந்தைக் குப் புதியது -பழக்கமில்லாதது என்பதால் வீறிட்டழுதது அந்தக் குழந்தை.

குழந்தையின் அழுகையைக் கட்டுப்படுத்துவதற்காக வீட்டு அறைக் குள் ஓடினாள் கீதா குழந்தை யைத் தனது தோளில்ப் போட்டுத் தடவியபடி. குழந்தையின் இரண்டு கைகளிலும் 'பிஸ்கற்'. குழந்தை தனது வலது கையி லிருந்த 'பிஸ்கற்'ரைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. சிவன் முன்னால் வந்து நின்றாள் கீதா. கதையைத் தொடர்ந்தார் சிவன்.

றெங்கனும் அவனது மனைவி பிள்ளைகளும் ஷெல் அடியின் அகோரத் தைத் தாங்க முடியாமல் உயிர் தப்புவதற்காக மாத்தளனை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததையும் அப்படி ஓடிப்போனபோது அந்த வழியில் விழுந்த ஷெல்கள் அவர்களில் ஐவரைப் பதம் பார்த்ததையும் இந்த இரண்டு வயதுப் பாலன் றமணனைச் ஷெல்த் துண்டுகள் தாக்காததால் றமணன் தப்பிவிட் டான் என்பதையும் சிவன் மூலம் அறிந்தாள் கீதா.

நடந்ததை நடந்தபடி சொன்ன சிவனின் கண்களிலிருந்து வடிந்து கொண்டிருந்தது கண்ணீர். சிவனோடு சேர்ந்து அவனின் மனைவி பிள்ளைக ளின் கண்களும் அழத் தொடங்கின. சம்பவத்தைக் கேட்ட கீதா கதறியழுது விட்டாள். அவள் கதறியதை நிறுத்துவதற்குப் பல நிமிடங்கள் சென்றன. அவளது இடுப்பிலிருந்த குழந்தையோ கீதாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. குழந்தையைப் பார்த்துவிட்டுக் கதையைத் தொடர்ந்தார் சிவன்.

"பிள்ளை கீதா, நானும் றெங்கனும் இனியில்லையெண்ட சிநேகிதம் வன்னி நிலப்பரப்பிலை வாழிற எல்லாருக்கும் அது தெரியும். இண்டை வரை ஒருத்தரை ஒருத்தர் கோபிக்காமல்-வெறுக்காமல்-சண்டை பிடிக்காமல்-அன்பாக-அமைதியாக எமது பண்பாட்டை இழந்துவிடாமல் வாழ்ந்தனாங் கள். றெங்கன்ரை குடும்பமும் என்ரை குடும்பமும் சரியான ஒட்டு.

உண்மையைச் சொன்னால் றெங்கன் ஒரு அசல்த் தமிழன். இலங்கை யிலை வாழிற சிங்கள இனம் போலை நாங்களும் ஒரு தேசிய மரபு -தேசிய இனம் இந்த முத்திரையைத் தமிழினம் மறக்கப்படாது - உறுதிப்படுத்த வேணும் எண்டு றெங்கன் அடிக்கடி சொல்லுவான்.

எங்கடை தமிழ் மரபுக்குரிய மொழி மதம் உடை உணவு இதெல்லாத் தையும் கட்டாயம் நாங்கள் பேண வேணும் எண்டதிலையும் அவனுக்குச் சரியான கரிசனை - அக்கறை. வன்னியிலை நடக்கிற விழாக்களிலை வைபவங் களிலை, அது அரச விழாக்களாயிருக்கலாம் பிரத்தியேக வைபவங்களாயிருக்க லாம் லோங்ஸ் போட மாட்டான். ஆனால் ஆங்கிலம் மிகச் சரளமாகப் பேசு

வான். வேட்டி நஷனல் சால்வை இவைகள் தான் அவன்ரை உடை. பிள்ளை யார் பக்தியிலும் அவ னுக்குச் சரியான நாட்டம்.

உணவிலும் அவன் அப்பிடித்தான். மத்தியானம் ஒரு நேரந்தான் சோறு கறி. காலையிலும் இரவிலும் குரக்கன் புட்டு - ஒடியல்ப்புட்டு அதைவிட இடையிடையே ஒடியல்க்கூழ் - பனம் பொருள்ப் பண்டங்கள். இத்தகைய சாப்பாட்டிலை தான் அவனுக்குப் பூரண நாட்டம். அதாலை அவனுக்கு வருத்தம் வாறதும் குறைவு - நல்ல சுகதேகி.

எல்லாத் தமிழினமும் தங்கடை தேசிய் மரபுரிமையைப் பேணிக் காத்து வாழவேணுமெண்டது அவன்ரை ஆசை - இனியில்லையெண்ட ஆதங்கம். எங்களையும் அப்பிடி ஆக்கிப் போட்டான். அவன்ரை இழப்பு எங்களுக்கு இடிவிழுந்த மாதிரி.

பிள்ளை கீதா, உன்னைப் பற்றித் தான் எங்களோடை றெங்கன் மனம் விட்டுக் கதைக்கிறவன். நீ ஏ.எல் வரை படிச்சதும் அந்தப் பரீட்சையில் நீ முதல் முறை பெயில் விட்டபடியாலை இனிப் படிக்க மாட்டனெண்டு அடம்பிடிச்சு வீட்டை இருந்ததும் உன்னைப் பெண் கேட்டு வந்த உன்ரை சொந்தக்காரன் ஒருத்தனுக்கு உன்னைக் கட்டிக் குடுத்ததும் உன்னைக் கட்டிக் கொஞ்ச மாசத்தாலை உன்ரை கணவன் உன்னை வெறுத்து இன்னுமொருத் தியைக் காதலிச்சு, தமிழ் மரபுப் பண்பாட்டையும் சிதைச்சு அவளைக் கொண் டோடினதையும் உன்ரை அக்கம் பக்க வீட்டார் தமிழ் மரபுப் பண்பாட்டை அசட்டை பண்ணி அவனுக்கு உதவி ஒத்தாசை குடுத்தவை எண்டதையும் நீ சரியான வாய்க்காரி எண்டு சொல்லித்தான் அவன் உன்னை விட்டிட்டுப் போட்டான் எண்டதையும் சொல்லிச் சொல்லி ஒரு நாள் அழுதான்.

அந்தப் பெட்டையை உன்ரை புருஷன் கொண்டோடின பிறகு அவனை டிவோஸ் பண்ணிறதுக்காக அவனுக்கு நீ வழக்கு வைச்சதையும் மாசா மாசம் உனக்குப் படி அளக்கும்படி 'கோட்' அவ னுக்குத் தீத்ததையும் றெங்கன் மூலமாக என்னாலை அறிய முடிஞ்சுது."

இதையெல்லாம் சொல்லிச் சொல்லி சிவன் வேதனைப்பட்டபோது கீதாவின் கண்கள் வடித்த நீர் கொஞ்சமல்ல. அவளுக்கு ஆறுதல் கூறிச் சமாதா னப்படுத்தினார் சிவன். பிள்ளை கீதா, றெங்கன்ரை நினைவாக-நினைவுச் சின்ன மாக, ரமணன் உன்னோடை இருக்கட்டும். இது எங்கடை ஆசை. ஷெல் அடி யிலை றெங்கனும் றெங்கன்ரை குடும்பமும் அழிஞ்சுபோச்செண்டு கேள்விப் பட்டு நானும் என்ரை குடும்பமும் மாத்தளனுக்குப் போனம்.

ரமணன் மட்டும் தப்பிப் பிழைச்சு அழுதுகொண்டிருந்தான். எங்களுக் கும் அழுகை வந்திட்டுது. அதைக் கட்டுப்படுத்த எங்களாலை முடியேல்லை. றெங்கனும் அவன்ரை குடும்பமும் சந்திச்ச அந்தப் பரிதாப மரணத்தை எங் கடை உணர்வு எப்பிடித் தான் தாங்கிச்சுதோ சயிச்சுதோ? அங்கை அங்கை இறந்து கிடந்த எத்தினையோ பிரேதங்களை மிதிச்சு நடந்துதான், அழுது கொண்டிருந்த ரமணனைத் தூக்கித் தோளிலை போட்டுக் கொண்டு வெளி யேறினம்.

யுத்தமும் ஒரு முடிவுக்கு வந்திட்டுது. இராணுவத்தின்ரை அனுமதி

யோடை வவுனியாக் காம்ப் பிலை இருந்திட்டு இப்ப யாழ்ப்பாணம் வந்திட்டம். எங்கடை ஒரு சொந்தக்காரன்ரை காணியிலை மண் குடிசை கட்டியிருக்கிறம். றமணன் இனி உனக்குரியவன். றமணனை வளக்கிறது உனக்குக் கஷ்டமெண்டால் நாங்கள் அவனைக் கொண்டு போறம்."

சிவன் இப்படிச் சொன்னதும் சிவனை மேலும் பேசவிடாமல்த் தடுத்து விட்டாள் கீதா. "என்ரை ஆசை அண்ணன்ரை சாயல் என்ரை குஞ்சு றமணனிலை அப்பிடியே பதிஞ்சிருக்கு. என்ரை அண்ணனை உரிச்சு வைச்சுப் பிறந்திருக்கிறான். அண்ணன்ரை நினைவாக அவனை நான் பாதுகாத்து வளப்பன்.

கடவுள் எனக்குத் தந்த நினைவுச் சின்னம் இந்த றமணன் குஞ்சு. இந்த நினைவுச் சின்னத்தைக் கொண்டு வந்து நீங்கள் எனக்குத் தந்ததுக்காக எண்டைக்கும் நான் உங்களுக்குக் கடமைப்பட்டவள்."

"பிள்ளை கீதா, றமணனை நாங்கள் உனக்குத் தந்திருக்கமாட்டம். ஆனால், குழந்தைப் பாக்கியம் உனக்கில்லையெண்டு என்னைக் காணிற நேரமெல்லாம், அழுதழுது கண்ணீர் வடிப்பான் றெங்கன். அதை நினைச்சுத்தான் என்ரை மனுசியும் நானும் இந்த முடிவுக்கு வந்தம்.

நாங்கள் மறுபடியும் எங்கடை வன்னி மண்ணிலை வாழத் தான் விரும்பிறம். கெதியிலை அங்கை போற வாய்ப்பு வரும். எங்கடை சொந்த வீடு வளவு அங்கைதான். எங்கடை காணிக்குப் பக்கத்திலை தான் றெங்கன்ரை வீடு வளவு. வாழிறதுக்குத் தேவையான பொருளாதார வளமெல்லாம் றெங்கன்ரை வளவிலையும் இருக்கு. நாங்கள் போகேக்கை நீயும் றமணனும் எங்களோடை வரலாம்.

அண்ணன்ரை சொந்த வீடு வளவிலை வாழிறமெண்டு நீயும் பெருமைப்படுவாய். அதோடை றெங்கன் எப்பிடி வாழ்ந்தானோ அப்பிடி றமணனும் வாழவேணுமெண்டு நாங்களும் ஆசைப்படுறம். றெங்கன்ரை பேரை அவன்தான் நிலை நாட்ட வேணும் - நிலைநாட்டுவான் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு."

சிவன் இப்படி முடித்ததும், றமணனை அணைத்தணைத்து முத்தம் முத்தமாகப் பொழிந்து கொண்டிருந்தாள் கீதா. அதை ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்த சிவனும் அவன் குடும்பத்தாரும் ஆனந்தக் கண்ணீர் மல்க மல்கக் கீதாவிடம் விடைபெற்றுக் கொண்டு, மூன்று கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தமது இருப்பிடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

தெருவில்ப் போய் அவர்கள் மறையும் வரை, கீதாவின் கையும் இடைக்கிடை றமணனின் கையும் சிவன் குடும்பத்தைப் பார்த்து அசைந்து கொண்டேயிருந்தது.

# 4 இந்தக் கொடி

இரண்டு தடவைகள் ஏ.எல்ப் பரீட்சை எடுத்தபோதும் வெற்றியை அரவணைக்க அந்தச் சுஜேந்தினியால் முடியவில்லை. முதன்முறை நான்கு பாடங்களிலும் நான்கு 'சி' க்கள். பல்கலைக்கழக அனுமதி அவளுக்குக் கிடைக்கவில்லை.

"இந்தமுறை நாலு 'சி' உனக்குக் கிடைச்சபடியாலை அடுத்தமுறை உனக்கு வெற்றி கிடைக்கும். கவனமாய்ப்படி பிள்ளை. ரியூஷனுக்குப் போகாமல்ப் படிச்ச உனக்கு நாலு 'சி' கிடைச்சதே வெற்றி. ரியூஷனுக்குப் போய் நீ படிச்சிருந்தால் உன்ரை ரிசல்ற்...."

தகப்பனை மேலும் பேச விடாமல்த் தடுத்துவிட்டாள் சுஜேந்தினி. "எனக்கு ரியூஷன் வேண்டாம். ரியூசனுக்குப் போற எல்லாரும் யூனிவேசிற்ரிக்குப் போகினமே. போனமுறை நெற்போல் பிறக்ரிஸ் - விஞ்ஞான ஆராய்ச்சிச் சங்கக் கூட்டம் எண்டு கூடுதலாக மினக்கெட்டிட்டன்."

"இந்த முறை அதைக் 'கட்' பண்ண முடியாதே பிள்ளை"

"அப்பிடித்தானப்பா ரீச்சேஸ்சும் சொல்லினம். அதைத் தான் செய்யப் போறன். வீட்டிலையிருந்து படிப்பன். ரியூஷன் வேண்டாம். ரியூஷனுக்குப் போக ஒரு சைக்கிள் - மாதா மாதம் ரியூஷன் பீஸ் இதுக்கெல்லாம் கொஞ்சக் காசே. நாளாந்தம் மட்டுமட்டாச் சிலவு செய்யிற எங்களாலை உதுகளுக்கெல்லாம் சிலவழிக்க முடியுமே."

"உனக்குச் சிலவழிக்கிற காசு நல்லதொரு தேவைக்குத் தானே? உன்ரை வருங்காலத்துக்கு நன்மை தருமெண்டு தானே பிள்ளை..."

"நீங்கள் நினைக்கிறது சரி. காசுக்கு என்னப்பா செய்யப் போறியள்?"

"என்னோடை வேலை செய்யிறவையும் நானும் சேந்து ஒரு இருபதாயிரம் ரூபாய் சீட்டுப் போட யோசிக்கிறம். முதல்ச் சீட்டு எனக்கு. விசயத்தை நான் விளக்கின பிறகு முதல்ச் சீட்டு எனக்கெண் டும் சொல்லிப் போட்டினம். இன்னும் இரண்டு மாசத்தாலை சீட்டுத் துவங்கும். அந்தக் காசிலை உனக்கொரு சைக்கிள் தம்பிக்கொரு சைக்கிள். சைக்கிளிருந்தால்த் தங்கச்சியையும் ஏத்திக் கொண்டு தம்பி ஸ்கூலுக்குப் போய் வருவான். அதுகளும் பாவங்கள். உந்தச் சின்ன வயசிலை ஒரே நடை."

"அப்பா உங்கடை சீட்டு விசயம் சரி வந்தால் மாதா மாதம் ஒரு பெரிய தொகை உங்கடை சம்பளத்திலை போகப் போகுது. அதுவும் எத்தினை

மாசம். உங்களுக்குக் கிடைக்கிறதே மூவாயிரம் அம்மான்ரை தையல் உழைப் பும் இருந்திட்டொருக்கா வரும். வருமானம் போதாதெண்டு இப்பவே தள் ளாடிக் கொண்டிருக்கிறம். இந்த நிலையிலை உங்கடை சீட்டும் சரி வந்தால் நாங்கள் ஐஞ்சு பேரும் மூச்செடுக்க முடியாமல் மண்டையைப் போட வேண் டியது தான்."

"அப்பிடியொண்டும் நடக்காது சமாளிச்சுப் பாப்பம். உதைப் போய்க் கொம்மாட்டைச் சொல்லிப் போடாதை பிள்ளை. பேசாமலிரு."

"அப்பா எனக்கோ தம்பிக்கோ இப்ப சைக்கிள் முக்கியமில்லை. எங் கடை பொற்பதி றோட்டிலை யிருந்து கொக்குவில் ஹிண்டுக்குப் போறது பெரிய தூரமே. ஆறாம் வகுப்பிலையிருந்து ஏ.எல் வரை அங்கைதான் என்ரை படிப்பு. நடந்து தானே போனனான். நடக்கிறது உடம்புக்கு நல்லது. அது தான் சொல்றன் சீட்டு நீங்கள் போட வேண்டாம். இப்பவே அவையளிட் டைச் சொல்லுங்கோ நீங்கள் சேரேல்லையெண்டு."

தகப்பனைச் சிந்திக்க வைத்துவிட்டுப் பாடங்களை மீட்பதற்காகச் சென்றுவிட்டாள் தனது அறைக்குள். இரண்டாவது தடவை அவளுக்கு ஒரு 'ஏ' இரண்டு 'பீ' ஒரு 'சி' இருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்க வில்லை. ஐந்து புள்ளிகள் வித்தியாசத்தால்த் தோல்வியடைந்த அவள் தனது தோல்வி பற்றிக் கவலைப்படவேயில்லை.

உணவு கிடைக்கவில்லை என்பதற்காகச் சோர்வுற்றுக் களைத்து முடங் கிக் கிடக்கும் பழக்கம் எறும்புக்கு இல்லையென்பது சுஜேந்தினியின் நுனிவிர லிலே செதுக்கப்பட்டிருக்கும் பாடம். முன்னைய நாள்களைவிட அவளது சுறு சுறுப்பு இப்போது இரட்டிப்பாகிவிட்டது. தன்னைப் படிப்பித்த ஆசிரிய ஆசி ரியைமாரிடம் மாலை நேரங்களில்ச் சென்று தனது பாட விடயங்களில் ஏற் படும் சந்தேகங்களைத் தெளிவாக்க அவள் தவறியதேயில்லை.

"மனதைத் தைரியப்படுத்திப் படிக்கும் உனக்கு இந்த முறை வெற்றி கிடைக்கும் சுஜேந்தினி. ஆங்கிலேயரின் அடிமைத் தளையிலிருந்து தனது நாட்டை மீட்பதற்காக ஆறுமுறை போர் செய்து தோற்றவன் றொபர்ட் புறூஸ். சலிக்கவில்லை-முகஞ் சுளிக்கவில்லை. ஏழாவது முறை **1314**இல் மறு படியும் ஆங்கிலேயரைக் கடுமையாக எதிர்த்துப் போர் செய்து வென்று, தனது ஸ்கொட்லான்ட் நாட்டைச் சுதந்திர நாடாக்கினான் என்பது வரலாறு. தோல் விகள் என்றைக்கும் தோல்விகளாக இருக்காது." என்று அவளை உற்சாகப்படுத் தினார்கள் அந்த ஆசிரிய ஆசிரியைமார். தகப்பனும் அவளை உற்சாகப்படுத் தாமலில்லை. இந்த முறையாவது சுஜேந்தினி ரீயூஷனுக்குப் போகவேண்டு மென்பது அவருடைய ஆதங்கம். அது பற்றி மனைவியோடு அடிக்கடி கதைத் துக் கொள்வார்.

"இந்த முறையாவது பிள்ளையை ரியூஷனுக்கு அனுப்பலாமெண் டால்....? நீயொருக்கால்ச் சொல்லிப் பாரன் நேசம்மா."

"அவளுக்கென்ன ரண்டு நாக்கே. அவள் ஒருக்காச் சொன்னால்ச் சொன் னது தான். அண்டைக்கு உங்களுக்குச் சொன்னதைத் தான் எனக்கும் சொல்லு வாள். பேசாமலிருங்கோ."

ஒரு சில விநாடிகள் ஒருவரோடொருவர் கதைக்கவில்லை. அதன் பிறகு தத்தம் அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டார்கள். யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவிலுள்ள மிகப் பெரிய அச்சகமொன்றில் அச்சுக் கோப்பாளனாகப் பணி செய்பவர் இந்தப் பாலன். வயது அறுபது. நேர்மையும் சுறுசுறுப்பும் அவர் வளர்த்துக் கொண்ட ஒரு சில பண்புகள். தான் படிக்கா விட்டாலும் தனது மகள் படிக்க வேண்டும் உத்தியோகம் பார்க்க வேண்டு மென்பது அவரது அவா.

அவரது மனைவி நேசம்மாவும் அப்படியான ஒருத்தியென்பதே உண்மை. திருமணம் அவளது ஏ.எல்ப் படிப்பைக் குழப்பிவிட்டது. சந்தர்ப் பங்கள் உயர் கல்வியைத் தடுத்துவிடுமென்பதற்கு நேசம்மாவும் ஒரு உதார ணம். அதனால்த்தான் ஏ.எல்லோடு படிப்பை நிறுத்திவிட்டு அச்சுக்கூடத் தில் வேலை பார்த்த பாலனைத் திருமணஞ் செய்து கொண்டாள்.

அன்று ஒரு ஞாயிறு. பாலன் வீட்டில் காலடி வைத்தார் நாகமூர்த்தி, நேசம்மாவின் ஒரேயொரு சகோதரம். தனது நான்கு பிள்ளைகளுக்கும்- இரண்டு ஆண்கள் அதன் பிறகு இரண்டு பெண்கள் - தேவையான வசதிகளை யெல்லாம் செய்து கொடுக்கக்கூடிய பணமும் பொருளாதாரமும் அவரிட முண்டு என்பதை அவருடைய கோப்பாய் ஊர் அறியும். இன்று அவர் வந்தது சுஜேந்தினியின் கலியாண விடயமாக. கலியாணக் கதை வளர்ந்து கொண்டே யிருந்தது.

"பையன் சுவிஸ். வடிவானவன் இருபத்தொன்பது வயசு. சுஜேந்தினிக்கு இருபத்திரண்டு. வயசுப் பொருத்தம் சரி. நிறமும் சுஜேந்தினியைப் போலை. பேர் சுகந்தன்."

"எப்பிடியண்ணை பொடியன்ரை குணம்.

"மானிப்பாயிலை எனக்குத் தெரிஞ்சவையிட்டை விசாரிச்சனான் ஒருத்தரும் பிழையாய்ச் சொல்லேல்லை. வடிவானவன் - நல்ல நிறம்-குண மும் அப்பிடித்தான் எண்டு சொன்னவை."

"குறிப்புச் சரியெண்டால்த் தானே மச்சான் மிச்சத்தை யோசிக்கலாம்."

"பொடியன்ரை குறிப்புத் தந்தவர் தகப்பன் எங்கையாலும் வசதியாய் வந்தால்ப் பாக்கச் சொல்லி. சுஜேந்தினியின்ரை நீங்கள் தந்த குறிப்பும் என் னட்டை இருந்தபடியாலை எங்கடை கோப்பாய்ச் சாத்திரியார் சோமுவிட் டைக் காட்டினனான். நல்ல பொருத்தம். பொடியன்ரை தகப்பன் செந்தில் என்ரை சினேகிதன். என்ரை தங்கச்சியின்ரை பிள்ளையெண்டபடியால் அவைக்கும் நல்ல விருப்பம்"

"பெரிய அளவிலை பணம் நகை வீடு எண்டு கேக்கமாட்டினமே அண்ணை"

"உங்கடை நிலமை அவைக்குத் தெரியும். கலியாணக் கதை வரேக்கை வீடும் வளவும் பிள்ளை இப்ப போட்டிருக்கிற நகையும் கொஞ்சக் காசும் போதுமாம். சுஜேந்தினியைப் பற்றி உங்களுக்குத் தெரியாமல் உங்கடை அக் கம் பக்கங்களிலை கேட்டிருக்கினம். அவைக்குச் சுஜேந்தினியைப் புடிச்சுக் கொண்டுது. ஒரு லட்சம் கேக்கினம். அரைவாசியை நான் தாறன். அரை

வாசியை நீங்கள் போடுங்கோ. இனி உங்கடை விருப்பம். அடுத்த ஞாயிறு வருவன்."

மல்யுத்த வீரனொருவன் சாதாரண மனிதனைத் தூக்கியெறிந்தால் எறியப்பட்டவன் எப்படி அவஸ்தைப் படுவானோ அப்படியான ஒரு நிலைக்குள் ஆகி மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள் பாலனும் நேசம்மாவும்.

"எங்கடை கஸ்ரம் தெரிஞ்சும் கொண்ணர் இப்படிச் சொல்லிப் போட்டுப் போறார் பாத்தியே நேசம்மா. அவரைப்போலை நானென்ன தரகர் வேலை செய்து சம்பாதிக்கிறனே. இல்லையெண்டால் வீட்டிலை நகை அடைவு புடிச்சு உழைக்கிறனே? என்ரை சம்பளத்தையும் இடைக்கிடை உனக்கு வாற தையல் உழைப்பையும் நம்பித்தானே வாழுறம்"

"வெளிநாட்டு மாப்பிள்ளையெண்டுதான் அண்ணை உதை விரும்பியிருப்பார். பிள்ளை சுவிஸ்சுக்குப் போனால் உழைக்கும். தங்கச்சியின்ரை குடும்பமும் நிமிரும் எண்டு அவர் நினைச்சதிலை தவறில்லை. உது வேண்டாமெண்டு திடீர் முடிவுக்கு நாங்கள் வரப்படாது."

"சரிவராதெண்டால் விடவேண்டியது தானே. ஓம் சொல்லிப் போட்டு அங்கையும் இங்கையும் ஓடித்திரியிறதே நேசம்மா. யோசிச்சுப்பார்."

"நான் யோசிச்சுத்தான் சொல்றன். தாலியைக்கழட்டி ஒரு மஞ்சள் கயித்திலை கோத்துப் போட்டு........"

"உனக்கென்ன பைத்தியமே"

"எனக்குப் பைத்தியமோ இல்லையோ எண்டதை நான் சொன்ன பிறகு தீர்மானியுங்கோ."

"சரி சொல்லு"

"கொடியை அண்ணரிட்டை அடைவு வைச்சுச் சீதனப் பணத்தைக் குடுப்பம். பிள்ளை சுவிஸ்சுக்குப் போய் உழைச்சனுப்பும். பிறகு கொடியை அடைவெடுப்பம்" நேசம்மா சொல்லி முடிக்குமுன் அவளின் முன்னால் வந்து நின்றாள் சுஜேந்தினி. "என்னைக் கட்டி ஒரு கிழமையாலை இல்லையெண்டால் ரண்டு கிழமையாலை அவர் போயிடுவார் சுவிஸ்சுக்கு. நான் இஞ்சை முடிச்சும் முடிக்காதவள் போலையிருக்கவேணும். அப்படியிருக்கிறதை விட கலியாணம் செய்யாமலிருக்கிறதை விரும்பிறன் - நல்லவளாயிருக்க விரும்பிறன்.

மற்றது திடீரெண்டு சுவிஸ் அரசாங்கம் ஒரு சட்டம் போட்டு வெளிநாட்டாரைக் கப்பலேத்தி விட்டுதெண்டால், இஞ்சை வந்து அவர் என்ன செய்யப் போறார். டொக்டர் வேலை - எஞ்சினியர் வேலை - எக்கவுண்டன் வேலையே அவருக்காக இஞ்சை காத்துக்கொண்டிருக்கு.

கடைசியாய் ஒண்டு. அதையும் கேளுங்கோ. இந்தமுறை பாஸ்பண்ணுவன். எனக்காக நீங்கள் விக்கப்போற கொடியை வித்து என்ரை பேரிலை வங்கியொண்டிலை போடுங்கோ. அதிலை வாற வட்டிப்பணத்திலை நான் படிச்சு டொக்டராய் வருவன். என்னிலை உங்களுக்கு நம்பிக்கையெண்டால் நான் சொன்னதைச் செய்யுங்கோ" விறுக்கென்று சொல்லிவிட்டுத் தனது படிப்பறைக்குள்ச் சுஜேந்தினி சென்றது பாலனையும் நேசம்மாவையும் ஒரு

கலக்குக் கலக்கி விட்டது. அந்த இடத்தில் மேலும் நிற்க மனமில்லாமல் வளவின் பின்புறம் சென்று பூவரச மரநிழலில் அமர்ந்து கொண்டார்கள்.

ஒரு சில நிமிடங்கள் எந்த வார்த்தையும் பரிமாறப்படவில்லை. முகத் தில்ச் சோகமே படர்ந்து கொண்டிருந்தது. அப்போதுதான் "உங்கடை சுஜேந் தினி நல்ல கெட்டிக்காரி. கடன்பட்டெண்டாலும் படிப்பியுங்கோ. தவறவிட் டியளெண்டால் உங்கடை குடும்பத்திலை ஒரு டொக்ரரை நீங்கள் இழப்பி யள்"

என்று அண்டைக்கொரு நாள் சுஜேந்தினியின் பிசிக்ஸ் (Physics) ஆசிரி யர் கட்டாயப்படுத்திச் சொன்னது இவர்களின் நினைவைக் கிளறியது. பாலனை நிமிர்ந்து பார்த்தாள் நேசம்மா.

"என்ரை பிள்ளையைப் படிப்பிக்க எனக்கு மனமில்லையெண்டே என்னை உப்புடிப் பாக்கிறாய் நேசம்மா? எனக்கு நிறைஞ்ச மனமிருக்கு."

வாரங்கள் நகர்ந்தன. தன்னுடைய பத்துப்பவுண் தாலிக்கொடியைக் கழற்றி அதிலிருந்த தாலியை மஞ்சள்க் கயிற்றில் இணைத்துத் தனது கழுத் தில் அணிந்த நேசம்மா உறுதியோடு சொன்னாள் கணவனுக்கு..

"இந்தக் கொடியை வித்து அந்தமுழுப்பணத்தையும் பிள்ளையின்ரை பேரிலை வங்கியொண்டிலை நிலையான வைப்புக் கணக்கிலை போடுங்கோ. வட்டி இப்ப இருபத்தி மூண்டு."

பாலனின் கண்களிலிருந்து துளிதுளியாய் விழுந்தது கண்ணீர். விம்மி வெடித்தழுதான். அது தணிய ஒரு சில வினாடிகள் எடுத்தது. எந்தக்கொடி தனது மனைவியின் கழுத்தை அழகுசெய்து தனது பெயரை அவளுக்கு அடிக் கடி நினைவுபடுத்துகிறதென்று நினைத்தானோ, அந்தக் கொடியை விற்காதே நேசம்மா என்று சொல்ல அவனுக்குத் தைரியம் வரவில்லை. சந்தர்ப்பங்கள் ஒரு மனிதனின் எண்ணத்தையும் உறுதியையும் எப்படி மழுங்கடிக்கின்றன என்பதை எண்ணியபடி தனது சோகஊற்றுப் பார்வையை ஓடவிட்டான் நேசம்மாவின் முகத்தில்.

என்ரை பிள்ளை டொக்ரராய் வந்தால் என்ரை கழுத்தை விட்டுப் போற இந்தக்கொடி மறுபடியும் என்ரை கழுத்திலையிருக்கும். நம்பிக்கையோடை சொல்லுறன் போட்டு வாருங்கோ."

நேசம்மாவின் ஆசையை -ஆதங்கத்தைப் பூர்த்தி செய்யப் புறப்பட் டான் பாலன். தனது கைக்கடிகாரத்தைப் பார்க்கிறான் நேரம் பிற்பகல் மூன்று. அதன் வினாடி முள் தனது இலக்குகளை அடைவதற்காக விறு விறென்று ஏறிக்கொண்டிருந்தது.

'புரட்சி மலர்கள்' என்ற தலைப்பில்

16-06-1990 சஞ்சீவியில் வெளிவந்தது.

# 9 காத்திருந்தாள் சுதேகி

சயிக்கிள் மெக்கானிக்காக வேலை செய்யத் தொடங்கிய நாட்களிலிருந்து, உழைக்கும் வர்க்கத் துக்குள் ஒருவனானான் சுதன். நேர்மை - உண்மை - நம்பிக்கை என்றெல்லாம் அவனால் அமைக்கப்பட்ட வாழ்க்கை வரம்பில் எதுவித வெடிப்போ உடைவோ இதுவரை இருக்கவில்லை. அதனால்த்தான், சயிக்கிள் றிப்பெயருக்காக அவனிடம் வருவோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அந்தத்தொகையில் இருபது வீதமானோர் பெண்களென்பது ஒரு அப்பட்டமான உண்மை.

சுதேகியின் சயிக்கிள், அடிக்கடி அவளுக்குத் தொல்லை கொடுப்பதனால், அதைத் திருத்துவதற்காகச் சுதன் சயிக்கிள் ஷொப்பை நாடி அவள் வருவதுண்டு. சயிக்கிள் தானாகவே தொல்லை கொடுக்கிறதா அல்லது சுதேகி தான் ஏதாவது தொல்லைகளை அதற்குக் கொடுத்து அதைச் சுதனிடம் கொண்டு வருகிறாளா என்ற சந்தேக உணர்வோடு, சுதன் சயிக்கிள் ஷொப்புக்கு அக்கம் பக்கம் உள்ளவர்களும், அக்கடையைக் கடந்து நாளாந்தம் போக்குவரத்துச் செய்பவர்களும், சுதேகியையும் அவளது லுமாலா சயிக்கிளையும் நோட்டமிடத் தவறுவதேயில்லை.

சுதேகி படிக்கும் பாடசாலையிலிருந்து கிட்டத்தட்ட ஒரு அரைக் கிலோ மீற்றர் தூரத்தில்த் தான் சுதனின் சயிக்கிள்க் கடை. தனது சயிக்கிளில் ஏற்பட்ட - ஏற்படும் நோய்களுக்கு உடனடிச் சிகிச்சை கிடைக்கிறது என்ற முதல்க் காரணத்துக்காகவே, சுதனின் கடையை நாடிச் செல்வாள் சுதேகி. அவளின் சயிக்கிள் மட்டுந்தான் சுதனின் சிகிச்சையால் மிக நன்றாக - பசுந்தாக - எதுவித கரகரப்புமில்லாமல் ஓடுதென்று நினைக்கக்கூடாது. அவளது உள்ளத்து நினைவும் அவனது சிகிச்சையால்க் குணமாக்கப்பட்டு, நன்றாகவும் பசுந்தாகவும் ஓடிக்கொண்டிருப்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் சுதன் சயிக்கிள் ஷொப் எந்த வேலையும் செய்வதில்லை- மூடியிருக்கும். அந்த நாட்களில் மட்டுமே சுதனையும் சுதேகியையும் கடைத்தெருக்களில் - வீதிகளில் - சினிமாத் தியேட்டர்களில்ப் பார்க்கலாம். இப்படி ஒரு நிலை ஏற்பட்டதால், சுதன் - சுதேகி விவகாரம் மூலை முடக்கிலிருந்து ஊரெல்லாம் பரவிச் சுதன் சுதேகி வீட்டுக்குள்ளும் விரிந்துவிட்டது.

சுதேகியின் தந்தை மேசன் சின்னமணி பொல்லாத கோபக்காரன். வாய்க்கு வந்தபடி ஏசினான் சுதேகியை. சின்னமணி மட்டுமல்ல அவனின்

மனைவி வன்னமணியும் விட்டுவைக்கவில்லைச் சுதேகியை. ஒரே பேச்சுத் தான். முறைமாப்பிள்ளைக்குத்தான் சுதேகியைக் கட்டிவைக்கவேண்டும் என்று தீர்மானித் திருந்த சின்னமணிக்கு மட்டுமல்ல, சுதேகியின் தாய்மாமன் மாமிக்கும் சுதேகியின் செயல் தாங்கமுடியாத தாக்கமாகவேயிருந்தது.

"உன்ரை அத்தான் சுஜேந்திரனைத்தான் பிள்ளை நீ கட்டவேணும்" என்று சின்னமணியும் வன்னமணியும் அடிக்கடி சுதேகிக்கு நினைவூட்டுவதை யும் சுதேகி மறந்தவளல்ல. இருந்தும் சுதேகியின் மனவிருப்பு சுதன்தான் என் பதை இப்போதுதான் இவர்களும் அறிந்திருந்தனர். இந்த நிலையில்த் தான், சுதேகியை அவர்கள் கடிந்து பேசவேண்டியிருந்தது.

இந்த நிலை சுதேகிக்கு மட்டுமல்ல. சுதனுக்குந்தான். சுதனின் தந்தை பெயின்ரர் சிவப்பிரகாசத்தின் ஆத்திரம், சுதனை அடிக்கடி ஏசிக்கொண்டேயி ருந்தது. "சயிக்கிள் மெக்கானிக் கெண்டாலும் கவலையில்லை. எங்களுக்குச் சுதனை மாப்பிளையாய்த் தாருங்கோ - நாங்கள் எடுக்கிறம். ஐஞ்சு லட்சம் காசும் நாலுபரப்புக் காணியோடை மூண்டறையிலை வீடும் தாறம் எண்டு கேட்ட அந்தக் குடும்பத்துக்கு, நாங்கள் சம்மதம் சொல்ல இருக்கிற இந்த நிலையிலை, எங்களை நீ ஏமாத்திப் போட்டியெடா என்றெல்லாம் சுதனின் தந்தை, சுதனை ஏசாத நாள்களேயில்லை. சுதனின் தாய் சிவசத்தி ஒரே அழுகை. அப்படி அவள் அழுகிற நேரத்தில்த் தப்பித்தவறி சுதன் வந்து "அம்மா" என்றால்ப் போதும், தாயிடம் நன்றாக வாங்கிக் கட்டுவான்.

இந்த ஏச்சுக்களையும் சீற்றங்களையும் கேட்டு, எந்த விதத்திலும் சுதன் மனந்தளரவில்லை. சுதேகியும் அப்படித்தான். குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட மாஜறின் போல், தங்களுடைய மனங்களை அவர்கள் இருவ ருமே கட்டியாக்கிக் கொண்டார்கள். அதனால், தாய் தந்தையரின் ஏச்சுக் களோ சீற்ற அலைகளோ அவர்களின் மனங்களைத் தொளைக்கவில்லை. நடப் பது நடக்கும் நடக்கட்டும் என்ற தாரக மந்திரத்தை உச்சரித்தபடி தங்கள் நாளந்த வேலைகளையும் கடமைகளையும் ஆற்றிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்

சுதேகியின் தளராத மனோநிலை கண்டு கொதித்தெழுந்தார் சின்ன மணி. "போனமுறை உந்தக்கோதாரி ஒண்டும் இல்லாதபடியாலை மூண்டு எஸ் ஆவது எடுத்தாள். இந்த முறை நிச்சயமாய் அதுவும் கிடையாது உவ ளுக்கு. உவளுக்கேன் எ.ஏல் உவங்களுக்கேன் ஒரு படிப்பு - பள்ளிக்குடம் வேண்டாம். எங்களுக்கவள் சமைச்சுப் போடட்டும்." என்று சின்னமணி சீறிய தும் வன்னமணிக்கொரு யோசனையைக் கிளப்பிவிட்டது.

"வீட்டுக்குள்ளை அடைச்சு வைச்சாலும் ஓடிறவள் ஓடத்தான் செய் வாள். ஆனபடியாலை அவள் படிக்கட்டும். அவளை இப்ப பள்ளிக்கூடத் திலையிருந்து நிப்பாட்டினியளெண்டால் அவளைத் தேடிச் சிநேகிதிமார் வரு வினம் ஏன் பள்ளிக்கூடம் வரேல்லை பள்ளிக்கூடம் வரேல்லையெண்டு கேட்டு. உப்பிடி இவளிட்டை வாறபோற பொட்டையளிட்டை அவனுக்கு இவள் கடிதமும் குடுத்து விடுவாள். கடைசியிலை எங்களுக்கும் தெரியாமல்க் கலியாணமும் நடக்கும். உதுக்காகத் தான் சொல்லிறன் அவள் படிக்கட்டு மெண்டு. அவளின்ரை அறிவு, குழந்தையை வளக்கிறதுக்கு உதவுமெண்டதை

மறக்காதைங்கோ”

வன்னமணியின் இந்தக் கருத்தைப் புறந்தள்ள விரும்பாத சின்னமணி சுதேகியைக் கட்டுப்படுத்திப் பிரயோசனம் இல்லையென்று தீர்மானித்துக் கொண்டான். சுதேகி குழந்தைப் பிள்ளையல்ல தாய் தந்தையர் சொல்வதை அப்படியே எடுத்துக் கொள்வதற்கு. இருபத்தொரு வயதுப் பெண் அவள். இரண் டாவது முறை சோதனை எடுத்தாலும் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய திறமை அவளிடம் இல்லை. பாடசாலைப் புத்தகப் படிப்பு மட்டம் என்பது தான் அதற்குக் காரணம். அந்தப் படிப்பில் மட்டமாயிருந்தாலும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் போன்றவற்றை ஆர்வத்தோடு வாசிப்ப தில் அவள் மகா விண்ணி. சுதன் சயிக்கிள் ஷொப்பில் நாளாந்தப் பத்திரிகைக ளும், வாரப் பத்திரிகைகளும் விற்பனைக்குண்டு. வாரப் பத்திரிகைகளை வாங் கிக் கொண்டு போய் அவைகளிலுள்ள கதைகள், கட்டுரைகள், கவிதைகள னைத்தையும் வாசித்து முடிக்காமல் அவள் தூங்குவதேயில்லை.

சுதேகியின் இந்த ஆர்வத்தை நன்றாக ரசித்தான் சுதன். அவனுக்கும் அதே ஆர்வந்தான். இருவரும் ஒன்றிணைவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும். மற்றது வயதுப் பொருத்தம் - மற்றது தேதிப் பொருத் தம்.

சுதேகி நான்காம் தேதி பிறந்தவள். சுதன் முதலாம் தேதிக்காரன். நான் காம் எண்ணுக்கு முதலாம் எண் பொருத்தம் என்று யாரோ ஒரு எண் சாத்திரக் காரன் தன்னுடைய சயிக்கிள்க் கடையிலிருந்து கதைத் ததையும் வைத்துக் கொண்டுதான் சுதேகி தனக்குப் பொருத்தம் என்று தீர்மானித்துக் கொண் டான் சுதன்.

மனத்தாலும் செயலாலும் இந்த இருவரும் இணைந்தபடியால் அந்தச் சோடியைப் பிரிக்க எந்தச் சக்தியாலும் முடியவில்லை. சுதனின் தாய் தந்தைய ரின் பிடிவாதமும் சுதேகியின் தாய் தந்தையரின் பிடி வாதமும் அடியில்லாத மரம்போல்ப் பட்டுவிட்டன. எதிர்வரும் ஒக்ரோபர் பதினெட்டாம் (18) நாள் சுதன் சுதேகி திருமணம் நிச்சயமாகிவிட்டது.

சுதேகியிடம் சீதனம் இல்லையென்பது சுதனுக்குத் தெரியாத ஒன் றல்ல. சுதேகி ஒரேயொரு பிள்ளையாயிருந்தாலும் சின்னமணியின் வரு வாயோ பொருளாதாரமோ குறிப்பிடத்தக்கதாயில்லை. இருக்கும் வீடும் சிறிய அளவு வீடுதான். இரண்டு பவுண் சங்கிலி ஒரு தோடு ஒரு சோடிக் காப்பு ஒரு மோதிரம் என்று சுதேகிக்கு வாங்கிக் கொடுத்த சின்னமணியால் அதற்குமேல் வேறு நகைகளை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. சுதேகியும் பெரும் எடுப் பிலான ஆடம்பர அலங்காரத்தை அடியோடு வெறுப்பவள். எளிமைதான் அவளது பூரண விருப்பம்.

“சுதேகி, சீதனத்தை விரும்பிற சுதனாய் நானில்லை. விரும்பிறவனாயி ருந்தால் உன்னை நான் விரும்பியிருக்கமாட்டன். என்ரை கண்ணுக்கு நீ வடி வாயிருக்கிறாய் எண்டதுக்காகவும் நான் உன்னை விரும்பேல்லை. எனக்கும் உனக்கும் ஏதோ ஒரு பொருத்தம். அது இயற்கையாகவே அமைச்சிருக்கலா மெண்டுதான் நினைக்கிறன். ஆனபடியாலை எனக்குச் சீதனப் பணம் தர வேணுமெண்டு நீ நினைக்கப்படாது. உன்னட்டைப் பணம் வாங்கி உனக்குத்

தாலிக்கொடி செய்யிறதையோ கூறை வாங்கிறதையோ உழைக்கிற ஆண் மகன் எண்ட முறையிலை நான் விரும்பேல்லை. என்ரை கழுத்திலையிருக்கிற ஏழு பவுண் சங்கிலியைத் தாலிக் கொடியாக்கி உன்ரை கழுத்திலை அண்டைக் குப் போடுவன். உன்ரை நிறத்துக்குப் பொருத்தமான ஒரு பட்டுச் சேலை உன்ரை உடலை அண்டைக்கு அலங்கரிக்கும். என்ரை இரத்த உறவுகள், உன்ரை இரத்த உறவுகள் இதுகளோடை மட்டுந்தான் எங்கடை கலியாணம்.''

சுதனின் இந்த வார்த்தைகள் சுதேகிக்கும் ஏற்புடையதாகவே இருந் தன. ஐயரின் விளக்கமற்ற - விளங்காத ஓதலில்லாமல் ஒரு நல்லறிஞனின் நல் லாசி உரையோடு திருமணம் நடந்தாக வேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்துக் கொண்ட இருவரும் திருமண நாளை - அந்த ஒக்ரோபர் 18ஐ எதிர் பார்த்துக் கொண்டே காலங் கழித்தனர்.

1987 ஒக்ரோபர் 10ம் திகதி யாழ்ப்பாணமெங்கும் ஒரே சத்தம். நண்பகல் வேளை தொடங்கிய அந்த வெடிச் சத்தங்கள் வெவ்வேறு சத்தங்களாக மாறத் தொடங்கின. துப்பாக்கி வேட்டுச் சத்தம் - குண்டுச் சத்தம் - பீரங்கிச் சத்தம் - ஷெல் அடிச்சத்தம் என்று அகோரச் சத்தங்களாக மாறிய அச்சத்தங்கள் அன் றோடு மட்டும் முடியவில்லை.

''புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் தொடங்கிவிட் டது''என்றெல்லாம் பேசத் தொடங்கிவிட்டார்கள் மக்கள். அடுத்த நாள் 11ம் திகதியிலிருந்து தெரு நிறைந்த சனக்கூட்டம். ஓட்டமும் நடையுமாகச் சென்ற மக்களெல்லாம் அமைதிப் படையினால் ஊர்களிலும், கிராமங்களிலும் அமைக்கப்பட்ட அகதிமுகாம்களுக்குள்ப் படையெடுத்தனர். காரணம் அமை திப் படையினர் ஒலிபெருக்கி மூலம் தெருத் தெருவாய் விடுத்த அறிவித்தல் தான்.

''ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்திவிட்டோம் - உடனடியாக உங்கள் உங்கள் ஊர்களுக்கு அருகிலுள்ள அகதிமுகாம்களுக்குச் செல்லுங்கள்– இல்லையேல் உங்கள் உயிர்களுக்கே ஆபத்து'' என்று தெருத்தெருவாய் மட்டு மல்ல வானொலி மூலமும் இந்த அறிவித்தலை 10.10.1987இலும் 11.10.1987 இலும் படையினர் விடுத்தபோது எவர்தான் தமது வீடு வளவு பொருள் சொத்து என்று அவைகளைக் கட்டிக் காத்து நிற்க விரும்புவர். நடைப்பிண மாகிக் கட்டிலோடு கட்டிலாகப் படுத்திருப்போரையும் தமது கொள் கையை நிறைவேற்றப் போராடும் புலிகளையும் தவிர மற்ற அனைவரும் ஓடினர் அகதி முகாம்களுக்கு.

அகதி முகாமை விட்டு வெளியே செல்ல முடியாதபடி ஊரடங்குச் சட் டம். அதுவும் ஒரு மாத காலத்துக்கு நீடித்திருந்தது. ஒரு சில இளைஞர்களும் நடுத்தர வயதினரும் முதியவர்களும் கள்ளப் பாதைகளாலும் குறுக்குப் பாதை களாலும் தத்தம் வீடுகளைப் பார்க்கவென்று புறப்பட்டுத் திரும்பிவராத சந் தர்ப்பங்களையும் மறக்க முடியாது. அப்போதெல்லாம் அகதிமுகாமுக்கு அரு கில் அவலக்குரல், அலறல்க்குரல், அபயக்குரல் என்று கேட்கும்.

அந்த உடல்களின்மேல் ரயர்போட்டு மண்நெய் ஊற்றிப் படையினர் எரித்துவிட்டார்களென்று பின்னர் அறியவந்தபோது அந்த உடல்களின் சொந்தங்கள் - இரத்தங்கள் அழுது கொட்டிய கண்ணீருக்குக் கோடுகள் இருக்

கவில்லை. தினந்தினம் அழுதார்களே தவிர அநியாயத்தை எதிர்த்துக் குரல் கொடுக்க எந்த நியாயவாதியாலும் முடியவில்லை.

சுதனும் சுதேகியும் ஒருவரையொருவர் சந்திக்க முடியாதவாறு தத்தம் அகதிமுகாம்களில் முடங்கிக் கிடந்த காட்சியோ பரிதாபத்திற்குரியது. கனவி லாவது ஒருவரையொருவர் சந்திக்கலாமென்றால் அதுவும் பலிக்கவில்லை. அகதி முகாங்களில் நித்திரை வந்தால்த்தானே கனவு வருவதற்கு. இந்த நிலை யில் இவர்களது சோகம் மேகத்தோடு மேகமாகி முட்டி மோதிக் கண்ணீ ரையே பொழிந்து கொண்டிருந்தது.

புலிகளுக்கும் தங்களுக்குமிடையிலான யுத்தம் ஓரளவு முடிவடைந்து விட்டது என நினைத்த இந்திய அமைதிப் படையினர் ஊர் அடங்குச் சட் டத்தைத் தளர்த்தி "இன்று தொடக்கம் இரவு ஏழு மணியிலிருந்து அதிகாலை ஆறு மணி வரையுமே ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்படும்" என்று அறிவித்தபோதுதான், ஒரு மாத காலமாக அகதிமுகாங்களில் முடங்கிக் கிடந்த பொதுமக்கள் அனைவரும் தத்தம் வீடு திரும்பினர்.

அகதிமுகாங்களில் நரக வாழ்வு வாழாமல் வீடுகளில் வாழ்கிறோமே என்ற ஒரேயொரு சந்தோஷத் தைத் தவிர வேறு எந்தச் சந்தோஷமும் அவர்க ளிடம் இருக்கவில்லை. ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்த இரவு வேளைகளில் வீடுகளுக்குள் அத்துமீறிப் புகுந்து இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்து செல்கிறது இந்திய அமைதிப்படை என்பது வெட்டவெளிச்சமாகிய போது எந்தக் குடும்பத்தில்ச் சந்தோஷம் இருக்கும். இளைய தலைமுறையினர் இல்லாது குழந்தை குட்டிகளோடு இருந்தவர்களும் கண்ணீருங் கவலையுமா கவே இருந்தனர். தத்தம் மருமக்கள், பெறாமக்கள், ஒன்று விட்ட சகோதரங்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்றால் அவர்களிடம் எந்தவித சந்தோஷத்தைக் காணமுடியும்? ஒவ்வொரு நாளும் அவர்களுடைய நெஞ்சிலே கவலையும் ஏக்கமுந்தான். இளைய தலைமுறையினர் பலர் அஞ்ஞாத வாசம் வாழவேண் டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஒரு சில இளைஞ ருக்கு என்ன கதி என்றே தெரியவில்லை.

"எனது காதலன் இல்லாத உலகத்தில் எதற்காக நான் வாழவேண்டும்" என்று பல காதலர்கள் நினைப்பது போல்ச் சுதேகி நினைக்கவில்லை. சுதன் இல்லாவிட்டாலும் அவனது முத்திரையைத் தரித்து வாழ்வதையே தனது குறிக்கோளாக்கினாள் அவள். தனது தெய்வமாம் சுதனின் படத்தைத் தனது வீட்டுச் சுவர்களில் மட்டுமல்ல தனது இதய அறைச் சுவர்களிலும் அவள் தொங்கவிட்ட காட்சி சின்னமணியை நெகிழ வைத்துவிட்டது. ஆனால் வன்னமணி...?

"என்னப்பா பேசாமலிருக்கிறியள்? என்ரை பிள்ளையின்ரை கோலத் தைப் பாருங்கோ - பரிதாபமாயிருக்கு. பொடியன் செத்துப் போனானெண்டு கதைக்கினம். உப்பிடிக் கண்ணீரும் கவலையுமாய் என்ரை பிள்ளையை விடா மல் அதின்ரை மனசை மாத்தி வேறை கலியாணமொண்டு பேசினால்.... என்ன நினைக்கிறியள்"

"உனக்கென்ன பைத்தியமே வன்னமணி? என்ரை பிள்ளையின்ரை நிலையிலை நீ இருந்தால் என்ன செய்வாயெண்டு யோசிச்சுச் சொல்லு. ஆக்

களைப் பைத்தியமாக்கிற கதை கதைக்காதை. நாங்களின்னும் தமிழ் மண்ணிலைதான் இருக்கிறம் வெள்ளைக்காரன்ரை மண்ணிலை இல்லை."

"அன்றொரு நாள் சுதேகியின் மேல்த் தனது ஆத்திரத்தைப் புயல்மழையாக்கிப் பொழிந்த சின்னமணி இன்று தனது மகளுக்குச் சாதகமாகப் பேசுகிறார் என்றால், சுதேகியின் நிலையை இன்று தான் அவர் சரியாகப் புரிந்திருக்கிறார் என்பதே அர்த்தம்."

மாதங்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதும் மக்களெல்லோரும் சர்வ சாதாரணமாக நடமாடும் நிலைக்கு வந்துவிட்டார்கள். அன்றிரவு பத்துமணி. சுதேகியின் செவியிலே ஒரு செய்தி. அவளுக்கு ஆதரவாயிருந்த பக்கத்து வீட்டுக் கிழவி மூலம் கிடைத்த செய்திதான் அது. சேதி கேட்ட சுதேகியின் உள்ளமோ ஜெற் விமானம் போல்ப் பறந்து செல்ல முனைந்தது. ஆனால் முடியவில்லை. "ஐயோ இந்த நேரம் இறகுகள் எனக்கு முளைக்கக் கூடாதா? அப்படி என்னை ஆண்டவன் ஆக்கினால்? சாம நேரத்தில்ப் பறந்துபோய் அவரின் படுக்கையில் விழுந்து...?" அவளின் உள்ளத்திலே எத்தனையோ கற்பனைகள் உருவாகிக் கொண்டிருந்தன. அதனால் நித்திரையை அரவணைக்க அவள் விரும்பவில்லை. அடுத்த நாள்க் காலை எட்டு மணி போல் அவளது சைக்கிள் சுதனின் வீட்டுப் படலையைத் திறந்து வீட்டு வாசலின் முன் நின்றது.

"சீ மூதேவி, எண்டைக்கு என்ரை பிள்ளையை நீ கலியாணம் செய்ய வேணுமெண்டு நினைச் சியோ, அண்டைக்குப் பிடிச்சுது சனியன் என்ரை பிள்ளைக்கு. சனியன் துலைஞ்சுதெண்டு நினைச்சன். இப்ப வீட்டுக்குள்ளை யும் வந்திட்டுது. போடி வெளியாலை. இனி இஞ்சை கால் வைச்சியெண்டால், உன்ரை காலை முறிச்சுப் போடுவன்." என்றெல்லாம் சுதனின் தாய் சிவசக்தி சொல்லியிருப்பாளென்று நினைத்து விடாதீர்கள். ஆனால் அவள் சொன்னதைக் கேட்டால், கதை கேட்கும் உங்கள் நெஞ்சமும் அழத்தான் செய்யும்.

"பிள்ளை சுதேகி, காலொண்டு இல்லாமலிருக்கும் என்ரை பிள்ளையை... முடிக்க நீ சம்மதிப்பியாம்மா" என்று கண்ணீர் கொட்டக் கொட்டக் கேட்ட சிவசக்தியை மேலும் பேசவிடாமல் "மாமி" என்று கத்திக் கதறினாள் சுதேகி. இருவரின் கண்களும் குளமாகியபோது வீட்டுக்குள்ளிருந்து அந்த நேரம் வந்த சிவசுப்பிரகாசத்தாலும் அழாமலிருக்க முடியவில்லை. வடிந்தோடிய கண்ணீரை ஒருவாறு துடைத்து விட்டுக் கதை சொன்னார் சுதேகிக்கு.

வீடுகளுக்கு வந்து இளம் பிள்ளைகளை இந்திய அமைதிப்படை பிடிக்கிறது என்று கேள்விப்பட்டு, தாங்கள் இந்தியா செல்ல முனைந்ததையும், தாம் சென்ற படகையும் வேறு படகுகளையும் கடல்ப்படை சுட்டதையும், அதன் காரணமாகச் சுதனின் வலது கால் சூட்டுக்கு இலக்கானதையும், அப்படியிருந்தும் தாங்கள் தமிழ்நாடு சென்றதையும், வைத்தியசாலையொன்றில்ச் சுதனின் வலது கால் முழங்காலோடு கழற்றப்பட்டதையும் அதன்பின் பொய்க்கால் பொருத்தப்பட்டதையும், பல மாதங்களின்பின் நேற்று மாலை யாழ் வந்ததையும் ஒன்றுவிடாமல்க் கூறி முடித்தார் சிவப்பிரகாசம்.

அதே நேரம் பொய்க்காலோடு சவண்டிச் சவண்டி நடந்துவந்த சுதன்

சொல்லத் தொடங்கினான். "சுதேகி , இந்தக் கோலத்திலை, எப்பிடியம்மா உன்னை நான் கலியாணஞ் செய்யிறது. உன்ரை சந்தோஷத் திருமணத்துக்கு... என்னாலை... என்னாலை..."

அதற்கு மேல்ப் பேசமுடியாது கதறி அழுத சுதனின் வாயைத் தனது கையால்ப் பொத்தி அவனை அணைத்துக் கொண்டாள் சுதேகி. அங்கு நின்ற சிவசக்தி - சிவப்பிரகாசம் - சுதனின் தங்கை சுகுணறதி அனை வருமே கண்ணீர் வடித்தனர். ஒரு பக்கம் சோகக் கண்ணீர் அடுத்த பக்கம், சுதேகியின் அரவ ணைப்பில்ச் சுதன் இருப்பதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர்.

அதே மாதம் இருபத்து மூன்றாம் தேதி சுதனின் ஏழு பவுண் சங்கிலி- குடும்ப வாழ்வுக்கு வேலியான தாலியும் கொடியுமாகிச் சுதேகியின் கழுத்திலே மாங்கல்ய நாணாகச் சூடப்பட்டது. சுதனின் விருப்புக்கும் சுதேகியின் பொது நிறத்துக்கும் ஏற்றால்ப்போலப் பட்டுச்சேலையொன்று, அவளது கூறையாகி அவளது மேனியை அழகுபடுத்திக் கொண்டிருந்தது.

பெரியார் இன்பநாதனின் அருமையான அறிவுரைச் சொற்பொழிவு, சுதேகியின் தியாகத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது, திருமணம் காண வந்திருந்தவர்களின் கண்களிலே அனுதாபத்தோடு கூடிய ஆனந்தக் கண்ணீர் பாயாமல் இருக்கவில்லை.

அன்று பல மாதங்களின் பின், சுதன் சயிக்கிள் ஷொப் மறுபடியும் திறந் திருக்கிறது. கடையின் வலது பக்க மூலையில், சுதன் கதிரையொன்றில் அமர்ந் திருக்கிறான் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு. அங்கு வந்த சயிக்கிள்களை றிப் பெயர் செய்து கொண்டிருக்கிறாள் சுதேகி. என்ன? என்று ஆச்சரியத் தொனி யில் என்னை ஒன்றுங்கேட்காதீர்கள். சுதேகியின் இந்தத் திறமைக்குக் கார ணங்கள் இரண்டு. ஒன்று கண் காணக் கை செய்யும். இரண்டு சுதனின் பயிற்சி வழங்கிய - வழங்கும் திறமை. அதனால்த் தான் சுதேகி உழைப்புக் கென்று சயிக்கிளை றிப்பெயர் செய்கிறாள். அவளின் மாமியார் சிவசக்தி, தனது கையால், தான் தயாரித்த சுவையான தேநீரைத் தனது மருமகளிடம் நீட்ட அதை எடுத்த சுதேகி தனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய கணவனான சுதனுக்கும் கொடுக்க, அக்காட்சியைக் கண்டு லயித்து நிற்கிறார் சிவப்பிரகா சம். சயிக்கிள் றிப்பெயருக்காகச் சென்ற எனக்கும் எனக்குள்ளாகவே ஒரு இன்பம். அந்த இன்பவெள்ளத்தில் மூழ்காமலிருக்க என்னால் முடியவில்லை.

காத்திருக்கிறாள் சுதேகி என்ற தலைப்பில்
02.04.2006 தினக்குரலில் வெளிவந்தது

# 10 சிரித்துக் கொண்டிருக்கிறது...

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியனாக மலைநாட்டிலுள்ள தலவாக்கலை, நாவலப்பிட்டி, பேராதனை, கம்பளை, கண்டி ஆகிய இடங்களில் முப்பத்தாறு ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றிய சுகுணகரன், ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும், தனது யாழ்ப்பாணக் கிராமமான குளத்தடிக் கிராமத்துக்கு, தனது மனைவி சாந்திமதியோடு வந்துவிட்டார்.

மலைநாட்டின் குளிர்ச்சியான பகுதிகளில் ஆசிரியராகக் கடமை யாற்றிய அவருக்கு, யாழ்ப் பாணத்து வெய்யில் எதிர்மாறுதான். சித்திரை தொடக்கம் புரட்டாதி வரை சூரியன் கக்கிக் கொண் டிருக்கும் அகோர வெக் கையை அவரால்த் தாங்க முடிவதில்லை-அன்றும் அப்படித்தான்.

வானத்துக் கதிரவன் பூமியை நோக்கி மெல்ல மெல்ல வந்து கொண்டி ருக்கிறானோ இல்லையென்றால் சூரிய ஓசோன் படலத்தின் துவாரந்தான் வர வரப் பெரிய வெடிப்பாகி அந்த வெடிப்பினூடாக வெளியேறும் சூரியக் கதிர்கள் பூமியை எரித்துக் கொண்டிருக்கின்றனவோ என்றெல்லாம் நினைக்கு மளவுக்கு வெய்யில்.

அகோரமாகிக் கொண்டிருந்த அந்த வெய்யிலைத் தாங்க முடியாமல் விறுவிறென்று நடந்து தனது வீட்டின் அடிவளவில் வியாபித்து வளர்ந்திருக் கும் பலாமர அடியிலே போடப்பட்டிருந்த நான்கு கதிரைகளிலொன்றில் உட் கார்ந்து கொண்டார்.

அவரது உடம்பிலிருந்து வழிந்து கொண்டிருந்த வியர்வைத் துளிகள், கடியெறும்பு கடிப்பது போல் அவரை வேதனைப்படுத்திக் கொண்டிருந்தன. அவைகளின் ஊற்றை நிறுத்தினால் உடம்பு சுகமாக இருக்குமென்பது அவருக் குத் தெரியாத ஒன்றல்ல.

சாயந்தீட்டி மிக அழகாகச் செய்யப்பட்ட பனையோலை விசிறி யொன்று அந்த வேலையைச் கச்சிதமாய்ச் செய்து கொண்டிருந்ததால், வியர் வைத் துளிகளின் அட்டகாசம் அடங்கிவிட்டது. விசிறியின் செயலை மெச் சும் பொருட்டோ என்னவோ அந்தப் பலாமரத்தின் பழுத்த ஓலைகள் சில அவரது தலையிலும், மடியிலும் விழத்தொடங்கின. பழைய நினை வொன்றை அப்போது அவர் அசை போடத் தொடங்கிவிட்டார்.

அந்த இலைகளைக் கூம்புவடிவமாகக் கோலி மாதமொரு முறை சாந்தி மதி காய்ச்சும் ஒடியல்க் கூழைக் கொஞ்சங் கொஞ்சமாக அவைகளிலூற்றிச்

சுவைத்துச் சுவைத்து இருவரும் குடிக்கும் நினைவுதான் அது.

நண்டு, இறால், மீன்தலை, மரவள்ளிக்கிழங்கு, பயிற்றங்காய் போன்ற வைகளைச் சேர்த்துக் காய்ச்சும் போது அந்தக் கூழ் இனியில்லையென்ற சுவை யைத் தருவதாலும் சலரோகம் மலச்சிக்கல் நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்க ளுக்கு ஒடியல்க் கூழ் நல்ல மருந்தென்பதாலும் அநேக தமிழர் அதிலும் யாழ்ப் பாணத் தமிழர் கூழ் உணவை ஆசையாக உண்பர்.

கொழும்பு போன்ற வெளியூர்களில் வேலை பார்க்கும் யாழ்ப்பாணத் தமிழர் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் வருவார்கள் கூழ் குடிப்ப தற்கென்றால்க் கூழின் மகிமையைச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை.

சுகுணகரனுக்கு ஒடியல்க்கூழ் குடிக்குமாசை அவரது தாயார் மூலம் ஏற்பட்டது. அதுவும் சிறுவயதிலிருந்து. அந்த ஆசை அவரை விட்டு இன்ன மும் போகவில்லை. ஓய்வு பெற்றுக் குளத்தடிக் கிராமத்துக்கு வந்த கையோடு கூழ் குடிக்குமாசையை மறுபடியும் புதுப்பித்துக் கொண்டார். இந்தக் கிழமை யும் கூழ் குடிக்க வேண்டுமென்று அவர் எண்ணிக் கொண்டிருந்த அதே வேளை அங்கு காலடி வைத்தாள் சாந்திமதி.

கன்னங்கரேலென்ற நிறமுடையவளாயிருந்தாலும் ஏதோ ஒரு தனிய ழகு அவளில் இருக்கத்தான் செய்தது. அவளுக்கு அது ஒரு தனிச் சிறப்பு. ஒழுக்கப் பண்பாட்டிலும் மிகச் சிறந்த தமிழ்ப் பெண்ணாக அவள் காணப் பட்டாள். குளத்தடிக் கிராமத்துக்கு அது தெரியும்.

இளமைப் பருவத்தில் அவளது ஒழுக்கங் கண்டு அந்தக் கிராமம் அவளை மெச்சிக் கொண்டே யிருக்கும். வாலிபப் பையன்களே அவளைப் பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

“சாந்திமதியா? அப்படியும் இப்படியுந்தான். சொன்னால் வெட்கக் கேடு” என்று அந்த ஊரிலுள்ள எந்த வாலிபனும் சொன்னது கிடையாது. சுகுணகரனுக்கும் வாலிபனாயிருந்த காலத்தில் அது தெரியும்.

சாந்திமதி பாடசாலை செல்லும் போதும் திரும்பி வரும்போதும் அவ ளது நடவடிக்கைகளைத் தானும், தான் இல்லாத சந்தர்ப்பங்களில்ச் சாந்திமதி யோடு படித்த தனது ஒன்றுவிட்ட தங்கை மூலமும் அவதானிப்பது அவனது வழக்கம்.

ஜீ.சீ.ஈ.ஓ எல்லுக்கு மேல்ச் சாந்திமதியால்ப் படிக்க முடியவில்லை. கல்வி யில் மட்டுமட்டு என்றாலும் குணத்தில்க் குன்று. அதனால்த்தான் சாந்திமதியை விரும்பினார் சுகுணகரன். அது தெரியாத சுகுணகரனின் தாய் தகப்பன் தாம் விரும்பிய பெண்ணைச் சுகுணகரன் முடிக்க வேண்டுமென்று அவரை வற்புறுத்தினார்கள்.

“கலியாணங் கட்டு கட்டு எண்டு என்னை வற்புறுத்திறியள். நான் திரும ணம் செய்ய வேணு மெண்டு நீங்கள் விரும்பினால் அப்பான்ரை தங்கச்சி மகள் சாந்திமதியை எனக்குக் கட்டித் தாருங்கோ” என்று உறுபடச் சொன்ன சுகுணகரனைத் தட்டிக்கழிக்க அவனின் தாய் தகப்பனால் முடியவில்லை.

பெற்றோர், உறவினர், நண்பர்கள் ஆகியோரின் பூரண ஆசியோடு இருபத்தெட்டு வயது நிரம் பிய சுகுணகரனுக்கும் இருபது வயது நிரம்பிய சாந்திமதிக்கும் திருமணம் நடந்தேறியது. மாமன் மாமி சீதனமாகக் கொடுத்த

வீடு வளவை ஏற்ற சுகுணகரன் அவர்கள் கொடுத்த சீதனப் பணத்தை ஏற்க மறுத்துவிட்டார். அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் தனது உறுதியை அவர் தளர்த்தவில்லை.

ஆவணி விடுமுறை முடிந்ததும் சாந்திமதியோடு மலைநாடு சென்றார் சுகுணகரன். அடுத்தாண்டு தமக்கொரு பேரன் அல்லது பேர்த்தி பிறக்கு மென்று கணக்குப் போட்ட சுகுணகரன் சாந்திமதி தம்பதிகளின் தாய் தந்தை யர்க்கு ஒரே ஏமாற்றம். அவர்களுக்கு மட்டுமல்ல சுகுணகரன் சாந்திமதி தம் பதிகளுக்குந்தான்.

இந்தாண்டு பிறக்காவிட்டாலும் அடுத்த ஆண்டு பிறக்கும் அடுத்த ஆண்டு பிறக்குமென்று ஆறு ஆண்டுகளை இந்தத் தம்பதிகள் கழித்தபோதும் அந்தப் பாக்கியம் இவர்களுக்குக் கிட்டவில்லை. அவர்களுக்கு ஏற்பட்ட முதல்க் கவலை இது. சாதாரண கவலையில்லை-பெருங்கவலை.

தங்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் சுகுணகரனின் மாதாந்தச் சம்பளத்தில் வாங்கித் தமதாக்கிக் கொண்ட அவர்களால் "தம் பொருள் என்பதம் மக்கள்..." என்று தமிழ் வள்ளுவர் வரையறுத்துக் காட் டுவது போல், தம்முடைய விலையேறப் பெற்ற பொருள் இதுதானென்று சொல்லக்கூடிய அந்தப் பொருளை-அந்தப்பிள்ளைச் செல்வத்தைத் தமதாக்கி மகிழ்ந்து திருப்திப்பட முடியவில்லை. அடிக்கடி மனதில் இதை நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

காலையிலிருந்து பிற்பகல் இரண்டு மணிவரை பாடசாலை வேலை, அது முடிந்த கையோடு. தான் படிப்பிக்கும் பாடங்களில்க் குறைவான புள்ளியெடுக்கும் மாணவ மாணவியருக்கு அதிபரின் அனுமதியோடு இலவசமாகக் கற்பிக்கும் பணி அதன்பின் அவர்களின் பயிற்சிக் கொப்பிகளைத் தனது வீட்டுக்கு எடுத்துவந்து திருத்தும் வேலை ஆகியவற்றின் காரணமாகத் தனக்குக் குழந்தையில்லையே என்ற கவலையைச் சுகுணகரன் ஓரளவு குறைத்துக் கொண்டு காலத்தைக் கடத்தியபோதும் சாந்திமதியின் உள்ளத்தில் அது நிறைந்து வழிந்து கொண்டிருந்தது.

சமையல் முடித்து வீட்டில்த் தனியாக இருப்பதாலும் பாடசாலையிலி ருந்து சுகுணகரன் வீடு திரும்பும்வரை வேறு எவரும் அவளுக்குத் துணை யில்லையென்பதாலும் பிள்ளைப் பாக்கியம் தனக்கில்லையே என்ற பெருங் கவலை அவளைத் தொட்டுக் கொண்டேயிருக்கும். அதை மறப்பதென்பது அவளைப் பொறுத்தவரை முடியாத ஒன்றாகவே காணப்பட்டது.

தனது மனைவியின் அந்தக் கவலை அவளைச் சிதைத்துவிடக்கூடா தென்பதை நிதானமாக உணர்ந்தவர் சுகுணகரன். அதனால்த் தான் ஓய்வாக இருக்கும் மாலை நேரங்களில், பாடசாலைக்கு அண்மையிலுள்ள தனது சக ஆசிரிய ஆசிரியைமார்களையும் மாணவ மாணவியரின் பெற்றோர்களையும் சந்திப்பதற்காகச் சாந்திமதியோடு செல்வது அவரின் வழக்கம். அத்தோடு தமக்கு நன்றாகத் தெரிந்தவர்களின் வீட்டுச் சடங்குகள் அனைத்திலும் இருவ ரும் கலந்து கொள்வார்கள்.

மற்றைய நாட்களில் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, இலக்கி யம், கலை உள்ளிட்ட பலதையும் துருவி ஆராய்ந்து சாந்திமதியின் உள்ளத்தில்

அவை பற்றிய சிந்தனையைப் பதியவைத்து அந்த நீரோட்டத்தில் அவளை இணைத்து விடுவதும் அவரின் உத்திகளிலொன்று.

இப்படிப்பட்ட உத்திகளால்ச் சாந்திமதியின் கவலையை வேரறுக்க முடியாதென்று நினைத்த சுகுணகரன் 1964இல் குழந்தையொன்றைத் தத்தெடுத்துச் சாந்திமதியின் கவலையை மட்டுமல்ல தனது கவலையையும் வேர றுத்துக் கொண்டார். ஓய்வூதியம் பெறும்வரை மலைநாட்டில் வாழ்ந்த சுகுணகரன் 1990இல் சாந்திமதியோடு யாழ்ப்பாணம் திரும்ப வேண்டியதாயிற்று.

குளத்தடிக் கிராமத்துக்கு வந்த பிறகு தான் சிறுகதை வெளியீட்டு விழாக்களுக்குச் செல்லும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது - சிறுகதை எழுத வேண்டுமென்ற ஆசையும் அவரிடம் முளைவிட்டது. எழுதியெழுதிக் கிழித்துக் கிழித்துப் பயிற்சி செய்த அவரின் சிறுகதைகள் ஒரு சில பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துகொண்டிருந்தன.

அன்றைக்கும் 'குழந்தைச் செல்வம்' என்ற தலைப்பில்ச் சிறுகதையொன்று எழுதவேண்டுமென்று அவருடைய மனம் துடித்துக்கொண்டிருந்த அதே நேரம், அவரைத் தேடிப் பலாமரத்தடிக்கு வந்தாள் சாந்திமதி "உங்கடை சிறுகதையொண்டு இண்டைக்குப் பேப்பரிலை வந்திருக்கு. நீங்கள் பாக்கேல்லையே?" திரும்பிப் பார்த்த சுகுணகரனின் கண்கள் சாந்திமதியை நோக்கின.

"உங்கடை கதைக்குக் கீழை சிறுகதைப் போட்டி எண்டொரு தலைப்புமிருக்கு. அமெரிக்காவிலையிருக்கிற தமிழ்ச் சங்கந்தான் நடத்துது. முதலாம் பரிசு ஒரு லட்சம் இலங்கைக் காசு. இரண்டாம் பரிசு எண்பத்தையாயிரம் மூன்றாம் பரிசு எழுபத்தையாயிரம். நீங்களும் எழுதுங்கோ." என்று மூச்சு விடாமல் அடுக்கிக்கொண்டு சென்றவள் தனது கையிலிருந்த 'மக்கள் சேவை' என்ற சேதித் தாளைக் கொடுத்தாள் சுகுணகரனின் கையில்.

போட்டி விதிகளை - விபரங்களைச் சுகுணகரனின் உள்ளம் தனக்குள்ளா கவே வாசித்துக் கொண்டிருந்தது. அந்த நேரம் சாந்திமதியால் மௌனமாக இருக்கமுடியவில்லை. ஏதோ சொல்லவேண்டும் போலிருந்தது. சொன்னாள்.

1990 இல் ஓய்வெடுத்து இஞ்சைவந்து ஐயாயிரத்து ஐந்நூறு சொச்சப் பென்ஷன் பணத்தோடை வாழ்ந்துகொண்டிருந்த உங்களுக்கு இரண்டாயிரத்து ஐஞ்சிலை (2005)யிருந்து பன்ரண்டாயிரம் சொச்சம் கிடைக்குதெண்டால் அது உங்கடை அதிஷ்டந்தானே. அது மாதிரி இதுவும் வந்துதெண்டால் நிரந்தர வைப்புக் கணக்கிலை போட்டு வைக்கலாம். எங்களிலை ஆர் முந்திறமோ அவற்ரை செத்த வீட்டுச் செலவுக்கு அது உதவும்.

கொழும்பிலையிருக்கிற எங்கடை பிள்ளை அழகனைக் கஷ்ரப்படுத்தாமல்ச் சிலவழிக்கலாம். அதுக்கும் இரண்டு பிள்ளையள். கொழும்பிலை சீவிக்கிறதெண்டால் லேசான காரியமே. வீட்டு வாடகை - சாப்பாட்டுச் செலவு - பிள்ளையளின்ரை படிப்புச் செலவு - மருந்து - உடை - மற்றச் செலவுகள்? பிள்ளை எடுக்கிற சம்பளம் அறுபதாயிரம். எஞ்ஜினியரெண்டபடியால் அந்தச் சம்பளம். எடுக்கிற சம்பளமும் செலவும் மட்டுமட்டு. அதுதான் சொல்லிறன் எழுதுங்கோ. முதலாம் பரிசு கிடைச்சுதெண்டால்ப் பெரிய அதிஸ்டமெல்லே. பிள்ளையிட்டையிருந்து எதிர்பாக்காமல் நாங்கள் சிலவழிக்கலாம். இண்டைக்கே துவங்குங்கோ. அடுப்பிலை சோறு நான் வாறன்.

சமையலறையை நோக்கி நடையைக் கட்டிய சாந்திமதி முந்நூறு சென்ரிமீற்றர் தூரம் நடந்திருப்பாள், முன்னாலிருந்த வேப்பமரத்தின் மெல்லிய கொப்பொன்று திடீரென முறிந்து அவளின் முன்னால் விழுந்தது.

"ஐயோ முருகா?" என்று அவளும் கத்தச் சுகுணகரனும் கத்தியபடி தலையில்க் கைவைத்து விறைத்து நின்றார். திடீரென்று வீசிய புயல்காற்றுத் தான் அந்தக் கொப்பு முறிவதற்குக் காரணமென்று இருவரும் உணர்ந்து கொண்டார்கள். "உதை வெட்டுங்கோ வெட்டுங்கோ?" எண்டு எத்தனை தரம் சொன்னனான். நீங்கள் அதைக் கட்டாயமாய் எடுக்கேல்லை. இனியெண்டாலும் அதை நல்லாய் யோசியுங்கோ - கட்டாய மெண்டு எடுங்கோ. ராசன் அண்ணையிட்டைச் சொன்னியளெண்டால் மரம் தறிக்கிற ஆளை அவர் கொண்டருவார். இந்த மாதச் சம்பளத்தோடை வளந்த கொப்புகளையெல்லாம் தறிப்பிப்பம். ஏதோ கடவுள் என்னைக் காப்பாத்திப் போட்டார். என்ரை தலையிலை விழுந்திருந்தால் நான் சரி. சொல்லிக் கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள் சாந்திமதி.

முறிந்து விழுந்த கொப்பை இழுத்து வளவு மூலைக்குள்த் தள்ளிவிட்டு கதைக்கான கருவைச் சிந்தித்தபடி தனது எழுத்தாக்கங்களும் ஏ4 வெள்ளைத் தாள்களும் வைக்கப்பட்டிருந்த அறையை நோக்கி நடந் தார் சுகுணகரன்.

பலாமரத்தடிக்கும் வீட்டின் பின்புறக் கதவுக்குமிடையில், கிட்டத் தட்ட இரண்டாயிரத்து முந்நூறு சென்ரி மீற்றர் இடைவெளி. வெய்யிலும் கொழுத்திக் கொண்டிருந்தது. கண்களின் முன்னால் ஏராளமான கறுப்புப் புள் ளிகள் அங்குமிங்குமாக ஓடித்திரிவதை அவரால் அவதானிக்க முடிந்தது. எரிந்து விழுந்தார்.

"மறுபடியும் ஏழரைச் சனியன். 2004 தையிலை என்னைத் தொட்ட இந்தச் சனியனுக்கு எண்டைக்குச் சாவு வரப்போகுதோ?" பின்புறக் கதவைத் திறந்து தனது அறைக்குள் நுழைந்த அவரின் வாயில்த் திரும்பத் திரும்ப அதே பல்லவி தான்.

2004 சித்திரை கடைசியில் யாழ். நகரிலுள்ள பிரத்தியேக மருத்துவ மனையொன்றில், கண் வைத்திய நிபுணரொருவரிடம் தனது கண்களை அவர் காட்டியபோது "உங்கடை வலது கண்ணிலை கிருமியள். இடது கண்ணிலையும் தொத்துது. கிருமியள் இல்லாமல்ப் போறவரை கண்ணுக்கு விடுற மருந்து தாறன் அந்தந்த நேரத்துக்கு விடுங்கோ" என்று கூறி அவர் மருந்து கொடுத் ததும் மூன்று மாதங்கள் சுகமாயிருந்து நான்காவது மாதத் தொடக்கத்தில் மறுபடியும் கண்கள் நொந்து சிவந்ததும் ஒரு சில மாதங்களின் பின் யாழ்/நல்லூர் பரி.யாக்கோபு ஆலயம் புத்தளத்திலிருந்து கண் வைத்திய நிபுணரொருவரை வரவழைத்து யாழ். வை.எம்.சி.ஏயில் நடத்திய கண் சிகிச்சையில்த் தனது கண் களைக் காட்டி மருந்தெடுத்ததும். நான்கு மாதங்களின் பின் தனது கண்களில் அதே பிசகு ஏற்பட்டதும் அவரது நினைவில்த் தோன்றி மறைந்தன.

"எழுதத் துவங்கியிட்டியளே? கட்டாயம் எழுதி அனுப்புங்கோ. முதல்ப் பரிசு வந்தால் எங் களுக்குக் கொழுத்த காசெல்லே. என்ரை ஆசையும் நிறைவேறின மாதிரியிருக்கும். எழுதுங்கோ." தனது அறைக் கதவடிக்கு வந்த சாந்திமதியின் குரல் கேட்டுத் திரும்பினார் சுகுணகரன்.

“எழுதப்போறன் என்ரை பார்வை தான்...” என்றிழுத்த சுகுணகரனிடம் பரிதாபமாகக் கேட்டாள் சாந்திமதி. “மறுபடியும் கறுத்தப் புள்ளியளே?”

தலையசைத்தார் சுகுணகரன். கண்கள் நோவதையும் சிவப்பதையும் சொல்லி முடித்தபோது அந்தரப்பட்டாள் சாந்திமதி. “கொழும்பிலை உங்கடை கண்களைக் காட்டலாம். அம்மாவையும் கூட்டிக் கொண்டு உடனடியாய் வாருங்கோண்டு தம்பி அழகன் (அழகராஜன்) 2004 சித்திரையிலை கேக் கேக்கை எங்கடை யாழ்ப்பாணமிருக்கு. இஞ்சை காட்டுவனெண்டு சொல்லி நீங்கள் மறுத்திட்டியள். அப்ப போயிருந்தால் இண்டைக்கு....?”

“பழங்கதையைக் கிளறாமல் நீ போய்ச் சமையலை முடி. கடவுள் எனக்குச் சுகந்தருவார். நான் எழுதப்போறன்.” மணித்தியாலங்கள் - நாள்கள் - வாரங்களென்று ஓடிக்கொண்டிருந்தது கால வாகனம். தானெடுத்த கரு என்ற உடம்புக்குத் தேவையான உறுப்புக்களைப் பொருத்திக் கொண்டிருந்த அவர் “இன்னும் ஒரேயொரு பக்கந்தான். நாளைக்குக் காலமை முடிஞ்சிடும். அடுத்த நாள்க் காலை அனுப்பலாம்” என்று சொல்லிக் கொண்டு நித்திரையாகிவிட்டார். நல்ல நித்திரை. சந்தோஷப் பெருக்கினால் ஏற்பட்ட அந்த நித்திரையை நாயின் குரைப்பு-கோழிகளின் கூவல் போன்ற எந்தச் சத்தத்தினாலும் குழப்ப முடியவில்லை. அடுத்த நாள்க் காலை ஐந்து மணிபோல் அவரது வீட்டுச் சுவரிலிருந்த கடிகாரம் ஐந்தடித்துத் தான் அவரின் நித்திரையைக் குழப்பியது.

தனது தலைமாட்டிலிருந்த ரோச்லைற்ரை எடுப்பதற்காகக் கண்களை விழித்தார். வலது கண்ணில்ப் பார்வையில்லை. இடது கண்ணும் மங்கல். அத்தோடு ஒரே நோவும் வலியும்.

அவதிப்பட்டாள் சாந்திமதி. அவளின் தொலைபேசிச் சேதி பறந்தது அழகராஜனுக்கு. கொழும்பிலுள்ள பிரத்தியேக மருத்துவமனையொன்றில்ச் சுகுணகரனுக்கு ஒப்பறேஷன். நாளைவிட்டு அடுத்த நாள் என்று கூறி விட்டார் வைத்திய நிபுணர்.

“முருகா! என்ரை தெய்வத்துக்குத் தெளிவான பார்வை வரச் செய். கையெடுத்துக் கும்பிட்டுக் கேக்கிறனப்பா” என்று ஒவ்வொரு காலையும் மாலையும் முருகன் கோயிலுக்குச் சென்று வரங்கேட்டுக் கொண்டிருக்கிறாள் சாந்திமதி.

“என்ரை தெய்வம் எனக்கு அருள்தருமா - அந்த அருள் மூலம் எனக்குச் சுகம் வருமா...?”என்று ஏக்கப்பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார் சுகுணகரன்.

“இன்னும் ஒரேயொரு பக்கந்தான் எழுத வேணும். அதை முடிக்காமல் ஏன் கொழும்புக்குப் போனவர் சுகுணகரன்” என்ற முணுமுணுப்போடு அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது அந்த ஏ4 வெள்ளைத்தாள்.

“வருவது வரும் போவது போம். சாந்திமதிக்கு ஏனிந்தப் பணஆசை” என்று சிரித்துக் கொண்டிருக்கிறது இயற்கை.

# 11 தெய்வப் பிறவிகள்

பரம்பரை பரம்பரையாக எத்தனையோ பேர் குடியிருந்த வீடு இன்றைக்கு? இரண்டேயிரண்டு ஜீவன்களோடு காணப்படுகிறது. சிவராசன் வயது பதின்நான்கு. சர்மிலாதேவி வயது ஐம்பத்தைந்து. ஒருவருக்கொருவர் துணையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கிராமம் வாழைக்காடு. சர்மிலாதேவி பிறந்து வளர்ந்த கிராமம் அதுதான்.

அவளின் கணவர் சர்வேஸ்வரன் ஒரு எஞ்ஜினியர். சிறுவயதிலிருந்தே நல்ல புத்திசாலியாக வாழ்ந்த அவர் வாழைக்காடுக் கிராமத்துக்கு அடுத்த கிராமமான ஊரிக்காடுக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பல்கலைக் கழகக் கல்வியை வெற்றிகரமாக முடித்த அவரை, நீர்ப்பாசனத் திணைக்களம் தன்னோடு இணைத்துக்கொண்டது. வெவ்வேறு ஊர்களில் வேலை பார்த்த அவருக்கு இறுதியாகக் கிடைத்த இடம் கிளிநொச்சி.

கிளிநொச்சியில்க் கடமையாற்றிய காலத்தில் அவரது வீட்டில்ச் சிவராசனும் சேர்ந்து கொண்டான். அவன் சேர்ந்து கொண்டதே ஒரு கதைதான். அவன் பிறந்து ஐந்தாவது ஆண்டு அவனது தாய் மாரடைப்பால் இறந்துவிட்டாள். தாய் இறந்து இரண்டாவது ஆண்டு தகப்பனின் மறுமணம் நிறைவேறியது. மறுமணம் செய்து மூன்றாமாண்டு எதிரியொருவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி அவரும் சரி. தந்தை இறந்து ஆறுமாதங்கள் கழியுமுன் சிறியதாயின் கொடுமையைத் தாங்க முடியாமல் வேதனைப்பட்டான் சிவராசன். அப்போது அவனுக்குப் பத்து வயது.

“இஞ்சை என்ரை வீட்டிலை நீ இருக்கவேணும் - சாப்பிடவேணுமெண்டால் எனக்கு நீ மாசா மாசம் காசு தரவேணும்” என்று சிறியதாய் கூறிய கண்டிப்பு வார்த்தைகள், சிவராசனின் உள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருந்தன. அந்தக்கலக்கம் அவனது கல்விக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. ஐந்தாம் வகுப்புக்கு மேல் அவனால்ப் படிக்கமுடியவில்லை - நிம்மதியாக வாழவும் முடியவில்லை. உழைக்க வேண்டுமென்று துடித்தது அவனின் மனம். தகப்பன் செய்த சாதாரண வேலைகளிலொன்று தென்னை ஏறித் தேங்காய் பறித்தல். கண்காணக் கைசெய்யும். தகப்பன் தென்னை ஏறும் பக்குவத்தையும் தேங்காய்களைப் பறித்துக் கீழே போடும் விதத்தையும் நன்றாக அவதானித்த அனுபவம் அவனுக்கு. ஆகவே அந்தத் தொழில் அவனுக்குக்

கைவந்த கலை.

அவனது சிறிய தாயாரின் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீற்ரர் தொலை விற்க் குடியிருந்த சர்வேஸ்வரனின் வீட்டு வளவில்த் தேங்காய் பறிக்கச் சென்ற போது அந்தக் குடும்பத்தின் அன்பு அவனுக்குக் கிடைத்தது. ஆறு மாதங்க ளுக்கு முன்பு மூளைக்காய்ச்சலின் கொடுமையால் இறந்த தமது பத்து வயது மகனின் நினைவை மறப்பதற்காகச் சிவராசனில் அன்பு காட்டினார் சர்வேஸ் வரன். சர்மிலாதேவி அதை எதிர்க்கவில்லை. அவளும் அப்படித்தான் நடந்து கொண்டாள். சிறிய தாயாரின் கொடுமையால்ப் பாதிக்கப்பட்டவன் என்ப தால், அவன் மேல் அவர்கள் கொண்ட பரிதாபமும் அந்தப் பரிதாபத்தால் ஏற்பட்ட அன்பும் இரட்டிப்பாகி விட்டது. ஏழைக்கு உதவு என்ற மனத்து டன் வாழ்பவர்கள் அவர்கள்

தங்களோடு தங்கும்படி அந்தக் குடும்பம் கேட்டதைச் சிவராசன் தட் டிக்கழிக்கவில்லை. எங்கு போகிறேன் என்பதைச் சிறிய தாயாருக்கோ சிறிய தாயாரின் பிள்ளைகளுக்கோ தனது கிராமத்துக்கோ சொல்லாமல் வெளி யேறிச் சர்வேஸ்வரன் குடும்பத்துக்குப் பிள்ளையாகிவிட்டான்.

கடைக்குப்போய்ச் சாமான்கள் வாங்குவது - வீடு வளவைச் சுத்தஞ் செய்து அழகாக்குவது - வீட்டின் முன்பக்கமுள்ள பூந்தோட்டத்துக்குக் கொஸ் பைப் மூலம் நீர் ஊற்றிப் பராமரிப்பது - சர்மிலாதேவியின் சமையலுக்கு உதவி செய்வது - சர்வேஸ்வரனின் உடுபுடவைகளைக்கழுவி அயன் செய்து அடுக்கி வைப்பது- சர்வேஸ்வரனுக்கோ சர்மிலாதேவிக்கோ ஏதாவது வருத்தமென் றால்ப் பக்கத்திலுள்ள பிரத்தியேக மருத்துவமனைக்கு அவர்களைக் கூட்டிச் செல்வது - மறக்காமல் அந்தந்த நேரத்துக்கு மருந்து கொடுப்பது போன்ற வைகளை மிகப்பக்குவமாகவும் விருப்பமாகவும் அவன் செய்து வந்ததால், சர் வேஸ்வரன் குடும்பத்தின் செல்லப்பிள்ளையாகிவிட்டான். இப்போது அவன் வேலைக்கமர்த்தப்பட்டவனல்ல-அவர்களின் சொந்தப்பிள்ளை. ஆறு மாதங் கள் கடந்தபோதும் சிவராசன் செய்த வேலையில் எதுவித பிழையும் காணாத சர்வேஸ்வரன் கிளிநொச்சியிலிருந்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணம் வாழைக் காடுக் கிராமத்துக்குத் தனது மனைவியோடு வந்தபோது சிவராசனையும் கூட்டிவந்து விட்டார். பிரச்சனையில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது குடும்ப வாழ்க்கை. திடீரெனத் தனக்குவந்த முட்டு (வீசிங் = wheezing) வருத்தத்தை மாற்றுவதற்குச் சாராயம் நல்ல மருந்தென்று நண்பர்கள் சொன்னதால்க் குடிக் கப் பழகிவிட்டார். நாளொன்றுக்குக் கால்ப் போத்தலுக்கு மேலில்லை. குடித்தபின் முட்டுவருத்தம் கொஞ்சம் குறையும். அதனால்க் கொஞ்சங் கூடக் குடிக்கலாமென்று நினைப்பார். அப்படி நினைத்தபோது அவரது குடித்தல் அளவு கொஞ்சம் அதிகமாகி விட்டது. நோய் கட்டுப்படும் - படிந்து விடும் என்பது தான் காரணம்.

இருந்தும் நோய் மாறவில்லை - கஸ்ரப்படுத்திக் கொண்டேயிருந்தது. சர்மிலாதேவிக்கும் சிவராசனுக்கும் அவர்படும் கஸ்ரம் - வேதனை கண்டு ஒரே கவலை. யாழ்ப்பாணம் வந்த நான்காவது ஆண்டு அவரது பூதவுடல் சாம்ப

ராகியது. ஈரல் கரைந்து உயிர்பிரிந்த மரணமென்பதால் அவரின் மரணத்தை அகாலமரணமென்று வாழைக்காடுக் கிராம மக்கள் சொல்லிக்கொள்வார்கள்.

"எத்தனை உதவி எங்களுக்குச் செய்தவர். தன்னால் முடிஞ்ச உதவியைச் செய்ய அவர் மறுத்ததேயில்லை. இன்னுங்கொஞ்சக் காலத்துக்கு இருந்திருக்க வேண்டிய ஆள். தனக்கு வந்த முட்டு வருத்தம் மாறுமெண்ட நம்பிக்கையிலை குடிக்கத் துவங்கினவர்-இண்டைக்கு? எங்கடை வாழைக் காடுக் கிராமம் ஒரு எஞ்ஜினியரை இழந்திட்டுது. நல்லாய்ப்படிச்ச ஒரு மனிசன்-நல்ல அறிவாளி. எங்கடை கிராமத்துக்குக் குடியிருக்க வந்திட்டாரெண்டு பெருமைப்பட்டம் அந்தப் பெருமையும் போச்சு. அவற்றை வாரிசுகளு மில்லை. இருந்திருந்தால் அதுகளும் எஞ்சினியராய் -டொக்ரராய் வந்திருக்குங் கள் - எங்களுக்குப் பெருமையைத் தேடித்தந்திருக்குங்கள். என்ன செய்யிறது. அந்தப் பாக்கியம் அதுகளுக்குமில்லை - எங்களுக்குமில்லை"

ஒருவித துக்கங்கலந்த தொனியில் சர்வேஸ்வரனைப்பற்றி வாழைக் காடுக் கிராமம் அடிக்கடி கதைத்துக் கொள்கிறதென்றால், சிவராசனின் துக்கத்தை - வேதனையைச் சொல்லவுமா வேண்டும். கத்திக் கத்திக் கதறியழுவான். காலை மதியம் மாலை இரவு என்று எல்லா நேரமும் அழுதபடிதான்.

அனாதையாகி எதுவித சந்தோஷத்தையும் நிம்மதியையும் காணமுடியாமல்த் தவித்து வேதனைப் பட்ட தன்னைச் சந்தோஷமாக - நிம்மதியாக வாழவைத்த அந்தத்தெய்வப் பிறவி சர்வேஸ்வரன் இந்தப் பூமியைவிட்டுப் போய் விட்டாரென்பதுதான் அவனது ஆறாஅழுகைக்குக் காரணம். சர்மிலா தேவியின் ஆறுதல் வார்த்தைகள் கூட அவனைக்கட்டுப்படுத்த முடியாது போய்விடும்.

அம்மா (சர்மிலாதேவியை அம்மா என்று தான் கூப்பிடுவான்) நீங்களும் இல்லையெண்டால் நான் எங்கையம்மா போறது? ஆரம்மா எனக்கிருக்கினம். எனக்கு ஒரு வழியுந் தெரியாது. எனக்குத் தெரிஞ்சது ஐயாவை (சர்வேஸ்வரனை ஐயா என்று தான் கூப்பிடுவான்) எரிச்ச அந்தச் சுடலை தான். அப்படி அவன் சொல்லும் போதெல்லாம் அவனின் கண்கள் சிவந்து வீங்கிக் கண்ணீர் கண்ணீராய்க் கொட்டும். அது கண்டு சர்மிலாதேவியும் அழுது கொட்டுவாள். தனது கணவனின் நினைவை ஒவ்வொரு வினாடியும் நெஞ்சிலேந்தி வாழ்ந்து கொண்டிருந்த சர்மிலாதேவியை, சிவராசனின் அழுகை மேலும் மேலும் கவலைப்படுத்திக் கொண்டேயிருக்கும். தனது பிள்ளையென்று, தான் வளர்த்த சிவராசனின் எதிர்காலத் தைச் சிந்திக்காமல் அவளால் இருக்கமுடியவில்லை. தங்களிடம் வந்து சேருமுன் இருளில் அகப்பட்டுத் திக்குத்திசை தெரியாமல்த் தவித்த அவனை மீண்டுமொரு இருள் வந்து கவ்வக் கூடாது என்ற சிந்தனை நாளாந்தம் அவளின் மனதைக் குடைந்து கொண்டேயிருந்தது.

தனது இரண்டு பெறாமக்களுக்கும் (தங்கை பிள்ளைகள்) அவள் எழுதும் கடிதங்களில், சிவராசனின் நிலையையும் எழுதுவாள். வீட்டில்த் தனக்கு உதவியாயும் ஆறுதலாயுமிருக்கும் ஒரேயொரு உயிர் சிவராசன் என்பதை

அழுத்தந்திருத்தமாக எழுத அவள் மறப்பதில்லை. அன்றைய கடிதத்திலும் அவளது எழுது சாரம் சிவராசனாகவே இருந்தது.

"திடீரென எனக்கேதாவது நடந்தால், என்ரை பிள்ளை சிவராசன் உங்கடை பொறுப்புத்தான். உங்கடை தம்பியெண்டு நினைச்சுச் செயல்ப் படுங்கோ... உங்கடை பெரியப்பாக்கும் எனக்கும் என்ரை பிள்ளையாலை கிடைச்ச உதவி கொஞ்சமில்லை. அந்த உதவி சொல்லுக்கு அப்பால்ப்பட்டது. எங்கையோ இருந்து வந்த ஒரு ஏழைப்பிள்ளை எங்கடை பிள்ளையாய் வந்திட்டுது. எங்களுக்குக் கஸ்ரம்தரவந்த பிள்ளையாயில்லை. எங்களுக்குக் அதிஸ்டமாய் வந்த பிள்ளை. பெரியப்பாக்கு என்ன வருத்தம் வந்தாலும் தனக்கு வந்த மாதிரித்துடிச்சுக் கொண்டேயிருக்கும். எனக்கு ஒரு சின்ன வருத்தமெண்டாலும் என்ரை பிள்ளை தாங்கமாட்டுது. ஒவ்வொரு நிமிஷமும் அழுது கொண்டிருக்கும். அங்கை ஓடும் இஞ்சை ஓடும் நிம்மதியிழந்து அழும். எங்களைக் கூட்டிக்கொண்டு மருந்தெடுக்கப்போகும். எடுத்த மருந்தை அந்தந்த நேரத்துக்குக் கொண்டு வந்து தரும். சிலவேளை நாங்கள் மறந்தாலும் அது மறக்காது. தெய்வப்பிறவியாய் எங்கடை வீட்டுக்கு வந்து சேந்த பிள்ளை என்ரை பிள்ளை. எந்த நேரமும் பெரியப்பாவை நினைச்சு நினைச்சு அழும். என்னோடை இருக்கிறபடியாலை என்ரை பிள்ளை சந்தோஷமாயிருக்கு. நானில்லாத காலத்திலை...? அது தான் உங்களுக்குச் சொல்லுறன். எனக்கு ஏதாவது நடந்தால், என்ரை பிள்ளை உங்கடை ஆசைத் தம்பியாய் உங்களோடை இருக்கவேணும். மறக்காதைங்கோ - என்ரை ஆசையை மறுத்தும் சொல்லாதைங்கோ. நீங்கள் ரண்டுபேரும் சேந்து உங்கடை சிலவிலை, என்ரை பிள்ளையைக் கனடாவுக்கெடுங்கோ. உங்கடை பெரியப்பா தன்ரை சிலவிலை உங்கள் ரண்டுபேரையும் கனடாவுக்கு அனுப்பினவர் எண்டதுக்காக நான் இதைக்கேக்கேலை. என்ரை பிள்ளைக்கு நீங்கள் சிலவுசெய்யிற காசை என்ரை பிள்ளை உங்களுக்குத்தரும். என்ரை வீடும் வள வும் இனி என்ரை பிள்ளைக்குத்தான். புறொக்ரரைப் புடிச்சு எழுதிப்போட் டன். அதை வித்து உங்கடை காசை என்ரை பிள்ளை கட்டாயம் தரும். என்ரை பிள்ளைக்கு இதைச் சொல்லிவைச்சிருக்கிறன். என்ரை பிள்ளை ஏழையாய்ப் பிறந்தது உண்மை. ஆனபடியால நேர்மையான பிள்ளை. ஆனாபடியாலை என்ரை பிள்ளை உங்களோடை கனடாவிலை இருக்கவேணும் - உழைக்க வேணும். அதுமட்டுமில்லை, உங்களுக்கு நல்லாத்தெரிஞ்ச நல்லவளொருத் திக்கு என்ரை பிள்ளையைக் கட்டியும் வையுங்கோ. இது என்ரை - உங்கடை பெரியம்மான்ரை ஆத்தும ஆசை. அது நிறைவேறினால், என்ரை ஆத்துமா அலையமாட்டுது. என்ரை ஆத்துமாவை அலையவிட மாட்டியள் எண்டதும் எனக்குத்தெரியும் . என்னிலை நீங்கள் வைச்சிருக்கிற பாசத்தாலைதான் இப்படியெல்லாம் எழுதுறன்."

சர்மிலாதேவி எழுதியனுப்பும் இத்தகைய வரிகளெல்லாம் அவளது தங்கை மகள் சர்வினாவையும் மகன் சர்வீகனையும் தொடாமலில்லை. சிவராசனைக் கனடாவுக்குக் கூப்பிடும் அனைத்து ஒழுங்குகளுக்கும் உதவியாயும்

அனுசரணையாயும் செயல்ப்பட்டான் சர்வீகன். முழுமனதோடு இருவரும் அந்த முயற்சியில் இறங்கியபடியால்ச் சிவராசன் கனடா செல்வது உறுதியாயிற்று. சர்மிலாதேவிக்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி. சிவராசன் கனடா செல்லும் பட்சத்தில், சர்மிலாதேவிக்குத் துணையாகச் சர்வினாவின் அண்ணன் குடும்பம் - அவர்களுக்குக் குழந்தைகளில்லை - வந்து தங்குவதான ஏற்பாடுகளும் முடிவடைந்தன.

சர்மிலாதேவியின் வீட்டில் அன்றைக்கு ஒரே பரபரப்பு அடுத்த நாள்க் காலை சர்மிலாதேவியும் சிவராசனும் பயணம். விமானப்பயண ஒழுங்குகளை அடுத்த வீட்டு ஓட்டோக்காரப் பையன் காந்தன் செய்து முடித்திருந்தான். சர்வேஸ்வரன் உயிரோடு இருந்த காலத்தில்ப் பல தடவைகள் விமானப் பயணம் செய்து பழக்கப்பட்டவள் சர்மிலாதேவி. அதனால் வேறு எவரையும் அவள் பயணத்துணைக்குக் கேட்கவில்லை.

அவளையும் சிவராசனையும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வரவேற்றுத் தனது வீட்டுக்கு அழைத்துச் செல்வதையும், அதற்கடுத்த அடுத்த நாள் கனடாவுக்குப் போகும் விமானத்தில்ச் சிவராசனை ஏற்றி அனுப்பிவைப்பதையும் கொழும்பில் வசிக்கும் எக்கவுண்டன் ஜீவேஸ்வரன் - அமரர் சர்வேஸ்வரனின் தம்பி மகன் ஏற்றுக்கொண்டான்.

இரவு பத்துமணிவரை சர்மிலாதேவி - சிவராசன் - காந்தன் - காந்தனின் மனைவி - பிள்ளைகள் ஆகியோர் ஒன்றுச் கூடி சர்மிலாதேவி வீட்டில் ஒரே கதை. எல்லாம் சிவராசனின் கனடாப் பயணம் பற்றித் தான். "அம்மா, நீங்களும் கனடாவுக்குப் போயிருக்கலாமே" சர்மிலாதேவியைக் கேட்டான் காந்தன்.

"என்ரை ஊரிலை - என்ரை வீட்டிலை நிம்மதியாய் மூச்சுவிட்டு நான் சாகவேணும் - சுதந்திரமாய் என்ரை வளவிலை திரியவேணும் - என்ரை உறவுகளோடை பேசவேணும். நீங்களும் பக்கத்திலை இருக்கிறியள் - அந்தரத்துக்கு உங்கடை உதவியும் எனக்குக் கிடைக்கும். அதுபோதும். வெளிநாட்டுக்குப் போகவேண்டிய அவசியமேயில்லை"

சர்மிலாதேவி இப்படிச் சொன்னதும் அழுது விட்டான் சிவராசன். கண்கள் சிவந்து நீர் நீராய்க் கொட்டிக்கொண்டிருந்தன. "ராசன் அழப்படாது. எனக்கொண்டுமே நடக்காது. நாளைக்குப் பயணம் போற நீ அழுது உன்ரை மனதைக் கஸ்ரப்படுத்தாதை அப்பன்" சிவராசனைத் தேற்றிக் கொண்டிருந்தாள் சர்மிலாதேவி.

"நான் கனடாவுக்குப் போகேல்லை. உங்களை விட்டிட்டு நான் எங்கையும் போகமாட்டனம்மா. கனடா அக்காவுக்குப் போனிலை சொல்லுங்கோ"

"அப்பன் ராசன், உன்ரை வாழ்வு நல்லாயிருக்கவேணும். என்ரை காலம் போட்டுது. இனி உன்ரை காலம். இஞ்சையிருந்து நீ என்ன செய்யப்போறாய். நானில்லாத காலத்திலை நீ கஸ்ரப்படக் கூடாது. நீ எனக்குப் பிள்ளை-அம்மா சொல்லிறதைக் கேட்டு நட"

நேரம் பத்து. காந்தன் குடும்பமும் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

எங்கும் ஒரே அமைதி. சர்மிலாதேவியின் குறட்டை ஒலியைத்தவிர வேறெந் தச் சத்தமும் அந்த வீட்டில்க் கேட்கவில்லை.

நேரம் ஓடிக் காலை மூன்றாகியது. ஐந்து முப்பதுக்கு யாழ்ப்பாணத்தில் நிற்கவேண்டும். சிவராசன் எழுப்பி வீட்டின் அனைத்து மின்விளக்குகளையும் ஒளிர விட்டபின் சர்மிலாதேவியின் கதவைத் தட்டினான் - சத்தமில்லை. மீண் டும் தட்டினான் சத்தமில்லை. கதவைத்திறந்து அம்மா என்றான் - சத்த மில்லை. போர்த்தபடி நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தாள் சர்மிலாதேவி. அவளது உடலைத் தொட்டுப் பார்த்தான். அவ்வளவு தான்.

வானமண்டலத்தைப் பிளக்கும் அளவுக்கு வெளியேறியது சிவராச னின் கத்தலும் கதறலும். பக்கத்து வீட்டுக் காந்தன் குடும்பமும் வந்துவிட்டது உடனடியாக. அக்கம் பக்க ஆள்களெல்லாம் சர்மிலாதேவியின் வீட்டில். ஒரே அழுகைச்சத்தம்.

சேதி பறந்தது சர்வினாவுக்கும் சர்வீகனுக்கும். நாலாம் நாள் மாலை மூன்று மணிபோல் எல்லோரும் கத்திக் கதற சர்மிலாதேவியின் பூதவுடல் தகனக் கிரிகைக்காக வாழைக்காடுச் சுடலையை நோக்கி நகர்ந்து கொண்டி ருந்தது. எந்தத் தாயை அன்பால் அணைத்தானோ அந்தத்தாயை நெருப்புக் கொள்ளியால் நனைத்து விட்டு கத்திக் குளறினான் சிவராசன். அவனைப் பொறுத்தமட்டில்ச் சர்மிலாதேவி ஒரு தெய்வப்பிறவி....

பதின் நான்காம் நாள் காலை ஐந்துமணிபோல் வீட்டுவாசலில் வந்து நின்றது காந்தனின் ஓட்டோ. தன்னை ஆளாக்கிய தெய்வப் பிறவிகளான சர்மிலா தேவி சர்வேஸ்வரன் தம்பதிகளைத் தனது நெஞ்சில்ப் பதித்தபடி சர்வினா - சர்வீகன் ஆகியோருடன் கனடா புறப்பட்டான் சிவராசன்.

# 12 இது தான் மனிதம்

நித்தியராஜனின் பாவனையிலிருந்த அவரது மொறிஸ் மைனர் மோட்டார்க் கார், பார்வைக்குப் பளிங்கு போலக் காட்சி தந்துகொண்டிருந்தது. எல்லாப் பக்கத்திலும் ஒரு புதுப்பொலிவு. முகம் பார்த்துத் தலைவாரிச் சீவலாம் போன்ற தோற்றமென்றுங் கூறலாம்.

அவரால்த் துடைக்கப்பட்டுக் கழுவப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் கார் அவரது வீட்டின் முன்னால் அடர்ந்து படர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் மாமர நிழலின்கீழ் நிறுத்தப்பட்டிருந்தது. மெல்லிய இளந் தென்றல் அந்த நேரம் அங்கு வீசிக் கொண்டிருந்ததால் நித்தியராஜனின் உடலிலே களைப்போ சலிப்போ ஏற்படவில்லை. ஒருவித தென்பும் வெற்றி உணர்வுமே ஓடிக்கொண்டிருந்தன.

தான் செய்த வேலையையும் அதன் பூரணத்துவத்தையும் அழகையும் மெச்சி ரசித்துக்கொண்டிருந்த அவர் தனது வேலை முடிந்ததால் அங்கு போடப்பட்டிருந்த கதிரையொன்றில் அமர்ந்தார். அப்படி அமர்ந்த பின்னும் அவரது சிந்தனை வேறு எதிலும் பதியாது, தான் செய்து முடித்த வேலையை ரசிப்பதில் மட்டுமே பதிந்து கொண்டிருந்தது.

சென்ற மாதந்தான் தனது எழுபதாவது வயதைப் பூர்த்தியாக்கியவர். எழுபதைப் பூர்த்தியாக்கிய போதும் எழுபது என்று சொல்ல முடியாத அளவுக்கு அவரது உடலில் ஒரு கம்பீரம். கிட்டத்தட்ட ஆறாயிரம் ரூபா பென்சனோடு வாழ்க்கை நடத்தும் அவருக்கு மனைவியின் பொறுப்பு ஒன்றைத் தவிர வேறு பொறுப்புகள் எதுவுமேயில்லை.

அவரது இரண்டு பெண்பிள்ளைகளும் ஏ.எல். தேர்வில்த தோல்வியைத் தழுவியதால், திருமணஞ் செய்து அவரது வீட்டு எல்லையின் வலது பக்கத்திலுள்ள வீடுவளவில் ஒருவரும் இடது பக்கத்திலுள்ள வீடு வளவில் ஒருவருமாக நல்ல குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய ஒரேயொரு மகன் சுகந்தறாஜ் எக்கவுண்டனாகிக் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்வதைத் தெய்வ அருளென்று நினைத்து இறைவனுக்கு நன்றி சொல்வார். ஆனாலும் தனது மகனின் கல்வியைப் பற்றிப் பெருமையாக அலட்டிக் கொள்ளும் பழக்கம் அவரிடமில்லை.

நித்தயறாஜனுக்கு நண்பர்கள் பலர். அத்தனை நண்பர்களும் மிகமிக

நல்லவர்கள். நித்தியராஜன் போல எதுவித குடிவெறிப் பழக்கமோ புகைத் தல்ப் பழக்கமோ இல்லாதவர்கள். குடிவெறியரோடு அவர் நட்புக் கொள்வ தில்லை. தப்பித்தவறி அப்படியொரு நட்பு ஏற்பட வேண்டிய சூழ்நிலையோ சந்தர்ப்பமோ வந்து விட்டால் அந்தக் குடிவெறியரைத் தனது தர்க்கத் திறமை யால்த் தன்னைப்போல் மாற்றி வைப்பதிலும் அவர் வல்லவர். மொத்தத்தில் அவரது நண்பர்கள் அவரது ஒழுக்கத்தை ஒத்தவர்களென்றால் அது மிகை யல்ல. அப்படிப்பட்ட தனது நண்பனொருவனை அன்றைக்குத் தரிசிக்க வேண்டுமென்பதற்காகத் தனது மோட்டார்க் காரைக் கழுவித் துடைத்து அழகுபடுத்திவிட்டு, அங்கு போடப்பட்டிருந்த கதிரையொன்றில் ஆறுதலாக அமர்ந்தவர் திடீரென ஒரு குரல் கொடுத்தார்.

"இனிச் சாறியை மாத்திறதுதான். ஒரு அரைமணி நேரம். நீங்கள் வெளிக்கிடுங்கோ" சத்தியகலாவின் குரல் பளிச்சென்று பதில் கொடுத்ததை யடுத்து, தனது குளித்தல் வேலையை முடித்த அவர், தன்னுடைய அறைக் குள்ளே சென்று ஒரு பதினைஞ்சு நிமிடத்தில் உடுத்தல் வேலையையும் பூர்த்தி யாக்கி வெளியே வந்தார்.

அவர் அணிந்திருந்த நீலக்கரை வெள்ளை வேட்டியும் நீலநிற நீளக்கை மேற்சட்டையும் அவரை ஒரு கம்பீர மனிதனாக்கியது. அவரது நடையும் அப் படித்தான். கம்பீரமாக நடந்துவந்து மொறிஸ் மைனரின் கதவைத் திறந்த அதேநேரம் சத்தியகலாவும் அங்கு காலடி வைத்தாள்.

"சரி போவம் மணி ஐஞ்சாகுது"

மானிப்பாய் ஊரிலிருந்து புறப்பட்ட மொறிஸ் மைனர் ஆமை வேகத் திலோ முயல்வேகத்திலோ போகாமல் அதற்கு இடைப்பட்ட வேகத்தில்ப் போய்க் கொண்டிருந்தது மருதனாமடத்தை நோக்கி. மருதனாமடம்தான் நித்தியராஜனின் நண்பன் சந்திரசேனனின் ஊர்.

நாவலப்பிட்டியிலுள்ள வள்ளுவர் மகா வித்தியாலயத்தில் இந்த இருவ ரும் பத்து ஆண்டுகளாக ஒரு காலத்தில்ப் படிப்பித்தவர்கள். ஆசிரியப் பயிற் சிக் கலாசாலையிலிருந்து ஆசிரியர்களாக வெளியேறிய இவர்களுக்குக் கிடைத்த முதல்ப் பாடசாலை இது தான்.

அந்தப் பாடசாலையின் கல்வி - விளையாட்டு ஆகிய துறைகளை நல்ல முறையில் வளர்த்து, பாடசாலைச் சமூகத்தை விருத்தி செய்தோரின் பட்டிய லில் இந்த இருவரும் அடங்குவர். உடல் விருத்திக் குரிய கால்ப்பந்து-கூடைப் பந்து -மேசைப்பந்து ஆகிய விளையாட்டுகளில் மட்டுமல்ல படிப்பித்தலிலும் நித்தியறாஜன் எப்படியோ அப்படித்தான் சித்திரசேனனும்.

"பேர் சிறந்த கொழும்புப் பாடசாலைப் பிள்ளைகள்போல் மலை நாட் டுப் பிள்ளைகளும் கல்வி விளையாட்டு ஆகிய துறைகளில் அதி உன்னத இடத்தை அடைய வேண்டுமென எண்ணிச் செயல்ப்பட்டவர்கள் இந்த யாழ்ப்பாண ஆசிரியர்கள்" என்று சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அவர் களைப் புகழ்ந்து கொண்டிருந்தது அந்தப் பாடசாலைச் சமூகம்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இவர்கள் கல்வி கற்றுக் கொண்டி

ருந்த காலத்திலும் இவர்களின் செயல்த்திறனையும் விடாமுயற்சியையும் மெச்சாத ஆசிரியர்களோ சக மாணவ மாணவியரோ இல்லை யென்றே சொல்ல வேண்டும். பொறாமை இல்லாத போட்டி போட்டுச் செயலாற்றும் திறமை இவர்களோடு கூடிப்பிறந்தது என்பதே உண்மை. அப்படிப்பட்ட இந்தத் திறமைசாலிகள் தனித்துத் தனித்து நில்லாது இணைந்து நெருங்கிய நண்பர்களானது அருமையிலும் அருமை மட்டுமல்ல போற்றுதலுக்கும் உரியது.

பத்து ஆண்டுகள் ஒரே பாடசாலையில்ப் படிப்பித்த இவர்கள் பதினோராவது ஆண்டு தைமாதத்திலிருந்து வெவ்வேறு பாடசாலைக்குக் கல்வி அமைச்சால் மாற்றம் பெற்றனர். அதனால், தனித்தனியாகக் கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கத்தின் ஆசிரிய இடமாற்றக் கொள்கையே இதற்குக் காரணம். ஆனாலும் இறுதி ஐந்து ஆண்டுகளும் யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றுக்கு இறையருளால் இருவரும் இடமாற்றம் பெற்று வந்ததால் மறுபடியும் இணைந்து சேவையாற்றினர். இந்தச் சந்தர்ப்பம் அவர்களின் சிநேகிதத்தை மேலும் வலுப்படுத்தி இறுக வைத்தது. அதன் தொடர்ச்சிதான் நித்திறாஜனின் இன்றைய மருதனாமட 'விசிற்' என்றாலும் மிகையல்ல.

உடுவில்த் தெருவால்ப் போய்க்கொண்டிருந்த அந்த மொறிஸ் மைனர் முடக்கொன்றைத் தாண்டி அடுத்த முடக்கொன்றில்த் திரும்பியபோது தெரிந்தோ தெரியாமலோ ஓடிவந்த ஒரு பெண் அதன் முன் பக்கத்தில் அடிபட்டு விழுவதற்கும் காரின் பிறேக்குகளை நித்தியறாஜன் சடாரென்று பிடிப்பதற்கும் சரியாகவேயிருந்தது.

பிறேக்கின் கீச் என்ற ஓசையும் காரின் முன்பக்கத்தில் அடிபட்ட பெண்ணின் அவல ஓசையும் கேட்டு மொறிஸ் மைனர் நின்ற இடத்துக்கு ஓடி வந்தார் 'உடுவில் மெடிக்கல் சேவிஸ்' என்ற தனியார் மருத்துவமனையிலிருந்த டொக்ரர் ஜீவகரன். நித்தியறாஜனுக்கும் அவரது மனைவி சத்தியகலாவுக்கும் ஒரே பயம். அவர்களின் முகங்களில்ப் படர்ந்து கொண்டிருந்தன பயத்தின் அடையாளங்களான வியர்வைத் துளிகள்.

"பயப்பிடாதைங்கோ. இந்த முடக்கிலைதான் என்ரை மருத்துவமனை. அடிபட்டவவின்ரை காயத்துக்கு இஞ்சை மருந்து கட்டுவம். அவவும் உடுவில் வாசிதான். அம்மாவையும் கூட்டிக் கொண்டு உள்ளுக்கு வாருங்கையா."

சொல்லிவிட்டு மருத்துவமனைக்குள்ச் சென்றார் ஜீவகரன். ஜவகரனுடைய உதவியாளர் டொக்ரர் சுகந்தனும் அவரது பணியாட்களும் அடிபட்ட பெண்ணை உள்ளே கூட்டிச்செல்ல அவர்களைத் தொடர்ந்து நித்தியறாஜனும் சத்தியகலாவும் காலடி வைத்தனர் மருத்துவமனைக்குள்.

நித்தியறாஜனை அந்தரத்துக்குள்த் தள்ளிவிட விரும்பாத ஜீவகரன் நித்தியறாஜன் கேட்ட கேள்வி களுக்குப் பதில் சொல்ல வேண்டியதாயிருந்தது. நான் இவவுக்குச் சொந்தமில்லையெண்டாலும் இவ பிறந்த இந்த உடுவில் ஊரிலைதான் நானும் பிறந்தனான். இவவின்ரை சொந்தக்கார ஆளொருத்தர் சொன்னதைத் தான் உங்களுக்குச் சொல்லிறன்.

"சொல்லுங்கோ"

"இவ தன்ரை இளம் பருவத்திலை மச்சான் முறையான பொடியன் ஒருத்தனை விரும்பியிருந்தவ. அந்தப் பையன் இவவை விரும்பாததாலை இவவின்ரை காதல் ஒருதலைக் காதலாய்ப் போச்சு. அந்தப் பையன் வேறை ஒரு பெண்ணைக் கலியாணம் செய்ததைக் கேள்விப்பட்ட இவவுக்கு மன நோய் தொட்டிட்டுது. தாய் தகப்பன் இவவைத் தெல்லிப்பளை வைத்திய சாலையிலை கொண்டுபோய் விட்டினம். ஒரு கிழமையாலை ஒருத்தருக்குந் தெரியாமல் இவ ஓடியந்திட்டா. தாய் தகப்பனுக்கு ஒரே துக்கம். கடைசியிலை அதுகளும் போய்ச் சேந்திட்டுதுகள். இவவுக்கிருந்த ஒரேயொரு அண்ணனும் வீட்டை வித்துப்போட்டு வெளிநாடு போட்டார். இரத்த உறவுகளும் இவவைக் கைவிட்டாச்சு. இவ இப்ப தன்ரை பாட்டிலை திரியிறதும் பசி வந்தால் ஆரிட்டையாவது கேட்டு வாங்கிச் சாப்பிடுறதுமாயிருக்கு - பாவம். கிட்டத்தட்ட அறுபத்தைஞ்சு வயதிருக்கும் பேர் சந்திரமலர் "

இந்த நேரம் அங்கு வந்த டொக்ரர் சுகந்தனைக கண்ட ஜீவகரன் சந்திர மலரைப் பற்றிக் கேட்டார். "நல்ல பிறேக் எண்டபடியால் கார் பட்டெண்டு நிண்டிட்டுது. அதாலை அந்தப் பெண் தப்பியிட்டா. மண்டைக் காயம் தான். மருந்து கட்டியாச்சு. ஊசியும் போட்டிட்டம். கெதியிலை மாறியிடும். பயப்பிடத் தேவையில்லை."

சுகந்தனின் தென்புவார்த்தைகளால்த் தைரியம் அடைந்தாள் சத்திய கலா. "நிலமை மோசமில்லாதபடியால் இன்னுமொருக்காத் தெல்லிப்பளைக் குக் கொண்டு போவம். சிலவேளை சந்திரமலருக்குச் சுகம் வரலாம். தெல்லிப் பளை டொக்ரர் எனக்கு அனுமதி தந்தால் ஆஸ்பத்திரியிலை நிண்டு சந்திர மலரை நான் பாக்கிறன். ஆளைக் காரிலை ஏத்துவம். டொக்ரர் ஜீவகரனும் எங்களோடை வரட்டும்."

இப்படிக் கூறிவிட்டு ஜீவகரனைப் பார்த்தாள் சத்தியகலா. "என்ரை வேண்டுகோளைத் தட்டிக் கழிக்காமல் எங்களோடை வாருங்கோ டொக்ரர்."

சத்தியகலாவின் விடாப்பிடியும் மனவுறுதியும் சந்திரமலரைத் தெல்லிப் பளை மனநோயாளர் வைத்தியசாலையில்ச் சேர்த்துவிட்டது. மணித்தியாலங் கள் - நாள்கள் - வாரங்கள் - மாதங்களென்று காலநிலையில் மாற்றங்கள் ஏற் பட்டுக் கொண்டிருந்தபோதும் ஒவ்வொரு கிழமையும் சந்திரமலரைப் பார்க்க வேண்டுமென்ற சத்தியகலாவின் மனதிலும் உணர்விலும் மாற்றம் ஏற்படவே யில்லை.

வைத்தியசாலையில்த் தங்கிநின்று சந்திரமலரைக் கவனிக்க வேண்டு மென்ற ஆசை சத்தியகலாவுக்கு இருந்தாலும் அது சாத்தியப்படவில்லை. அத னால்த் தான் கிழமைக்கொரு முறையென்று தீர்மானித்தாள் சத்தியகலா. அப் படிப் போகும்போது சந்திரமலருக்கான உடை உணவு கொண்டு செல்லவும் அவள் தவறுவதில்லை.

ஒரு சிலவேளைகளில் ஏதேதோ சாட்டுகள் சொல்லித் தெல்லிப் பளை போவதைத் தட்டிக் கழிக்க நித்தியறாஜன் முயன்றாலும் சத்தியகலா அவரை

விடுவதில்லை.

"ஆருமில்லாத ஒரு அநாதை. அநாதையை அணைக்கிறவன்தான் மனிசன். அவனுக்குத் தான் தெய்வத்தின்ரை அருள். கிளம்புங்கோ."

இந்த வார்த்தைகள் நித்தியறாஜனின் மனதை மாற்றி ஒரு உற்சாகத்தை முளைக்கச் செய்ததும் சத்தியகலாவோடு கிளம்பிவிடுவார் நித்தியறாஜன். தெல்லிப்பளைக்குச் செல்லும் வழியில் ஜீவகரனைக் கண்டு பற்பல விடயங்களை - கூடுதலாகக் கிராமியச் சமுதாய வளர்ச்சி விடயங்களை அலசி ஆராயும் அவர் சந்திரமலரைப் பற்றி மேலதிக விபரங்களைத் திரட்டிக் கொள்ளவும் மறப்பதில்லை.

சத்தியகலாவோ திருமதி ஜீவகரனோடு அளவளாவிப் பேசும் வாய்ப்பை ஏற்படுத்தியதால் இருவர் நட்புறவும் நெருக்கமாகிவிட்டது. நிலைமை இப்படி மாறியதால் நித்தியறாஜன் குடும்பமும் ஜீவகரன் குடும்பமும் நெருங்கிய நட்புக் குடும்பங்களாகிவிட்டன.

அன்றும் ஜவகரனோடு பேசிவிட்டுத் தெல்லிப்பளை சென்ற நித்தியறாஜனோடு உரையாடினார் மனநோய் வைத்தியர் அன்பழகன். "சந்திரமலருக்கு இப்போது சுகம். அடுத்தகிழமை அவவைக் கூட்டிக் கொண்டு போகலாம். துண்டுவெட்டி உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பா. நானும் இஞ்சை தான் நிப்பன்."

டொக்ரர் அன்பழகனின் இந்த வார்த்தைகளால்த் தடுமாறிக் கொண்டிருந்தார் நித்தியறாஜன். "சந்திரமலரை எங்கு தங்கவைப்பது -ஆர் அவவைப் பொறுப்பெடுக்கிறது." என்ற கேள்வி அம்புகள் தைத்த தனால்த் தடுமாறியது அவரின் உள்ளம். நித்தியறாஜனின் தடுமாற்ற நிலையை ஓரளவு ஊகித்த சத்தியகலா,

"சந்திரமலர் என்னோடை தங்கட்டும் எனக்கொரு தங்கச்சியாக அவளிருக்கட்டும். கலியாணம் முடிக்காமல்ப் பதினெட்டு வயசிலை சாவுக்கு இரையான என்ரை உடன்பிறப்பு ஜீவகலாவின்ரை ஞாபகமாகச் சந்திரமலரை என்னோடை வைச்சிருக்கப் போறன். என்னைவிட ரெண்டு வயசுதான் அவளுக்குக் குறைவு. என்ரை தங்கச்சியாக வாழ்நாள் முழுவதும் அவள் இருக்கட்டும். என்ரை ஆசை இது தான். டொக்ரர் ஜீவகரனோடை வந்து சந்திரமலரைக் கூட்டிப்போவம்" என்று கூறிவிட்டாள் உறுதிபட.

"அம்மா நீங்கள் தான் உண்மையான மனிசப்பிறவி. மனிதம் எங்கிறது இது தான். அநாதைக்கு நீங்கள் உதவி செய்யிறியள். கடவுள் உதவி செய்வார் உங்களுக்கு. எல்லா ஆசியையும் தருவார்." மனநோய் வைத்தியர் அன்பழகன் சொல்லி முடித்ததும் மானிப்பாயை நோக்கிப் பயணித்தது மொறிஸ் மைனர்.

அடுத்து வந்த ஞாயிறு மாலை நாலரை மணிபோல்த் தெல்லிப்பளை மனநோயாளர் வைத்தியசாலையின் வாசலில் நிற்கிறார்கள் டொக்ரர் அன்பழகனும் சந்திரமலரும். சந்திரமலரின் கண்களிலே ஒரு அந்தரம். மொறிஸ் மைனர் மோட்டார்க் காரில், தான் அடிபட்டதும் டொக்ரர் ஜீவகரனின் தனியார் மருத்துவமனையில்த் தனது மண்டைக் காயத்துக்குச் சிகிச்சை அளிக்கப்

பட்டதும் அதன் பின்னர் நித்தியறாஜனின் காரில்த் தன்னை அவர்கள் தெல்லிப்பளை கொண்டு வந்ததும் டொக்ரர் அன்பழகன் மூலம் அவள் தெரிந்து கொண்ட விடயங்கள். இருந்தாலும் தன்னைக் கூட்டிப்போக அவர்கள் வருவார்களா என்ற ஐயம் தான் அவளது கண்களிலே ஊறிநின்ற அந்த அந்தரம்.

சந்திரமலர் இப்படி எண்ணி ஒரு சில நிமிடங்கள் சென்றதும் மெல்லிய ஹோரன் இரைச்சலுடன் வைத்தியசாலை முன்றலில் வந்து நின்றது மொறிஸ் மைனர். டொக்ரர் ஜீவகரன் முதலில் இறங்கி, வைத்தியசாலை வாசலை நோக்கி நடந்தார். அவரின் பின்னால் நித்தியறாஜன் சத்தியகலா ஆகியோர்.

"இவர்கள் தான் உங்களைக் காப்பாற்றியவர்கள். இது டொக்ரர் ஜீவகரன் - இது நித்தியறாஜன் - இது அவரின் மனைவி சத்தியகலா" மூவரையும் அறிமுகப்படுத்தினார் டொக்ரர் அன்பழகன்.

நித்தியறாஜன் என்ற பெயர் சந்திரமலரின் மூளையிலொரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஒரு அந்தரத்தோடு கேட்டாள் சந்திரமலர்.

"நித்தியறாஜன் அவற்ரை ஊர்?"

நித்தியறாஜன் பதில் சொல்லுமுன் வாய்திறந்தார் ஜீவகரன். "மானிப்பாய். அவர் இளைப்பாறிய ஒரு ஆசிரியர்."

"மானிப்பாயிலை என்ரை இரத்த உறவுகளும் இருக்குதுகள். நீங்கள் ஆற்ரை மகன்." சடக்கென்று கேட்டாள் சந்திரமலர்.

"ஜீவறாஜன்ரை மகன் தான் நான்."

நித்தியறாஜன் வாய் மலர்ந்ததுதான் தாமதம்

"நீங்களா?" என்று ஆச்சரியத் தொனி கிளப்பிய சந்திரமலரால் மேலும் பேச முடியவில்லை. திறந்த வாய் திறந்தபடி இருக்க "ஆ.." என்ற அலறல்ச் சத்தத்துடன் அப்படியே விழுந்தாள் நித்தியறாஜனின் பாதங்களில். விழுந்தவள் எழும்பவேயில்லை.

செய்த உதவிக்குக் கைம்மாறாக அவரின் பாதங்களில் அவள் விழுந்து அவரை வணங்குகிறாள் என்று நினைத்த அனைவரும் ஒரு சில நிமிடங்கள் விறைத்து நின்றார்களே தவிர இளங்குமரனாக நித்தியறாஜன் இருந்த காலத்தில் அவரையே தன்னுடைய மனதில் அவருக்கும் தெரியாமல் வரித்து, அந்த ஒரு தலைக் காதல் தோற்றதால்த் தான் அவரின் பாதத்தில் இப்போது வீழ்ந்திருக்கிறாள் என்று நினைத்திருக்கவே முடியாது.

அடுத்த நாள் திங்கள் காலை மணி பத்திருக்கும். "என்ரை காதல் எப்பிடியானதெண்டு இனியும் நான் சொல்லத் தேவையில்லை. உங்களாலை எனக்கு வாழ்வுதர முடியேல்லை எண்டாலும், உங்களை மட்டுமே என்ரை உள்ளத்திலை காதலனாய் ஏத்திவைச்ச எனக்கு உங்கடை காலடியிலை விழுந்து சாகிற சந்தர்ப்பம் வாய்ச்சதே போதும்" என்றெல்லாம் தனது மனதிலேந்திய முடிவை வெளியிட முடியாதபடி பூதவுடலான சந்திரமலரைத் தாங்கிக்கொண்டு நித்தியறாஜனின் மானிப்பாய் இல்லத்திலிருந்து புறப்பட்ட பிரேத வாகனம், பிப் பிரிச் சுடலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

“என்ரை ஒரேயொரு தங்கச்சியை இழந்த நான் அதின்ரை ஞாபகமாக, உன்னை என்ரை தங்கச்சியாக்கவே விரும்பினன்-வைத்தியசாலையிலை சேத்தன் - உனக்குச் சுகம் வந்திது. ஆனால் இண்டைக்கு நீ...? என்ரை ஆசையை நிராசை ஆக்கி, என்னைப் பிரிஞ்சு போறியே தாயே. என்னைப் பிரிஞ்சுபோக உனக்கு எப்பிடியம்மா மனம் வந்திது.”

பீறிட்டுக் கத்திக் கதறியழுது, நகர்ந்து கொண்டிருந்த பிரேத வாகனத்துள், நீங்காத் துயில்கொள்ளும் சந்திரமலருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தினாள் சத்தியகலா.

“டொக்ரர் ஜீவகரன் எனக்குத் தந்த தகவல்களை வைச்சுக்கொண்டுதான், நீ என்ரை மாமி மகள் சந்திரமலர் எண்டு அறிஞ்சன். மாமியைப் பாக்க அங்கை நான் அடிக்கடி வந்தது உண்மை தான். இருந்தாலும் ஒரு முறைகூட உன்னோடை நான் கதைச்சதுமில்லை - உன்னை நான் காதலிச்சதுமில்லை. வறுமைக் கோட்டுப் பெண்ணொருத்தியை நான் திருமணம் செய்ததை அறிஞ்ச உனக்கு, வேறை ஒருத்தனை மணம் முடிக்கத் தெரியாமல்ப் போச்சா? இல்லையெண்டால் உன்ரை அப்பா அம்மா பேசி, நீ வேண்டாமெண்ட கலியாணத்தையாவது...?

சரியம்மா என்ரை மனதை மாத்தியிட்டன். உங்கடை விருப்பப்படி நீங்கள் பேசின கலியாணத்தைச் செய்யிறன்” என்று செய்திருக்கலாமே. இனிமேலாவது இப்படியான பாரம்பரியங்களுக்கு இளம் பெண்களோ ஆண்களோ இடம் கொடுக்காமலிருந்தால்ப் போதும் என்ற சிந்தனையைத் தன்னுள் எழுதியபடி பிரேத வாகனத்தோடு சென்று கொண்டிருக்கிறான் நித்தியராஜன்.

‘மாற்றம்’ என்ற தலைப்பில்
06.03.2005 தினக்குரலில் வெளிவந்தது

# 13 புதிய பாதை

அந்த ஊரில் அனேகராலும் பேசப்படும் நாயகன் தேவன்தான். இளம் வயது வாலிபன் வயது இருபது. வாட்டசாட்டமான ஆண்மகன் என்றே சொல்லவேண்டும். மூச்சிலும்கூட அவன் அப்படித்தான்.

பொடி பில்டர் என்று சொல்லும் அளவுக்குக் காணப்படுவது அவனது தோற்றம். பாரந்தூக்கும் பயிற்சி செய்து தனது உடம்பை அவன் கட்டி யெழுப்பியவனல்ல. அவனுக்கு அது பரம்பரைச் சொத்து. அவனின் தகப்பன் வேலுப்பிள்ளையும் அப்படித் தான்.

வேலுப்பிள்ளை இப்போதும் இருக்கிறார். உழைக்க முடியாத நிலை. இந்தக் குடும்பத்தில் உழைப்பவன் தேவன் மட்டுந்தான்.

குடும்பத்தில் மூத்தவன் தேவன். அடுத்துப் பிறந்த மூவரும் பெண்கள். அவர்களுக்குப் பிறகு இப்போது ராஜன். அவனுக்கு ஆறு வயது.

ஜி.சி.ஈ சாதாரணதர பரீட்சைக்கு ஒரேயொரு முறை தோற்றிய மூத்த மகள் தாரணி, அந்தப் பரீட்சையில்த் தோல்வியடைந்ததால், பாடசாலை வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டுவிட்டுத் தாயாரின் சுவையான சமையலுக்கு வித்தாகவே விளங்கினாள்.

தாரணிக்குப் படிப்புவராது என்ற கவலை வேலுப்பிள்ளைக்கும் திலக வாணிக்கும் இருக்கத்தான் செய்தது. ஆணாக இவள் பிறந்திருந்தாலாவது தேவனோடு வேலைக்கு அனுப்பியிருக்கலாம்-எங்களுடைய கஷ்டத்தையும் போக்கியிருக்கலாம் என்பது திலகவாணியின் சிந்தனை.

அதுக்கென்னப்பா செய்யிறது, பெண்ணாய்ப் பிறந்தாலும் புத்தியும் வேணுமே படிச்சு வேலை பாக்கிறதுக்கு. ஏதோ உந்தக் கூப்பனும் இருக்கிற படியாலை சமாளிக்கிறம். இல்லாட்டி,நானும் இப்பிடி இருக்கிற மாதிரிக்கு... இதுதான் திலகவாணியின் சிந்தனைக்கு வேலுப்பிள்ளை கொடுத்த பதில்.

தேவனின் உழைப்பில் ஒருகொஞ்சம் இவர்களுக்கும் சேருவதால் ஏதோ ஒருவிதமாகச் சமாளித்து வருகிறாள் திலகவாணி. அன்றும் தேவனின் உழைப்பைத்தான் எதிர்பார்த்திருந்தாள் .

மாலை நேரம் தேவன் வீடு வந்ததும் காசைக்கேட்டு, மாவு வாங்கி வைத் தால் நாளைக் காலை றொட்டியோ, பிட்டோ செய்து பிள்ளைகளையும் புரு ஷனையும் சமாளிக்கலாம் என்ற நினைவோடு குசினிக்குள்ப் புகுந்தாள்.

தாரணியின் உதவியோடு சமைத்துக் கொண்டிருந்த அவளுக்கு

அதிர்ச்சிதரும் செய்தி ஒன்றைக் கொண்டு வந்தான் கார்ச் சாரதி குணசிங்கம்.

சேதியைக் கேட்டதும் விறுவிறுத்தது அவளின் உடம்பு. கதறிக்கதறி அழுதாள் பாவம். அவளைத் தொடர்ந்து தாரணி, தங்கை பாமினி, மற்றத் தங்கை ராகினி, தம்பி றாஜன் என்று எல்லோரும் குளறி அழ அதைத் தாங்க முடியாமல் விம்மி வெடித்தார் வேலுப்பிள்ளை.

அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் இச்செய்தியைக் கேட்டதும் 'எங்க ளின்ரை மேலிலை மசுக்குட்டி ஊந்து தோலைத் தடிக்கப் பண்ணி எங்களை அடிக்கடி சொறியச் செய்யுமே, அதேமாதிரி உவன் எங்களுக்குச் செய்த சேட்டை, கொடுமை...? அவன்ரை அட்டகாசம் அப்பப்பா...?' 'உதோடை உவன் துலைஞ்சானெண்டால்....?'

'கொஞ்சப் பாடுபடுத்தினானே எங்களை. இப்ப பாத்தியளே இவனுக் குக் கிடைச்ச தண்டனையை...'

'தெய்வம் நிண்டறுக்குமெண்டு சும்மாவே சொன்னவை அந்தக் காலத் திலை...'

'முடிஞ்சானெண்டால் ஒரு நிம்மதி இந்த ஊருக்கு' என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள் தத்தமக்குள்.

இது நடந்தது ஒரு சனிக்கிழமை. ராகினியைக் கூட்டிக்கொண்டு; குணசிங்கத்தின் காரில் ஏறி யாழ்/பொது வைத்தியசாலையை அடைந்தாள் திலகவாணி.

ஒப்பறேஷன் தியேட்டருள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது வேலை. ஒப்பறேஷனுக்காக எடுத்துச் செல்லப்பட்ட தேவனைப் பார்க்கத் துடித்தாள் ராகினி.

அவளது கண்களிலே நீர்த்துளிகள். கட்டுப்படுத்த அவளால் முடிய வில்லை. பொலு பொலென்று நிலத்திலே வீழ்ந்தன.

'ஆஸ்பத்திரிக்குப் போறது சரி; அழுது குளறி மயக்கம் போட்டு விழா மல் வீட்டுக்கு வாருங்கோ' என்று ஒரு கையும் காலும் வாங்காமல்ப் பாயும் படுக்கையுமாயிருக்கும் தனது தகப்பன் சொன்னதை நினைவுபடுத்திக் கொண் டாள் அவள்.

'அண்ணாவை ஒருக்கால்ப் பாக்கவேணும் அம்மா'. ராகினியின் ஆசை யைத் தாயினால்ப் பூர்த்தியாக்க முடியவில்லை. அழமட்டுமே முடிந்தது.

ஒப்பறேஷன் தியேட்டரில் இருந்து ஒரு முப்பது யார் தொலைவில் ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தோடு சேர்ந்துவிட்டாள் திலகவாணி. என்ரை பிள்ளைக்கு அப்பிடி இப்பிடியெண்டு ஏதாவது நடந்தால்...? கொஞ்சம் ஆத்திரமாகவே வார்த்தைகளைக் கக்கினாள் திலகவாணி.

திலகவாணியைப் பார்ப்பவர்கள், "இந்த மனிஷியைப் பாத்தா, பொல் லாத ஆளைப்போல் இருக்கு" என்றுதான் சொல்வார்களே தவிர, நல்ல பெண் என்று சொல்வதே கிடையாது.

எந்த விஷயத்திலும் அமைதி, ஆராய்ச்சி என்று எதுவுமே இல்லாது வாய்க்கு வந்தபடி ஏசி, ஒரு தலைப்பட்சமாகத் தனது குடும்பத்திற்குச் சாதக மாகவே வாதாடுபவள்.

இந்த இடத்திலும் அவளது பேச்சு அந்தத் தொனியில்த் தான் அமைந்

தது.

கூட்டத்துக்குள் நின்ற ஒருவன்,

"அம்மா! நீதி நியாயம் எண்டு ஒண்டிருக்கு. அதையெல்லாம் ஆராய்ச்சி பண்ணி அமைதியோடை நியாயத்தோடை எதையும் செய்யிறது தான் பண்பு. அதை விட்டிட்டுக் கண்டபடி பேசிறது அழகில்லை. நடந்த தைத் தெரிஞ்சு பேச வேணும்' நடந்ததை நானும் பாத்தனான்" என்றான்.

இதைக் கேட்டதும் துள்ளினாள் திலகவாணி. அவளது உள்ளுக்குளி ருந்து பூகம்பம் போலப்பீறி வெடித்தது ஆத்திரம்.

"அம்மா, நான் அவர்களுக்கோ, உங்களுக்கோ பழக்கமானவனில்லை. அவையளுக்காக வக்காளத்துப் பேசி அவையிட்டைப் பணம் வாங்கவோ, உங் களுக்காக வக்காளத்துப்பேசி உங்களிட்டைப் பணம் வாங்கவோ நான் வரேல்லை. நான் ஆஸ்பத்திரிக்கு வந்தனான். வந்த வழியிலை என்ரை கண் ணாலை கண்டதைத்தான் சொல்லுறன்." என்று அவன் சொன்னதும் வந்த ஆத்திரத்தை வாய்க்குள் பொத்தியபடியே கதை கேட்டாள் திலகவாணி.

"குறுக்கு றோட்டாலை வாற வாகனங்கள் ஸ்பீட்டைக் குறைச்சு நிறுத்தி, ஏதாவது வாகனங்கள் போகுதா வருகுதா எண்டு பாத்துத்தான் மெயின்றோட்டுக்கு ஏறவேணும் - அதுவும் சரியான சைற்றாலை. உங்கடை மகன் என்னெண்டால், அப்பிடிப் பாக்காமல்ப் பிழையான சைற்றாலை திருப்பி அதுவும் படுவேகமாகத் திருப்பி மெயின் றோட்டுக்கு ஏறினான். சரி யான சைற்றாலை வந்த காரிலை மோதினால் எப்படியிருக்கும்? சயிக்கிளி லிருந்து கீழை விழுந்ததாலை உங்கடை மகன்ரை மண்டை வெடிச்சு ஒரே இரத்தம்' என்றான்.

"அம்மா! அட்வான்ஸ் லெவல்ச் சோதனை எடுக்கிறதுக்கு வந்த பிள்ளையின்ரை கார் தான் அது. காரிலை வந்த பிள்ளை பண்புள்ள பிள்ளை யெண்டபடியாத்தான் உங்கடை மகனை உடனடியாகத் தன்ரை காரிலை ஏத்தி இஞ்சை கொண்டு வந்தது. அது மாத்திரமில்லை. தன்ரை இரத்தத்தை யும் இரத்த வங்கிக்குக் குடுத்திருக்கு உங்கடை மகனைக் காப்பாத்திறத்துக் காக. அதோடை, தனக்குத் தெரிஞ்ச இன்னொரு ஆளையும் காசுக்குப் பிடிச்சு அந்த இரத்தத்தையும் குடுத்திருக்கு. உங்களை ஏத்தி வாறத்துக்காகத் தங்கடை காரையும் அனுப்பியிருக்கு. உங்கடை மகன்ரை அடையாள அட்டையையும் விபத்து நடந்த இடத்திலை பொறுக்கிப் பத்திரமாக வைச்சுத் தங்கடை கார்ச் சாரதி குணசிங்கம் மூலமாகத் தான் உங்கடை வீட்டுக்கு அனுப்பினது அந்தப் பிள்ளை."

தான் கேட்ட அனைத்தையும் அவன் சொன்னபோது வாயடைத்துவிட் டாள் திலகவாணி. அவளது முகத்திலே தோன்றிய கடுகடுப்பு மாறி வெடு வெடுப்பு ஓடி ஒருவித சாந்தம் இழையோடத் தொடங்கியது; சோகமும் அத னோடு சேர்ந்து கொண்டது.

'அந்தப்பிள்ளை தன்ரை சோதனையைப் பற்றிக் கூடக் கவலைப்படா மல், இரத்தம் குடுத்துக் கொண்டிருக்கே தன்ரை தாய் தகப்பனுக்கும் சொல் லாமல்..., அதை எண்ணி நிறுத்துக் கதையுங்கோ' இப்படிச் சொன்னான் அவன்.

அந்த இருபத்தைந்து வயது இளைஞன் சொன்னதைக் கேட்ட திலக வாணி ஓடினாள் அந்த இடத்தை விட்டு. இரத்தத்தைக் கொடுத்து விட்டு, மெதுவாக நிமிர்த்தான் திவ்வியன், திலகவாணியின் கண்களிலிருந்து பொலு பொலுவென்று வடிந்து கொண்டிருந்தது கண்ணீர்.

'அம்மா...., நீங்கள்....?'

'தேவனின் அம்மா....'

'நடக்க வேண்டியதெல்லாம் நடந்திட்டுதம்மா. உங்கடை மகன் தேவ னுக்குக் கட்டாயம் சுகம் கிடைக்க வேணுமெண்டு ஒவ்வொரு நிமிஷமும் கடவுளோடை நான் போராடிக் கொண்டிருக்கிறன். நடந்த சம்பவத்துக்காக எங்களை மன்னியுங்கோ. உங்களிட்டை நான் மன்னிப்புக் கேக்கிறன்.'

அதுக்குமேல்ப் பேசமுடியாது தத்தளித்த அவனின் வாய் மூடப்பட்டு விட்டது. அவனது கண்களோ நீரைக் கொட்டி நின்றன. அந்தக் காட்சியைக் கண்ட திலகவாணியின் மனம் நெகிழ்ந்தது. அவளது மனமோ 'இப்படிப் பண்புள்ள ஒரு பிள்ளை எனக்கில்லையே' என்று கவலைப்பட்டது.

அவளது அக்கம் பக்கத்து வீட்டார் அனைவரும் ஆச்சரியப்படத்தக்க தாக அவள் மாறிவிட்டாள். இந்தச் சந்தர்ப்பத்திற்குப் பிறகு அந்தச் சுற்றாட லிலே அவள்தான் தலைமகள். 'திலகவாணியா...? உண்மையில் அந்த மனுஷி ஒரு பண்பான மனுஷிதான்.' என்ற பேச்சே அடிபடத் தொடங்கியது.

கல்யாண வீடோ மரண வீடோ, திலகவாணியின் தலைமைத்துவம் இல்லாமல் நடவாது...

அன்று தைப்பொங்கல் நாள். சுகப்பட்டு வீடு வந்துவிட்டான் தேவன். விலைமதிக்க முடியாத தைப்பொங்கல்ப் பரிசு என்று வேலுப்பிள்ளையும் திலகவாணியும் தங்களுக்குள்ப் பேசி மகிழ்ந்தார்கள். தனக்குமொரு பொங் கல்ப் பரிசு கிடைத்ததாகவே திவ்வியனும் உணர்ந்து மாபெரும் மகிழ்ச்சி யடைந்தான். இப்போது தேவனும் திவ்வியனும் இணைபிரியா நண்பர்கள்:

திவ்வியனின் பண்புத்தனத்துக்கு முன் தேவனின் சண்டித்தனம் தீயி னால்ச் சுடப்பட்ட நச்சுப் பாம்பாகிவிட்டது.

கண்டவர்க்கெல்லாம் அடித்து வேதனைப்படுத்தி வேண்டாத வினை செய்து, சண்டித்தனத்தால் எதையும் சாதிக்கலாம் என்று நினைத்திருந்த தேவன், தனது சண்டித்தனம் மங்கியதையும் திவ்வியனிடம் காணப்படும் நல்ல பண்புகள் தன்னிடம் பொங்கியதையும் உணர்ந்தான் - நல்லவனாக மாறி விட்டான்.

திவ்வியனின் வீட்டுக்குத் தேவையான தச்சு வேலைக்கும் வேறு சில்லறை வேலைகளுக்கும் இப்போது தேவன் என்றால் அவர்களின் நெருக் கத்தைச் சொல்லவுமா வேண்டும்?

21.01.1989

சஞ்சீவியில் வெளிவந்தது

# 14 என்ரை பிள்ளை நல்லவன்

"ஐயோ அம்மா ...அம்...மா...அம்...மா" என்று கத்திக் கதறி அழுதபடி, பக்கத்தில்ப் படுத்திருந்த தாயைக் கட்டிப்பிடித்தாள் ஜானகி.

"நீங்கள் சாகக் கனவு கண்டனம்மா" ஜானகியின் கத்தலும் கதறலும் படுத்திருந்த அறைச்சுவர்களில் முட்டி மோதிக் கொண்டிருந்தன.

"நான் இப்ப உனக்கு முன்னாலை உயிரோடை தானே இருக்கிறன். சாகேல்லை. நீ அழாதை பிள்ளை. நான் செத்திட்டனெண்டு நீ கனவு கண்ட படியாலை நான் சாகமாட்டன். எங்கடை உறவிலை இல்லையெண்டால் எங்களோடை நெருங்கிப்பழகிற ஆக்களிலை ஆரோ ஒருத்தர் சாகப்போகினம். நடக்கிறது நடந்துதானாகும். அழுதது போதும் இனி அழாதை. இந்தச் சாமத்திலை நீ அழுதுகொண்டிருந்தால்ப் பக்கத்து வீட்டு மாமா மாமியும் குழம்பிப் போவினம். அழாமல்ப்படு."

ஜானகியைத் தேற்றிவிட்டு உறங்கிய சந்திரா நித்திரை முறிந்து எழும்பியபோது காலைமணி நான்கரை. ஜானகியை அந்தநேரம் எழுப்ப அவள் விரும்பவில்லை. சாமம் ஒரு மணிக்குக் கனவு கண்டு எழும்பிய ஜானகி ஐந்து அல்லது ஆறு வரை தூங்கட்டும் என்ற நினைப்போடு, தனது கழித்தல் குளித்தல்க் கடன்களை முடித்து முருகனைக் கும்பிட்டவள், தேநீர் தயாரித்து முடித்தபோது மணி ஆறாகிவிட்டது. ஜானகியும் எழும்பிவிட்டாள்.

"ரீ இண்டைக்கு ரொம்ப நல்லாயிருக்கம்மா. நீங்கள் எழும்பிற நேரத்துக்கு என்னையும் எழுப்பினியளெண்டால் நான் ரீ போட்டுத் தருவன்."

"நாளைக்கு எழுப்பிறன். போட்டுத் தா. அதுசரி. என்ரை பிள்ளை ஐதுசன்ரை போன் (Phone) கோலுமில்லை - கடிதமுமில்லை. அதுதான் எனக்கு ஒரே யோசினை. அதாலை நித்திரையும் அரைகுறை தான். உன்ரை கலியாணச் சீதனக் காசை அனுப்புவனெண்டு எப்பவோ கடிதம் போட்டபிள்ளை, இண்டைவரை கடிதமும் இல்லை - காசுமில்லை. இன்னும் ஆறு மாசத்திலை கலியாணம் நடக்க வேணுமெண்டு மாப்பிள்ளை வீட்டார் ஒரே பிடியாய்ச் சொல்லிப் போட்டினம். தாங்கள் கேட்ட சீதனத்தைத்தர எங்களுக்கு வசதியில்லாட்டித் தாங்கள் வேறையொரு இடத்திலை பாக்கப்போகினாம். இப்பிடியும் அவையளின்ரை வாயிலையிருந்து வந்திட்டுது. என்ரை பிள்ளைக்கு ஒரு கடிதத்தை நாளைக்கு நீ எழுதினியெண்டால்........என்ன பிள்ளை நினைக்கிறாய்?

"நாளைக்கு எழுதிறனம்மா"

"எழுதிப்போட்டுச் சொல்லு நான் அனுப்பிறன்." சொல்லிவிட்டு, ஏதோ ஒரு யோசனையுடன் பின்வளவுக்குப் போய்க்கொண்டிருந்தாள் சந்திரா. அங்கிருக்கும் தென்னை மரங்கள் பத்தையும் பார்த்தபோது ஜெர்மனியிலிருக்கும் ஜதுசனின் நினைவு அவளின் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அந்த மரங்கள் அவனின் பெயரில்த்தான் நாட்டப்பட்டன.

சந்திராவின் கடைக்குட்டி ஜதுசன் . இவனுக்கு மூத்தவர்கள் மூவர். மூவரும் பெண்கள். மூத்த வளும் இரண்டாவதும் திருமணமாகி, தகப்பனின் ஊரான தெல்லிப்பளையில் வாழ்கிறார்கள். இனிமுடிக்க இருப்பவள் ஜானகி வயது இருபத்தாறு. அழகான முகவெட்டும் மெல்லிய உடலமைப்பும் கொண்டவள். நல்ல நிறம். சுருட்டைமுடி.

உடம்பை இறுக்கிப் பிடிக்கிற நவநாகரிக உடைகளை அவள் உடுப்பதில்லை. பாவாடை சட்டைதான் கூடுதலாக அவள் அணியும் ஆடைகள். பாவாடையும் கணுக்கால் வரை நீண்டிருக்கும். ஒரு சில கொண்டாட்டங்களுக்கு மட்டும் பாவாடை தாவணி அல்லது சாறிசட்டை. தமிழ்ப் பண்பாட்டுக்குரிய ஆடைகளை அவள் அணிவதற்குத் தூண்டுதலாக இருந்தவள் சந்திரா.

"பிள்ளை, எங்கடை உடை - பழக்க வழக்கம் இதெல்லாம் இப்ப மாறிக் கொண்டிருக்கு. ஒரு சில வெளிநாட்டாற்ரை உடையையும் பழக்க வழக்கத்தையும் எங்களிப் பலர் விரும்பிறது தான் காரணம். எங்களுக்கெண்டொரு உடையும் பழக்க வழக்கமும் இருக்கேக்கை வெளிநாட்டுப் பழக்கவழக்கத்தை - உடையை எங்கடை சனங்களிலை ஒரு சில பேர் விரும்பிறேல்லை - வெறுக்கினம். அப்படி வெறுக்கிறவையிலை ஒருத்திதான் நான். வெளி நாட்டாற்ரை நல்ல பழக்கவழக்கங்களை - மொழிகளை - மருந்து வகைகளை நாங்கள் வெறுக்கக்கூடாது. தமிழ்ப் பண்பாட்டையும் கைவிடக்கூடாது.

"ஜானகியிட்டை நல்ல பண்பாடிருக்கு. அது உடுக்கிற உடையைப் பார் - அதின்ரை பழக்கவழக்கத்தைப்பார். செல்லச் சந்திரனுக்கும் சந்திராவுக்கும் பிறந்த பிள்ளையெல்லே. அப்பிடித்தான் வாழும்" எண்டு நாலு பேர் உன்னைப்பற்றிச் சொல்லிறதைக்கேக்க உள்ளம் குளிர்ச்சியாயிருக்கு - சந்தோஷமாயிருக்கு. அந்தச் சொல்லுக்கு இலக்கணமாய் நீ எப்பவும் இருக்க வேணும் பிள்ளை." சந்திராவின் இந்த அறிவுரைகள் நேற்று இன்று தொடங்கியவை அல்ல. ஜானகியின் அக்காமாருக்கும் கூறப்பட்டவை. அவளுடைய அறிவுரைகளில் இன்னொன்று கல்வி பற்றியது. கல்விக்கு முதலிடங் கொடுங்களென்று வற்புறுத்தப்பட்ட அறிவுரை. ஆனால் அவளின் பிள்ளைகள் எவருமே ஏ/எல் வகுப்புக்கு மேல்ப் படிக்கவில்லை. மூத்தவளும் அடுத்தவளும் திருமணம் செய்துவிட்டார்கள். ஜானகிக்கும் பேச்சுக்கால் நடந்தது. அது அரைகுறையில் நிற்பதற்கு லட்சக் கணக்கான சீதனமே காரணம்.

செல்லச் சந்திரன் உயிரோடு இருந்திருந்தால் அந்த லட்சங்கள் அவர்களுக்குப் பெரிய தொகையாக இருந்திருக்காது. அவர் இறந்து மூன்றாண்டுகள். வாழ்ந்த காலத்தில் அவரொரு மெக்கானிக் - மிகச் சிறந்த வேலகாரன். அவரை மெச்சாத வாகன ஓட்டுநர்கள் இல்லையென்றே சொல்லவேண்டும்.

கார் என்ன லொறியென்ன பஸ்சென்ன ஓட்டோ என்ன மோட்டார் பைக்கென்ன அவர் கைபட்டால்ப் போதும். புதிதாக வாங்கின வாகனங்கள் கரகரப்பின்றி எப்படிப் பசுமையாக ஓடுமோ அப்படி ஓடும். அவரின் திறமை அவரின் கைராசி என்று சொல்வார்கள். அவரின் அந்தக் கைராசி உச்ச நிலையை அடைந்தபோது, பணம் பணமாய் அவரால் உழைக்கமுடிந்தது. அந்த உழைப்பில்த் தனது முதலிரண்டு மகள்மாருக்கும் தனது பிறந்த ஊரான தெல்லிப்பளையில்ப் பன்னிரண்டு பரப்புக்காணி வாங்கி இரண்டு வீடுகள் கட்டி மூத்தவளுக்கும் அடுத்தவளுக்கும் சீதனமாய்க் கொடுத்தார்.

சந்திரா இப்போதிருக்கும் வீடு வளவு ஜானகிக்கென்றபடியால் அவளுக்கு வீடு வளவு வாங்கவேண்டுமென்று அவர் நினைக்கவில்லை. ஜானகிக்கு இப்போது தேவையானது சீதனப்பணம். ஜெர்மனியிலிருக்கும் சந்திராவின் மகன் ஜதுசன், அந்தத்தொகை பதினைந்து லட்சத்தையும், தான் தருவதாக ஒப்புக்கொண்டு விட்டான். அதனால் ஜானகியின் திருமணப் பேச்சும் வெற்றியில் முடிந்தது.

அந்தப் பணம் எப்போது வரும் எப்போது வரும் என்று காத்திருந்த சந்திராவின் கையில் அன்றைக்கொரு கடிதம். ஜெர்மன் முத்திரை ஒட்டப்பட்டிருந்தது. மாபெரும் மகிழ்ச்சி அவளுக்கு. உடைத்து வாசித்தாள்.

"அம்மா, அக்கா, பல மாதங்களாக உங்களுக்கு நான் எழுதேல்லை. போனிலையும் தொடர்பு கொள்ளேல்லை. நான் வேலை செய்யிற மெசினுக்கு முன்னாலை கால் சறுக்கி விழுந்து காலிலும் கையிலும் முறிவு. மாதக் கணக்காய் ஆஸ்பத்திரியிலை படுத்த படுக்கை. அதாலை உங்களுக்கெழுதேல்லை. இந்தக்கடிதமும் என்ரை சினேகிதனைக் கொண்டுதான் எழுதிறன். அக்கான்ரை கலியாணத்துக்குத் தேவையான சீதனக் காசு சேத்திட்டன். அதை அனுப்பிறதுக்கு ஆயத்தப்படுத்தேக்கைதான் இந்த நசல். நீங்கள் கவலைப்படுவியளெண்டுதான் இவ்வளவு காலமும் எழுதேல்லை. என்ரை சினேகிதன் யாழ்ப்பாணம் வாறான். அக்கான்ரை சீதனக் காசு -கூறை கொண்டு வருவான். கிடைச்சதும் எழுதுங்கோ."

ஜதுசன் எழுதிய இந்த வரிகள் சந்திராவையும் ஜானகியையும் கதறியழ வைத்தன. ஒருவரையொருவர் கட்டியணைத்து அழுதார்கள். அவர்கள் அடைந்த கவலையும் வேதனையும் சொல்லுந்தரமன்று.

"முருகா! கையெடுத்து உன்னைக் கும்பிடுறன். என்ரை பிள்ளைக்குப் பாதகமான எதுவும் நடக்க விடாதை.தூரத்திலையிருக்கிற பிள்ளை. அதுக்கு எந்தக் கஸ்ரமும் வராமல் நீதானப்பா பாதுகாக்கவேணும். என்ரை பிள்ளை இனி உன்ரை பிள்ளை. உன்னை மட்டுந்தான் நம்பியிருக்கிறன். காப்பாத்து - மறக்காதை - மறுக்காதை. உன்ரை பேரிலை வேலொண்டு செய்து தாறனப்பா. உன்ரை பிள்ளையைக் காப்பாத்து."

இப்படியெல்லாம் ஒவ்வொரு காலையும் மாலையும் ஜானகியுடன் தனது ஊர் முருகன் கோயிலுக்குச் சென்று முருகனைத் தொழுதுகொண்டிருப்பாள் சந்திரா. அவளோடு ஜானகியும். ஜதுசன் குணமடைய வேண்டுமென்பதே அவர்களுடைய வேண்டுகோள்.

அன்றைக்கும் கும்பிட்டு வெளியேறி நடந்து கொண்டிருந்தார்கள். வீடு

போய்ச் சேரும்வரை அவர்கள் கதைத்ததெல்லாம் ஐதுசன் பற்றித்தான். "என்ரை பிள்ளை ஐதுசன் எல்லாத்திலையும் நல்ல கவனம். நடக்கேக்கையும் கவனமாய்த்தான் நடப்பான். அப்படிப்பட்ட என்ரை பிள்ளை கவனமில்லா மல் ஏன் நடந்தது? கால் சறுக்கினது எண்டு நினைக்கேக்கை பெரிய ஆச்சரிய மாயிருக்கு.

"காலத்தை நம்மால் வெல்லமுடியாது
காலமே நம்மை வென்றுவிடுகிறது"

இந்த வசனத்தை நாவலொண்டிலை வாசிச்சனானம்மா. தம்பிக்கு இது தான் நடந்திருக்கவேணும்.

"என்ரை பிள்ளை நல்லவன். ஆருக்கும் கேடுசெய்யமாட்டான். அப் படி வாழிற என்ரை பிள்ளைக்கு இப்படி ஒரு கெடுதலோ எண்டு எனக்கு ஒரே யோசினையும் கவலையும். நல்லவனுக்கு இப்படி வரவேணுமே"

"நல்லவனெண்டு யாரையும் சொல்லேலா தம்மா. தம்பியோ நானோ இந்த வீட்டிலை நல்ல பிள்ளையளாய்த்தானிருப்பம். வெளியிலை போகேக்கை...? எங்களை அவதானிக்கிறவைக்குத்தான் எங்கடை கேவலங் கள் தெரியும். அந்தச் சாட்சியள்தான் உண்மையான சாட்சியள். வெளிப்பூச்சு அழகாயிருக்கெங்கிறதுக்காக உள்ளுக்கிள்ளையும் அப்படித்தானெண்டு நினைக்கிறது தவறு. நல்லவனெண்டு நாங்கள் நினைக்கிறவன் சந்தர்ப்ப சூழ் நிலையாலை கெட்டவனாய் மாறிப்போறதும் வழக்கம். தம்பியும் எப்படி யெப்பிடியோ. சமையலுக்கு நேரமாச்சு - கெதியாய் நடப்பம்."

காலங்கடந்து கொண்டிருந்தது. ஜானகியின் திருமணத்துக்கு இன்னும் இரண்டு மாதங்கள். திருமணத்தன்று திருமணப்பதிவாளர் - மணமகளின் தாய் தந்தை -மணமக்களின் இரத்த உறவுகள்- நண்பர்கள் -அன்பர்கள் ஆகியோ ரின் முன்னிலையில்ச் சீதனப்பணம் முழுவதையும் மணமகளின் தாயார் மண மகனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உறுதியாயிற்று.

ஜானகிக்கு வரவிருக்கும் மணமகன் கச்சேரிக்கிளாக். பேர் ஜெயக் குமார். நல்லவன்-சோலி சுறட்டு இல்லாதவன்-குடும்பத்தை நல்ல முறை யில்க் காப்பாற்றக் கூடியவன், என்று அவனது ஊரான நல்லூரில்க் குடியிருக் கும் ஒரு சிலர் (அவர்களுள் ஜெயக்குமாரின் எதிரிகளும் அடங்குவர்) கூறியி ருந்ததால்த் தனது மருமகனாக அவனை எடுக்கவிரும்பினாள் சந்திரா.

வீடுவளவோடு காசு நகையும் என்று இரண்டு பகுதியும் தீர்மானித்து விட்டார்கள். சந்திரா இப்போதிருக்கும் வீடு வளவு ஜானகிக்கு எழுதப்பட்டு விட்டது. தகப்பனில்லாதபடியால், சீதனத் தொகை யான பதினைந்து லட்சத் தையும் தானே தருவதாக ஐதுசனும் ஒப்புக் கொண்டுவிட்டான். அந்தப் பணத்தைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறள் சந்திரா.

அன்றைக்கு காலை பத்து மணிபோல் ஹீறோஹொண்டா மோ-பைக் ஒன்று சந்திராவின் வீட்டுக் கேற்றடியில் ஹோண் அடித்து நின்றது. அதிலி ருந்து இறங்கி வந்த இருவரில் ஒருவர் சந்திராவின் வீட்டுக் கதவைத் தட்டி னார். சமையலறைக்குள் வந்த சந்திரா அவசரம் அவசரமாகக் கதவடிக்கு வந்து விட்டாள். யார் கதவைத்தட்டினாலும் ஜானகி போய்க்கதவைத் திறப்ப தில்லை. சந்திராவின் கண்டிப்புத்தான் அதற்குக் காரணம். திருடர்களும் எதிரி

களும் கூடத் திடீரென்று வந்து கதவைத்தட்டலாம் - தீங்கு செய்யலாம். தனக்கு எந்த ஆபத்து நடந்தாலும் கவலையில்லை, மகளுக்கு அப்படி எதுவும் நடக்கக் கூடாதென்பது சந்திராவின் முடிவு. அதனால், யார் கதவைத்தட்டினாலும் ஜானகி திறப்பதில்லை. தன்னுடைய அறைக்குள் முடங்கிவிடுவாள்.

கதவு தட்டப்பட்டுக்கொண்டேயிருந்தது. மெதுவாகத்திறந்தாள் சந்திரா. வந்தவர்களின் ஒருவன் கதைக்கத் தொடங்குமுன் இருவருக்கும் ஆசனங்கள் வழங்கப்பட்டன.

"நான் ஜெர்மனியிலிருந்து நாலாம் நாள் வந்தனான் அம்மா. உங்கடை மகன் ஜதுசன்ரை சினேகிதன். என்ரை ஊர் கூவில். யாழ்ப்பாணத்திலிருந்து ஒண்டாய்த்தான் ஜெர்மனிக்குப் போனனாங்கள்."

தன்னை அறிமுகஞ்செய்த சுகந்தன் கடிதமொன்றையும் பார்சல் ஒன்றையும் இருபத்தைந்து லட்சம் காசுக் கட்டொன்று அடங்கிய பெரிய என்விலொப் ஒன்றையும் சந்திராவிடம் கொடுக்க, அவைகளை அந்த விறாந்தையின் மூலையிலிருந்த மேசையொன்றில் வைத்துவிட்டுத் திரும்பினாள் வந்தவனோடு கதைப்பதற்கு. அதற்குள் அவன் தொடங்கினான்.

"அம்மா சின்ன என்விலப்புக்குள்ளை ஜதுசன் தந்த கடிதம். பார்சலுக்குள்ளை கூறைச்சாறியும் வேறை உடுப்புக்களும். பெரிய என்விலொப்புக்குள்ளை இருபத்தைஞ்சு லட்சம் இலங்கைக் காசு. ஜேர்மன் காசு யூரோவை நேற்றுத்தான் மாத்தினனான். பதினைஞ்சைச் சீதனமாய்க் குடுத்திட்டுப் பத்தை உங்கடை சிலவுக்கு எடுக்கட்டாம். மற்றது நான் தந்ததெல்லாம் சரியோண்டு பாருங்கோ. ஜதுசன்ரை கடிதத்திலை எல்லாம் எழுதியிருக்கு."

"நீங்கள் என்ரை பிள்ளையின்ரை நெருங்கின சினேகிதன். பிழைவிட மாட்டியள். எல்லாம் சரியாயிருக்கும். பாக்கத்தேவையில்லை. அது சரி தம்பி... என்ரை பிள்ளையின்ரை சுகத்தைப்பற்றி..." "இப்ப ஓரளவு சுகம். காலிலை இப்ப பிரச்சினையில்லை. கைதான் எழுதிறது கஸ்ரம். போனமுறை உங்களுக்கெழுதின கடிதம் அவன் சொல்லச் சொல்ல நான்தான் எழுதினனான். இனிக் கையும் சுகம் வந்திடும் கவலைப்படாதைங்கோ. இன்னும் ரண்டு வீட்டை நான் போகவேணும் சொந்தக்காறற்ரை வீடு. நான் போட்டு வாறன்."

"சோடா குடிச்சிட்டுப் போங்கோ தம்பி"

"மூண்டு கிழமை ஊரிலை நிப்பன். ஜெர்மனிக்குப் போறதுக்கிடையிலை ஒருக்கா வரவேணும். வந்து குடிப்பம்"

இரண்டு மாதங்கள் ஓடிப் பறந்தன. ஜானகியின் திருமணம், பிரச்சனையில்லாமல் நடந்து முடிந்தது. ஜதுசன் கலந்து கொள்ளாதது சந்திராவுக்கும் ஜானகிக்கும் சரியான கவலை. அவர்களுக்கு மட்டுமல்ல மாப்பிளை வீட்டாருக்குந்தான். கடவுளுக்கு எது விருப்பமோ அதுதான் நடக்குமென்று தத்தம் மனதை ஆறுதல்ப்படுத்திக் கொண்டார்கள் அத்தனை பேரும்.

மூன்று மாதங்கள் சந்திராவின் சங்கானை வீட்டில் வாழ்ந்த புதுத்தம்பதிகள் மூன்றாம் மாத முடிவில் மாப்பிள்ளையின் நல்லூர் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். சந்திராவுக்கு மகளில்லாத தனிமையும் கவலையும். பக்கத்துவீட்டு ஒன்றுவிட்ட அண்ணனும் அவரது மனைவியும் அவளுக்குத் துணையாயிருந்ததால் அவளது தனிமையும் கவலையும் ஓரளவு தணிந்திருந்தது. இருந்தாலும்

ஜானகியைப் பற்றி அடிக்கடி கதைத்துக் கொள்வாள்.

ஜானகியின் வயிற்றில்த் தரித்த கரு ஒன்பதாவது மாத வளர்ச்சியை எட்டிக் கொண்டிருந்தது. பிரசவத்தின் பின்னும் தனது தாய் வீட்டில்த்தான் ஜானகி தங்கவேண்டுமென்று, ஜானகியின் கணவன் ஜெயக்குமார் உறுதிபடக் கூறியதால், யாழ்/பொது வைத்தியசாலையில்ப் பிரசவத்தை முடித்துக் கொண்டு நல்லூருக்கு வந்துவிட்டாள் ஜானகி.

மாமியார் சந்திரா தனித்தவர். அவளுக்கு வேலைப்பழு இருக்கக்கூடாதென்ற நல்ல நோக்கத்தில்த் தான், அப்படியானதொரு முடிவை, ஜெயக்குமார் எடுக்கவேண்டி வந்ததே தவிர, மாமியாரோடு முரண்பாடு கொண்டல்ல. ஜானகிக்குக் குழந்தை பிறந்த மூன்றாவது மாதம் சந்திராவின் கையிலொரு கடிதம்.

"அன்பின் அன்ரி,

மூண்டு கிழமை ஊரில் நிப்பன். இடையிலை ஒருக்கால் வந்து உங்களிட்டை ரீ குடிப்பன் எண்டு சொல்லிப் போட்டு வந்த எனக்கு நேரங் கிடைக்கேல்லை வந்து உங்களிட்டை ரீ குடிக்க. மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இப்ப ஜேர்மனியிலை நிக்கிறன். என்னைப் பற்றி நீங்களும் அறிய வேணுமெண்டதுக்காகத் தான் இதை உங்களுக்கு எழுதிறன்.

நான் திருமணமாகி ஒரு வருஷமாச்சு. டென்மார்க்கிலையிருக்கிற ஒரு தமிழ்க் குடும்பத்திலை பெண் எடுத்தனான். இப்ப, ஜெர்மனியிலை வாடகை வீடொண்டிலை குடியிருக்கிறன். என்ரை மிக நெருங்கின சிநேகிதனொருத்தனும் என்ரை வீட்டிலையிருந்தவன். முதன்முதல் நான் ஜெர்மனிக்குப் போகேக்கை அவனும் என்னோடை வந்தவன். ஒண்டாய்ப் போனது மட்டுமில்லை, ஜெர்மன் கெம்பனி ஒண்டிலை ரெண்டு பேரும் ஒருமிக்க வேலை செய்யிற வாய்ப்பும் கிடைச்சுது. அண்டையிலிருந்து ரெண்டு பேரும் நல்ல சிநேகிதராய் வந்திட்டம். என்னிலை அவனுக்கு அளவு கடந்த அன்பு. அவன் திருமணமாகாதவன். அவனிலை எனக்கும் அளவு கடந்த அன்பு. அதுக்காகத் தான் என்ரை வீட்டிலை ஒரு அறையிலை அவனைத் தங்க வைச்சன்.

ஆனால் நடந்தது? நான் வீட்டிலையில்லாத நேரங்களிலை என்ரை மனுசியோடை கள்ளக் காதலிலை ஈடுபட்டிருக்கிறான். எனக்குத் தெரியாது. அவையளின்ரை கள்ளக்காதல் முத்தினதும் ரெண்டு பேரும் பிரான்சுக்கு ஓடியிட்டினம். பிரான்சிலையிருக்கிற என்ரை சிநேகிதன் மூலந்தான் இந்த ரெண்டு பேரும் பிரான்சிலையிருக்கினம் எண்ட விசயம் எனக்கு எட்டினது. ஆத்திரப்பட்டன். ஆத்திரத்தை என்னாலை அடக்க முடியேல்லை. என்ரை பிரான்ஸ் நண்பனுக்குத் தெரிஞ்ச ஒரு கொலையாளி மூலம் என்ரை எதிரியை- எனக்குத் துரோகம் பண்ணினவனைக் கொல்லுவிச்சன் - சடலத்தை எரிச்சுச் சாம்பலாக்குவிச்சன்.

அந்தத் துரோகி என்னோடையிருந்த காலத்திலை உழைச்சு மிச்சம் பிடிச்ச காசைக்கூட என்னட்டைத் தான் தந்தவன் சகோதரிக்குச் சீதனக் காசு சேர்க்க வேணுமெண்டு. பிறகு அதை வாங்கிப்போட்டான் தனக்குத் தேவையெண்டு. அதுக்கிடையிலை அவனுக்கு வந்த கோதாரி வியாதியாலை சீதனக் காசையும் சகோதரியையும் மறந்து பிரான்சுக்கு ஓடினான். கள்ளக்

காதலின்ரை முடிவு மரணம். அவன்ரை மரணம் எனக்குப் பெரிய சந்தோஷம். அவனை நான் கொலை செய்விச்சதுக்குப் பிரயாச் சித்தமாக போன மாசம் யாழ்ப்பாணத்துக்குப் போய் அவன்ரை தாயிட்டை இருபத்தைஞ்சு லட்சம் காசு குடுத்தன். அதோடை ஒரு சோடிப் பவுண் காப்பு - சங்கிலியொண்டு ஒரு கூறைச் சேலை. உங்கடை மகன் தந்ததெண்டு சொல்லித்தான் குடுத்தன். ஆனால் அதெல்லாம் என்ரை காசு. அதையெல்லாம் நான் குடுத்திருக்காட்டி அவன்ரை சகோதரி எண்டைக்கும் கன்னிகழிக்காதவளாய்த்தான் இருந்திருப் பாள். இந்தப் பெண் வேறை யாருமில்லை அன்ரி. உங்கடை மகள் ஜானகி தான். இப்ப உங்களுக்குத் தெரியும் என்ரை மனுசியோடை கள்ளக்காதல் கொண்டு அவளோடை பிரான்சுக்கு ஓடினவன் உங்கடை மகன் ஜதுசன் தானென்று. என்ரை மனுசியை என்னட்டையிருந்து பிரிச்ச ஒரு நம்பிக்கைத் துரோகி உங்கடை மகன். அவனுக்கு நான் குடுத்த தண்டனை மரணம். அது பாவத்தின் சம்பளம். அவனை நான் கொல்லுவிச்ச பிறகுதான் ஜதுசன் கால் சறுக்கிக் கீழை விழுந்து ஆஸ்பத்திரியிலை இருக்கிறான் - கை கால் வழங்காது எண்டொரு பொய்யைச் சொல்லி உங்களுக்கு ஒரு கடிதம் போட்டடன். அது, நான் யாழ்ப்பாணம் வாறத்துக்கு முதல். அந்தச் சுகந்தன் நான் தான்.

உங்கடை மகன் ஜதுசனைக் கொல்லுவிச்ச குற்றத்துக்காக நீங்கள் என்னைச் சட்டத்தின் முன் நிறுத்துங்கள். குற்றத்தை ஒப்புக் கொள்ளுறன். நானே சாட்சி. வேறை ஒரு சாட்சியும் தேவையில்லை. ஆனால் ஒண்டு, சுகந்தன் சரியாகப் பாதிக்கப்பட்டவன்-அதுவும் என்ரை பிள்ளை ஜதுசனால் எண்டு நீதிபதிக்கு நீங்கள் சொல்லி விடுங்கள். நீதி, நேர்மை, உண்மையுள்ள ஒரு தாயின்ரை கடமையெண்டு நினைச்சு அதைச் சொல்லுங்கள். அப்பிடிச் சொன்னால் என்ரை ஆத்மா நிம்மதியடையும்."

சுகந்தனால் எழுதப் பெற்ற இக்கடிதம் சந்திராவைக் குளறியழ வைக்க வில்லை. அடுத்த வீட்டுக்குந் தெரியாமல், தனக்குள்ளாகவே அழுது கொட் டினாள். சொல்ல முடியாத கவலையும், வேதனையும் அவளது உள்ளத்தை நிரப்பிக்கொண்டிருந்தன. ஜதுசனின் செயல்ப்பாடு ஜானகிக்குத் தெரியக் கூடாதென்பதும் அவளின் தீர்க்கமான முடிவு. வீட்டு மூலையொன்றில் எரிந்துகொண்டிருக்கும் குப்பைக்குள்க் குப்பையாக அவளால் எறியப்பட்ட அக்கடிதம் சாம்பராகிக் கொண்டிருந்தது.

"என்ரை பிள்ளை நல்லவன் நல்லவனெண்டு ஊரெல்லாம் சொல்லித் திரிஞ்சன். இப்ப...? அவனை என்னெண்டு நான் சொல்றது" என்று மனதுக் குள்ச் சொல்லிச் சொல்லி, நாளாந்தம் அழும் அவளது கண்கள், குடிகாரனின் கண்கள் போலச் சிவந்து கொண்டே வருகின்றன.

மனித மனத்தை, அந்த மனத்திலிருந்து ஊற்றெடுக்கும் உணர்ச்சிகளைச் சீராக்கிச் செம்மைப்படுத்தும் சிறப்பாற்றல் கலை இலக்கியத்துக்கு உண்டு என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கலை இலக்கியப் பணிகளிற் கர்ம சிரத்தையுடன் ஈடுபட்டு வருபவர் முதுபெரும் கலைஞரும் எழுத்தாளருமான நவாலியூர் நா.செல்லத்துரை(நவாலியூரான்).

பெரும்பாலான கதைகள் நமக்கு நன்கு பரிச்சயமான யாழ்ப்பாணச் சூழலில், நாம் அடிக்கடி சந்திக்கின்ற சாதாரண மக்களைக் கதை மாந்தர்களாகக் கொண்டவை. இங்குள்ள ஏழைகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரச பணியாளர்கள் போன்றவர்களுடன் நன்கு ஊடாடி அவர்களிடம் காணப்படுகின்ற அன்பு, இரக்கம், ஒற்றுமை, உதவி செய்யும் போக்கு போன்ற நல்லகுணங்களையும் கோபம், வெறுப்பு, நன்றி மறத்தல் போன்ற குறைகளையும் அவற்றைப் பிரதி பலிக்கும் பேச்சு, நடத்தை முதலியவற்றையும் நன்கு அவதானித்து, ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட இலக்கியக் கொள்கைக்கு இசைவாகப் பாத்திரங்களை வார்த்து இந்தக் கதைகளை ஆக்கியுள்ளார் ஆசிரியர்.

**சி.சிவசரவணபவன் (சிற்பி)**